www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 10 | ஓகஸ்ட் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 60

# இடைக்கால நிர்வாக அமைப்பு இழுத்தடிக்கப்படுவது ஏன்?



வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்படுவது இன்றைய யதார்த்தமும் தேவையுமாகும். சிதைந்து சின்னாபின்னப்படுத்தப்பட்டு அழிவுகளே எங்கும் காணப்படும் அப்பிரதேசங்கள் புனரமைக்கப்படல் வேண்டும். புனர்வாழ்வு மீள்குடியேற்றம் இயல்பு நிலை தோன்ற வேண்டும். கடந்த பதினேழு மாதகால புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை. இக் காலப்பகுதியில் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளும் அந்நிய ஆதிக்கவாதிகளும் அடைந்த நன்மைகளுடன் ஒப்பிடும்போது மக்கள் பெற்றுக் கொண்டவை அற்பமானவையேயாகும்.

இந்நிலையில் வடக்கு கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு மக்களின் எதிர்பார்ப்பாகும். அத்தகைய கட்டமைப்பு ஜனநாயகப் பூர்வமானதாகவும் அனைத்து மக்களுக்கும் பாகுபாடு புறக்கணிப்பு அற்ற வகையில் பயன்தரக் கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

ஆனால் அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தைத் தோற்றுவிப்பதில் பெரும் தயக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு புறத்தில் டோக்கியோவில் உதவி வழங்கும் நாடுகள் வழங்கிய நாற்பத்தையாயிரம் கோடி ரூபா உதவித் தொகையைப் பெறுவதற்கு ஏதாவது செய்து காட்ட வேண்டியுள்ளது. மறுபுறம் பேரினவாத நிலைப்பாட்டிலிருந்து இறங்கிக் கொள்ள முடியாத நிலையில் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு விபரீதமாக அமைந்துவிடுமோ என அஞ்சுகிறது. அதேவேளை ஜனாதிபதி எழுப்பி வரும் பிரச்சினைகளும் ஜே.வி.பி. சிஹல உறுமய போன்ற பேரினவாதிகள்



செய்து வரும் பிரச்சாரமும் மேலோங்கி விடுமோ என்ற அச்சமும் அரசாங்கத்தைத் திணற வைக்கிறது. ஆதலால் இடைக்கால நிர்வாகத்தை தோற்றுவித்து நடைமுறைக்கு கொண்டு வருவதில் ஒரு வகை இழுத்தடிப்பு நிலைக்கு ஊடாகச் செல்வதையே அரசாங்கம் கடைப்பிடிக்கிறது என்றே கூற வேண்டும்.

அண்மையில் அரசாங்கம் நான்கு பக்கங்கள் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பிற்கான நகல் வரைவினை புலிகள் இயக்கத்திற்கு அனுப்பி வைத்தது. அதனைப் புலிகள் எடுத்த எடுப்பில் நிராகரித்துவிடக் கூடாது என்ற வேண்டுதலை அரசாங்கம் குறிப்பிட்டிருந்த அதேவேளை இந்த வரைபு முழுமையானதல்லவென்றும் பேச்சுவார்த்தை மூலம் விரிவாக்க முடியும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

அத்துடன் அவசரப் படாது மிக ஆறுதலாகப் பரிசீலித்து அது பற்றிய பேச்சுவார்த்தைக்கு தயாராகுமாறும் புலிகளிடம் ஜி.எல்.பீரிஸ் கேட்டுக் கொண்டார். மேற்படி அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பிற்கான நகல்வரைவைப் பெற்றுக் கொண்ட புலிகள் இயக்கம் அதனைப் பரிசீலிக்க உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற இருப்பதாக செய்திகள் கூறுகின்றன. அத்துடன் வெளிநாட்டில் முக்கிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் சந்தித்து பரிசீலிக்க இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இவற்றையெல்லாம் அவதானிக்கும் போது இடைக்கால நிர்வாகம் என்பது விவாதங்கள் நடுவே நீண்ட நாட்களுக்கு இழுத்துச் செல்லப்பட இருக்கிறது என்ற முடிவிற்கே வரவேண்டியுள்ளது. ஏற்கனவே இடம் பெற்று வந்த பேச்சுவார்த்தை ஆறாவது சுட்டத்துடன் பேச்சுமூச்சு இன்றிக் கிடக்கிறது. அதற்கிடையில் இடைக்கால நிர்வாகத்திற்கான பேச்சு வார்த்தை எனக் கூறி பேச்சுவார்த் தைக்குள் பேச்சுவார்த்தை இடம்பெற உள்ளது.

உண்மையாகவே ரணில் தலைமையிலான அரசாங்கம் இன்றைய சூழல் இப்படியே தொடரப்பட வேண்டும் என்பதிலேயே அக்கறை காட்டுகிறது. அதாவது யுத்தமும் இல்லை முழுமையான சமாதானமும் இல்லை என்பது அவர்களுக்குப் போதுமானதாகும். இந்நிலைக்கு ஊடாக அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை காலத்தை இழுத்துச் சென்று அதில் வெற்றிபெறும் நோக்குடனேயே ஆளும் தரப்பு விடயங்களை நகர்த்தி வருகின்றது. வடக்கு கிழக்கும் மக்களும் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. முழு நாடும் எவர் கைகளுக்குப் போனாலும் கவலை இல்லை என்ற நிலைதான் அரசின் நிலையாக உள்ளது.

இவ்வாறு அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலைக் குறிவைத்து நிற்க பொதுசன முன்னணியும் ஜே.வி.பி.யும் விரைவான ஒரு பாராளுமன்றத் தேர்தலை எதிர்பார்க்கின்றனர். அதற்கான வழியில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றனர். பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற இடைக்கால நிர்வாகம் "புலிகளுக்கான தமிழீழம்" என ஜே.வி.பி.யினர் ஓலமிட்டும் வருகின்றனர்.

இத்தகைய சூழலில் அமெரிக்கா பின்னிருந்து முடுக்கி விட்டு தனது ஆதிக்க ஊடுருவல்களுக்கான செயல்களில் இறங்கி நிற்கிறது. அரசாங்கத்தின் அதி முக்கிய ஆலோசகராக அமெரிக்கா இருந்தும் வருகின்றது. அமைச்சர் மிலிந்த மொறகொட பகலில் இலங்கையிலும் இரவில் அமெரிக்காவிலும் என்ற அளவுக்கு வெள்ளை மாளிகை யின் செல்லப்பிள்ளையாகச் செயற்படு கிறார். அதேவேளை இந்தியா மிக உன்னிப்பாக இருந்து சமாதான சூழலைக் குழப்புவதில் தனது மறை கரங்களைப்பயன்படுத்துகிறது. ஜே.வி.பி.யையும் பொதுஜன முன்னணிக்

தொடர்ச்சி 12ம் பக்கம்..

## பேச்சுவார்த்தைக்குள் பேச்சுவார்த்தை இஸ்ரேலில் இருந்து ஆயுதக் கொள்வனவு!

## பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வருவது மலையக மக்களின் போராட்ட வெற்றியேயாகும்.

1948ம் ஆண்டு நாடற்றவர்களாக்கப்பட்ட மலையகத்தமிழ் மக்களின் பிரஜா உரிமைப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணும் வகையில் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு திருத்தச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியினால் இந்தியாவிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்ட தமிழர்களின் பிரஜா உரிமையை 1948ஆம் ஆண்டு ஐ.தே. கட்சி சட்டம் கொண்டு வந்து பறித்தது. 1949ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தின் மூலம் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களுக்கு பிரஜாவுரிமை கிடைத்தது.

1964ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 525,000 பேர் ஏறக்குறைய கட்டாயத்தின் பேரில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். அவ்வொப்பந்தத்தின்படி 375,000 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை கிடைத்தது. 1983ஆம் ஆண்டு யூலை இனவன்முறைகளை அடுத்து இந்திய கப்பல் சேவை நிறுத்தப்பட்டதாலும், இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு சென்றதனாலும் இந்திய கடவுச்சீட்டுகளை பெற்ற நிலையில் இந்தியாவுக்கு செல்வதற்காக இருந்தோர் இந்தியாவிற்கு செல்ல முடியவில்லை. அவர்களை இந்தியா ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் அறிவிக்கப் பட்டிருந்தது.

மேலும் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தினால் தீர்மானிக்கப்படாதிருந்த 96,000 பேருக்கு அதாவது நாடற்றவர்களாக இருந்தோருக்கு 1986ஆம் ஆண்டு சட்டத்தினால் இலங்கை பிரஜாவுரிமை வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு சட்டத்தினால் பொதுப்பிரகடனத்தின் மூலம் மேற்படி நாடற்றவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படும் என்று சட்டம் ஆக்கப்பட்டது.

ஆனால் இந்திய கடவுச்சீட்டுப் பெற்றோரின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. இப்போது அவர்களுக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் பாராளுமன்றத்திற்கு சட்ட மூலம் கொண்டுவரப்படவிருக்கிறதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப் பட்டுள்ளன.


கடந்த 55 வருடங்களாக நடைபெற்ற போராட்டங்களின் விளைவாகவே பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்படவுள்ளது. சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 525000 பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது எனினும் இங்கு நாடற்றவர்களாக இருந்த எல்லோருக்கும் தீர்வு காணும் வகையில் சட்டம்ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தது.

அவ்வாறான அழுத்தங்களின் காரணமாக இந்திய கடவுச்சீட்டு பெற்ற நிலையில் இங்கு வாழ்ந்து வருபவர்களுக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. பத்திரிகைகளில் வெளிவந்துள்ள விபரங்களின்படி அச்சட்டமூலத்தின் அடிப்படையில் பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு இறுதி தீர்வு காணப்படலாம் என்று நம்பலாம். அச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் எவ்வித மாற்றங்களும் செய்யப்படாமல். பிரச்சினைக்கு இறுதி தீர்வு காணப்பட வேண்டும்.

இச்சட்டமூலத்தினால் மலையகத் தமிழ்த் தேசிய இனத்தின் நாட்டற்ற நிலை சட்டரீதியாக மாற்றப்படுவது வரவேற்கத்தக்கதே. ஆனால் அவர்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்திசெய்து அவர்களுக்கு எதிரான இன அடக்குமுறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான சுயாட்சியையும் சமத்துவத்தையும் வழங்குவதை தவிர்க்கும் நோக்கில் ஒரு திசை திருப்பலாக அச்சட்ட மூலம் கொண்டுவரப்படலாகாது என்பது கவனத்திற்குரியதாகும்.

## 1983 இருண்ட யூலை நாட்கள்!

- பேரினவாத ஆளும் வர்க்க கொடூரத்தை வெளிப்படுத்தி தமிழர்கள் மீது கொலை, கொள்ளை, தீவைப்பை நடாத்தியது.
- சிங்கள-தமிழ் மக்களிடையே பகைமையைத் தீயை வளரச் செய்தது.
- தமிழ் இயக்கங்களை ஆயுதம் ஏந்த வைத்து ஒரு லட்சம் தமிழ் மக்கள்-போராளிகளின் அழிவுக்கு வித்திட்டது.
- தேசிய இனப்பிரச்சினையை முழுமையான யுத்தமாக்கி தாராளமயம்-தனியார் மயத்தை கொண்டுவந்து நிலை நிறுத்தியது.
- இந்திய மேலாதிக்க தலையீட்டிற்கு வழி திறந்து இன்றைய அமெரிக்க, யப்பானிய, மேற்குலகத் தலையீடு வரை வளர வழி வகுத்தது.



படிப்பகம்

www.padippakam.com



# மாணவர் அனுமதிக்கு பணம் கறக்கும் அதிபர்கள்

யாழ் மாவட்டத்தில் பிரபல்யமான பாடசாலைகளில் மாணவர்களை அனுமதித்துக் கொள்வதற்கு பெருந்தொகையான பணத்தினை அப்பாடசாலைகளின் அதிபர்கள் அறவிட்டுக் கொள்வது வேதனைக்குரியதாக இருக்கின்றது. C.W.W.கன்னங்கரா வினால் இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் பாடப் புத்தகம், சீருடை என்பன இலவசமாக வழங்கப்பட்டு நாட்டிலுள்ள அனைத்துச் சிறார்களும் பாகுபாடின்றி கல்வியைப் பெற வாய்ப்புகள் வழங்கப்பட்டது. ஆனால் அந்த நிலை இன்னும் இந்த நாட்டில் முழுமையாக நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை.

வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் கற்பதற்கான பாடசாலைகளாகவே யாழ் மாவட்டத்தின் பிரபல்யமான பாடசாலைகள் விளங்குகின்றன. நடுத்தர வருமான மட்டத்தினரின் பிள்ளைகளோ, குறைந்த வருமான மட்டத்தினரின் பிள்ளைகளோ அப்பாடசாலைகளின் படிகளைக் கூட மிதிக்க முடியாத அளவுக்கு அப்பாடசாலைகளின் நிர்வாகத்தினர் பெருமளவு பணத்தினை அறவிட்டுக் கொள்கின்றனர்.

யாழ் இந்துக் கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி என்பன தேசிய பாடசாலைகளாகும். இவை மத்திய அரசின் நேரடியான கண்காணிப்பின் கீழ் பராமரிக்கப்பட்டு வருவன. இவற்றுக்குத் தேவையான பௌதீக வளங்கள் மற்றும் ஆளணி வளங்கள் யாவும் பெருமெடுப்பில் மத்திய அரசினால் நேரடியாக வழங்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் ஏன் இந்த பாடசாலை நிர்வாகங்கள் பெற்றோர்களிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பெருந்தொகைப் பணம் அறவிட்டுக் கொள்கின்றன. அரசின் இலவசக் கல்வித் திட்டத்துக்கு என்ன நடந்தது? பணம் கறக்கும் இப்பாடசாலைகளின் நிர்வாகத்தினரை தொடர்ந்தும் இவ்வாறு அனுமதிக்க முடியுமா? தேசியப் பாடசாலைகள் யாவற்றிலும் கல்வி கற்பதற்கு தகுதியுடையவர்கள், உயர் அந்தஸ்த்தில் உள்ள மேட்டுக்குடி வசதி வாய்ப்புப் பெற்றவர்களின் பிள்ளைகளாகத்தான் இருக்க வேண்டும் என அரசு கூறுகின்றதா? அதிபர்களிடம் இது சம்பந்தமாக கேட்டால் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் மீது பழியைப் போட்டு தாங்கள் நல்ல பிள்ளைகளாட்டம் நழுவி விடுகின்றனர்.

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி போன்ற தனியார் பாடசாலைகள் மாணவர் அனுமதிக்கெனப் பணத்தினை அறவிட்டுக் கொள்வதைக் காண முடிகின்றது. ஆனல் மேற்கூறிய அரச தேசிய பாடசாலைகள் பெருந்தொகையான பணத்தினை அறவிட்டுக் கொள்வதை எந்த வகையில் ஏற்றுக் கொள்ள முடியும்?

மத்திய, மாகாணக் கல்வி அமைச்சுக்களின் சுற்று நிருபங்கள், மாணவர் அனுமதிக்கு எந்தவிதமான நிதியையும் அறவிடக்கூடாது எனக் கூறினாலும் பல அதிபர்கள் சுற்று நிருபத்துக்குப் புறம்பாக நிதி அறவிடுவதாக புகார் கிடைத்துள்ளது என கல்வியமைச்சு, ஊடகங்கள் ஊடாக கூறி வந்த போதிலும் அவர்கள் எதையுமே பொருட்படுத்தாது பண அறவீட்டினை மேற்கொண்டே வருகின்றனர். சுற்று நிருபத்தை தூக்கி மூலையில் முடக்கி வைத்துவிட்டு அறவிடப்படும் பணம் யார் யாரின் கைகளிலும் பைகளிலும் போகிறதோ தெரியவில்லை. இது சம்பந்தமாக வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் பல புகார்கள் செய்யப் பட்ட போதிலும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேற்படி பாடசாலைகள் ஒரு மாணவரின் அனுமதிக்கு ரூபா. 10.000 தொடக்கம் ரூபா.20.000 வரையில் அறவீடு செய்கின்றன. இதனால் என் போன்ற நடுத்தர, கீழ்மட்ட வருமானமுடையவர்களின் பிள்ளைகள் இப்பாடசாலைகளின் வாயிற் பக்கமே தலை வைக்க முடியாதவர்களாக எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விட்டென்ன பயன்? என்ற முதுமொழிக்கேற்ப கிராமப்புற பாடசாலை களிலேயே தமது கல்வியைத் தொடர வேண்டியவர்களாக உள்ளனர். இதனால் ஆற்றல் மிக்க சாதாரண மாணவர்களின் எதிர்காலம் மழுங்கடிக்கப்படுகின்றது.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை தரம் 06ல் மேற்படி நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதிப்பதற்குக் கூட இவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தினை அறவிட்டுக் கொள்கின்றனர். அரச பணியில் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் அரச கொடுப்பனவும் கிடையாது. அவர்களின் சம்பளமும் வாழ்க்கைச் செலவை ஈடுகட்டப் போதாது. இந்த நிலையில் தமது பிள்ளைகளை நகர்ப்புற பிரபல்யமான பாடசாலைகளில் சேர்ப்பதற்கான பணத்தினை செலுத்த முடியாத நிலையில் திறமையான தம் பிள்ளைகளை கிராமப்புறங்களில் உள்ள வளங்கள் அற்ற பாடசாலைகளிலேயே கல்வி கற்க வைத்துள்ளனர். அதே நேரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத வசதி வாய்ப்புப் பெற்றவர்களின் பிள்ளைகள் நகர்ப்புறப் பாடசாலைகளில் படிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். இதனால் பெற்றோர் மனமுடைந்து போகவும் மாணவர்கள் பாதிப்படையவுஞ் செய்கின்றனர்.

எனவே தயவுசெய்து கல்வித்துறையில் உள்ள உயரதிகாரிகள் இலவசக் கல்விக்கு அர்த்தம் கொடுக்க முன்வருவார்களா? இந்த விடயத்தில் விழிப்பாக இருந்து கல்வித்துறையில் சம வாய்ப்பை வழங்க ஆவண செய்ய வேண்டும் என மிக வினயமாக வேண்டுகின்றேன். இது என்னைப் போன்ற பெற்றோர்களின் அங்கலாய்ப்பாகும். ஆனால் மேற்கூறியவற்றின் மூலம் ஒன்று மட்டும் தெளிவாகிறது கல்வியானது வர்க்கச் சார்பானதாகவே இருந்து வருகின்றது என்பதுதான்.

கா. கபிலன்
யாழ்ப்பாணம்

# வர்த்தக சிப்பந்திகளின் அவல நிலை

வடபுலத்து வர்த்தக ஊழியர்கள் என்றுமில்லாத வேலைப் பழுவினால், தங்களுக்குரிய முழுமையான தொழிலாளர் நலன்களை முற்றாக இழந்து வருகின்றனர். தங்கள் உரிமைகளை ஜனநாயக வரைவுகளின்படி பெறுவதற்கு தன்னும் எந்தவித தாபன அமைப்புகள் முன்வராமல் இருப்பதை அறிந்து நாம வேதனை அடையாமல் இருக்க முடியாது.

விசேடமாக நகர வர்த்தக நிலையங்களில் கடமை புரியும் சிப்பந்திகள் அவர்களின் ஊதிய வளர்ச்சிக் கொடுப்பனவுகள், நிலையங்களில் கடமையாற்றும் நேரசூசிகள், கட்டுப்பாடற்ற அதிகநேர வேலை வாங்குதல், இப்படியான மனிதாபிமானமற்ற செயல்களினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். முன்பு தொழிற் சங்க அமைப்புகள், ஓரளவ இவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப் பதற்கு முன்னின்று உதவின. இன்று இந்த அமைப்புகள் இல்லாத நிலை தொடர்கிறது. அரசியல் மாற்றங் களினால் யாழ்ப்பாண தொழிற்சங்க நடவடிக்கைகள் பின்புறம் தள்ளப்பட்டு இருக்கின்றன. இச் சூழலில் வர்த்தகச் சிப்பந்திகளைப் பொறுத்தளவில் அவர்களின் மனிதாபிமான கோரிக்கை கள் முற்று முழுதாக புறக்கணிக்கப் படுகின்றன.

தொழிலாளர்களும் தங்களது உரிமைகளைப் பெறுவதற்குரிய மானசீகமான போராட்ட உணர்வு அவர்களிடம் காணக் கிடைப்பது மிக அரிதாகவே இருக்கின்றது.

வர்த்தகச் சிப்பந்திகளின் நலன் கருதி தங்களது மனிதாபிமான பங்களிப்பை தொழில் இலாகாவினர் வழங்குமானால், அந்த உற்சாகத்துடன் தொழிலாளர்கள் தங்கள் நலன்களை உறுதியாக்க முன்வருவதற்கு முயற்சி செய்யலாம். முன்பு போல் தொழில் இலாகா உத்தியோகத்தர்கள் களங்களுக்குச் சென்று குறைபாடுகளை அறிந்து கொள்வது குறைவு. இந்நிலையினால் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் யாழ். வர்த்தகச் சிப்பந்திகளே. ஆக்கபூர்வமான எழுச்சி உணர்வுகளையாகுதல் முன் வைக்க, தொழிலாளர்கள் ஐக்கியம் மிக மிக அவசியம். தொழில் வாய்ப்பு இன்மையினால், தொழிலாளர்கள் எதற்கும் ஒப்புக்கொண்டு-மற்ற ஏனைய மனிதாபிமான மனிதநேய உரிமைகளை விட்டுக் கொடுப்பதனால் இழப்பு களைத்தான் அதிகபட்சமாக சந்திக்கிறார்கள் எனபது உண்மை. எல்லாவற்றிற்கும் மேலாக கால தேச அரசியல் மாற்றங்களினால் ஏற்படுகின்ற விளைவுகளும் தவிர்க்க முடியாமல் இருப்பதுவும் ஒரு காரணமே. ஆதலால் தாங்கள் அனுபவிக்கும் கடுமையான பிரச்சினைகளுக்கு வர்த்தகச் சிப்பந்திகள் ஐக்கியப்பட்டு தொழிற்சங்க அமைப்பு முறை மூலம் கோரிக்கைகளை முன்வைக்க முன்வரல் வேண்டும்.

- நவயுகன் -

# வவுனியா கிராமப் பாடசாலைகளில் கல்விச் சீர்குலைவு

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் வன்னி பா.உ. இருவரின் அதிகாரத் துஷ்பிரயோகத்தால் கிராமப்புற ஆசிரியர்கள் நகரப்புற பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்கள்.

ஆசிரியர்களின் நியமனக் கடிதத்தில் நியமனம் பெறும் பாடசாலையில் 4 வருடம் கட்டாயம் சேவையாற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் வலயக் கல்விப் பணிப்பாளர் பா.உ. மாரின் சொற்படி நடக்கும் பொம்மையாக இருந்து இலுப்பைக்குளம், முதலியார் குளம், வீரபுரம், பூவரசன் குளம், கணேசபுரம், சிதம்பரபுரம், சுந்தரபுரம், குருக்கள் புதுக்குளம் போன்ற பாடசாலைகளின் கல்வியை சீரழித்து வருகின்றார் என்றே பேசப்படுகிறது. திருகோணமலையில் உள்ள கல்வி அமைச்சுக்கு இவ்விடயம் தெரியாதா?

வவுனியா தமிழ் ம.ம.வித்தியாலய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படாமல் பா.உ. ஒருவரின் சிபார்சுப்படி செட்டிகுளம் பாடசாலை ஒன்றுக்கு அதிபராக நியமனம் செய்யப் பட்டுள்ளார். இப்பாடசாலைக்கென மாணவர் எவரும் இல்லை. ஒருவருக்கு அதிபர் பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காக வலயக் கல்விப் பணிப்பாளர் இவ்வாறு செயற்பட்டுள்ளார் என்றே அறிய முடிகிறது. வ/த.ம.ம. வித்தியாலயத்தில் விஞ்ஞானம் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறையாக இருக்கும் போது ஒரு விஞ்ஞானப் பட்டதாரியை வீணாக்கியது எப்படி நியாயமாகும். அதிபர் தரம் பெற்றவர்கள் பலர் பாடசாலையில் அதிபர் பதவியின்றி இருக்கும் போது இவ்வாறு முறைகேடாக நடப்பது கல்வி அமைச்சின் செயலாளருக்குத் தெரியாதா? அல்லது புரியாதா?

நகர்ப்புறப் பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் இருக்கும் போது கிராமப்புறத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதை திருகோணமலை கல்வி அமைச்சின் செயலாளர் அங்கீகரிக்கின்றாரா? என வவுனியா மக்கள், மாணவர்கள் கேட்கின்றார்கள்.

பா.கணேசன்
பூவரசன்குளம்

# நாலும் நடக்கும் நற்குணம் உலகிலே

## அசல் தான் அகப்படவில்லை நகல் கூடக் கிடையாதா?

பின்லாடனைப் பிடிக்கும் தனது முயற்சியில் மனந் தளராத அமெரிக்க ஏகாதிபத்தியனின் ஒவ்வொரு முயற்சியும் தோல்வி கண்ட பின்னர், ஏகாதிபத்தியன் தனது இலக்கை மாற்றி சதாம் ஹூஸேனைப் பிடிக்கும் முயற்சியில் மும்முரமானான். ஆனாலும் விக்கிரமாதித்தனுக்குத் தண்ணீர் காட்டிய வேதாளத்தை விட வில்லனாக சதாம் ஹூஸேன் இருப்பதாகவே தெரிகிறது. அந்தச் சோகக் கதையை விடுவோம்.

சதாம் ஹூஸேன் அமெரிக்காவின் அச்சாப் பிள்ளையாக இருந்த காலம் போய் அவர் துட்டப் பிள்ளையாகிய பின்பு சதாம் பற்றிய பல கதைகள் அமெரிக்காவில் பரப்பப்பட்டன. அவற்றுள் ஒன்று சதாம் ஹூஸேனுக்குப் போலிகள் உள்ளதாகவும், பாதுகாப்புத் தேவை காரணமாக அவருக்குப் பதிலாக இப் போலிகள் பொது நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்குபற்றுவதற்கு ஆதாரங்களும் முன்வைக்கப்பட்டன.

இப்போது சதாமைத் தான் பிடிக்க முடியவில்லை. இருந்ததாகச் சொல்லப்படும் போலிகளில் ஒன்று கூடவா அகப்படவில்லை?

## கெட்டிக்காரன் புளுகு அவிழ்ந்தபின்...

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகவும் அவற்றை கண்டுபிடித்து அழிக்கவே போர் என்றும் பிரித்தானிய மக்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் அப்பட்டமான பொய் சொல்லப்பட்டது என்பது இன்று இரண்டு நாடுகளிலும் நிருபணமாகி விட்டது. இதன் விளைவான பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாமல் இரண்டு தலைமைகளும் தடுமாறத் தொடங்கிவிட்டன. என்றாலும் புஷ்ஷின் செல்லப் பிராணியான பிளெயரின் பாடு கொஞ்சம் கூடச் சங்கடமாகி விட்டது. கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்து ஈராக் போரை எதிர்த்து விலகிய அமைச்சர்கள் பிளெயருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிவிட்டனர். இப்போது பிளெயாருக்கு உள்ள இறுதி ஆயுதம் அதிகம் குழப்பினால் அடுத்த தேர்தலில் தோல்வி அடைவோம் என்பது.இதற்கான பதில் பிளெயாரையும் அவரது கட்சி தப்பிப் பிழைக்கலாம் என்பது தான். அதற்கான தைரியமில்லாத ஒரு கட்சி நாடாண்டாலென்ன, காடாண்டாலென்ன!

## சந்திர ஹாஸ்யம்

சிங்காரச் சென்னையில் திருவீற்றிருக்கும் திருவாளர் சந்திரஹாசனின் ஒரே அரசியற் தகுதி அவர் எஸ்.ஜே.பி. செல்வநாயகத்தின் மகன் என்பதுதான். அதைக் கூடக் கேவலப்படுத்துகிற முறையில் அவர் இந்திய அரசாங்கத்தின் எடுபிடியாகவும் நிவாரண நிதிகளின் மீது கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் தனக்கென ஒரு அதிகாரத்தை வைத்துக் கொண்டும் இருப்பதால் அவரது பழைய கூட்டாளிகள் எல்லாருமே அவரை விட்டு ஒதுங்கிவிட்டனர்.

சில வாரங்கள் முன்னர், தமிழகத்திலுள்ள ஈழத்து அகதிகளுக்கு எவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் அவர்களை விடத் தாழ் நிலையிலுள்ள பல இந்திய மக்களை விட அவர்கட்காக இந்திய அரசு நிறையவே செய்வதாகவும், இந்தியாவை விட்டால் வேறெந்த நாட்டிலும் இவ்வளவு சிறப்பான மனப்பான்மையுடன் அகதிகள் நடத்தப்படுவதில்லை என்றும் லண்டன் பி.பி.சி. தமிழோசையிடம் சொன்னார்.

இது எவ்வளவு உண்மை என்று சொல்வது கடினம். பல அகதிகள் வெளி வெளியாகப் பேசவே தயங்குகின்றனர். என்றாலும், சந்திரகாசன் என்ற அகதியை இந்திய அரசு மிக நன்றாகவே கவனித்து வந்துள்ளது என்பது மட்டும் உறுதி.

## சிறையிருந்த செம்மல்கள்

உடதலவின்ன தேர்தல் படுகொலை வழக்கில் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த அமைச்சர் ரத்வத்தையும் அவரது புத்திர பாக்கியங்களும் பிணையில் வெளிவந்துள்ளனர். இது ஒரு சாதாரணக் கொலை வழக்கல்ல. எனவே சந்தேக நபர்கள் வெளியில் விடப்பட்டது வழக்கின் எதிர்காலம் பற்றிய சந்தேகங்களைப் பாதிக்கப்பட்ட தரப்பினர் மனதில் எழுப்பாமல் இராது. அமைச்சர் ரவூ·ப் ஹக்கீம் இதைப் பற்றி எதுவும் பேசவில்லை. ரவூ·ப் ஹக்கீமைப் பொறுத்தவரை இது பழைய கதை. இன்று சிங்களப் பேரினவாதம் பற்றிய கவலைகளை மறைப்பதும் தமிழ்-முஸ்லிம் பகைமையை வளர்த்து அந்த நெருப்பில் குளிர் காய்வதும் தான் அவரது இப்போதைய அரசியல் தேவை.

"இன்னும் எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என்பது நாமக்கல் ராமலிங்கப்பிள்ளையின் பாட்டு. அத்தனை காலம் வரை, கவலைப்பட நமது தமிழ், சிங்கள, முஸ்லிம் தேசியவாதத் தலைவர்கள் என்ன முட்டாள்களா?

"நல்ல தருணமடா இதை நீ நழுவ விடுவாயோ" என்பது தான் பாராளுமன்ற அரசியலின் மந்திர வார்த்தை.

## சிவராமின் சீன வெடி

டி.பி. சிவராம் என்பவர் வீரகேசரிக்கு எழுதத் தொடங்கியதன் மருமம் பற்றி ஐயம் எழுப்பியிருந்தேன். அதற்கு மேலும் இடம் வையாமல் வீரகேசரியின் இப்போதைய போக்குக்கு ஏற்றபடியே அவரும் எழுதி வருகிறார். அமெரிக்காவின் தலையீட்டின் நோக்கத்தைக் கடுமையாகத் தாக்கும் அதேவேளை, இந்தியாவின் நோக்கங்கள் பற்றி எதுவுமே பேசாமல் இருப்பது மட்டுமில்லாமல் சீனா பற்றிய தனது வன்மத்தையும் சகட்டுமேனிக்குத் தனது கற்பனையின் உதவியுடன் கொட்டிக்கொண்டிருக்கிறார். சீனாவுக்கு மாலைதீவில் கடற்தளம் இருப்பதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். சீனாவுக்குக் கப்பற் போக்குவரத்து வசதி இருப்பதற்கும் கடற்றளம் இருப்பதற்கும் பெரிய வேறுபாடு உண்டு. அது சிவராம் அறியாததல்ல.

சீனாவைக் காட்டி இந்தியாவுக்கு ஆதரவு தேடுகிற விளையாட்டு கொஞ்சம் பழசுபட்டுவிட்டது. தமிழ் மக்கள் இந்தியாவைப் பற்றி 1987 முதல் 1989வரை நேரில் அறிந்தும் இன்று அதன் குழப்பும் முயற்சிகளைக் கண்டும் உள்ளனர். சிவராம் தனது இந்திய எசமானர்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்கிறார் என்பது உண்மை. ஆனால் அவரால் எல்லாரையும் எவ்வளவு காலம் ஏமாற்ற முடியும் என்பது இன்னொரு விடயம்.

## கோழைத்தனத்தின் சுவடுகள்

கைலாசபதிக்கு அமெரிக்கத் தூதரகத்தில் செல்வாக்கு இருப்பதாகக் 'காலச் சுவடு' என்ற தமிழக வணிக ஏட்டுக்குத் தான் அளித்த நேர்காணலிற் சொல்லவில்லை என்றும் கைலாசபதிக்கு அமெரிக்கன் சென்றர் எனப்படும் அமைப்பில் செல்வாக்கு இருந்ததாகவே தான் சொன்னதாகவும் யேசுராஜா ஒரு அடி பின்வாங்கியிருக்கிறார். முன்னதற்கோ பின்னதற்கோ ஆதாரம் எதையும் அவர் தன் நேர்காணலிலும் முன்வைக்கவில்லை; தனது மறுப்பிலும் முன்வைக்கவில்லை. முடிந்தால் இனியாவது முன் வைக்கட்டும். வெறும் ஊகங்களை வைத்து ஒரு வெறுப்பு இயக்கத்தைக் கட்டியெழுப்புவது கலை கலைக்காக என்ற கோஷமிட்ட ஒருவருக்கு இன்று கை வந்த கலையாகி விட்டது தான் [illegible]. நேர்மை கெட்ட கோழைத்தனம் உள்ள எவரும் விடுதலை பற்றிப் பேசுவதில் அர்த்தமுண்டா?

www.padippakam.com



# த.கூ. பாராளுமன்ற உறுப்பினர்களின் பணி

தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது அதிக பேச்சு மூச்சு இன்றி இருந்து வருகிறார்கள். புலிகள் இயக்கத்தை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என ஏற்றுக் கொண்டதன் மூலம் இவர்களது வடக்கு கிழக்கு வேளை பளு குறைந்துள்ளதாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறியதைக் கேட்க முடிந்தது. ஒரு காலத்தில் தமிழர் களின் பிரதிநிதிகள் எனப் பவனி வந்த இவர்களை இப்போது யாரும் கணக்கில் கொள்வதில்லை. அண்மையில் யாழ்-பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனிப்பாரற்ற பார்வையாளர்களாக இருந்ததைக் கவனிக்க முடிந்தது. கஜேந்திரகுமார் மட்டுமே உரையாற்றும் வாய்ப்பைப் பெற்றார். இவ்வாறு பெரும்பாலான நிகழ்வுகளில் வெறும் காட்சி தருபவர்களாக மட்டுமே உள்ளனர். இது அவர்களது கடந்தகால அரசியல் நிலைப்பாட்டிற்கு கிடைத்த ஒருவகைத் தண்டனை எனப் பொதுமக்களில் சிலர் பேசிக் கொள்கின்றனர்.

இப்படி இருந்த போதிலும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்ந்த தமது வேலைகள் சிலவற்றை அவ்வப்போது செய்து கொள்கிறார்கள். தம்மவர் சிலருக்கு சமாதான நீதிபதி பதவி முதல் வேறும் அரசாங்க நியமனங்களுக்கு சிபார்சு செய்தல் வரை செய்து கொள்கிறார்கள். பதவி உயர்வு. இடமாற்றம். பழிவாங்கல் போன்றவற்றுக்கு இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உதவுவது அன்றாட வேலையாகி விட்டன. இதனால் சிலர் திருப்திபட பலர் திட்டுத்திட்டென திட்டுகிறார்கள். கல்வித்துறையில் கொழும்பு அமைச்சுக் காரியாலயம் தொட்டு திருகோணமலை வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு பணிமனை வரை இப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கைங்கரியங்களுக்கு குறைவே இல்லை. உயர் அதிகாரிகள் சிலர் இவர்களோடு சேர்ந்து நின்று தாளத் திற்கு ஏற்றவாறு ஆடவே செய்கிறார் கள். எல்லாம் செல்வாக்கின் காரணமாகவே இடம்பெறுகின்றன. சாதாரண அரசாங்க ஊழியர் ஆசிரியர் கள் நிலை தான் பரிதாபத்திற்குரிய தாகும். மக்கள் சேவைக்கே பாராளு மன்ற உறுப்பினர்களே தவிர பாராளு மன்ற உறுப்பினர்களுக்காக மக்கள் அல்ல என்று யாரோ கூறியது காதில் கேட்கிறது.

# அரசியல் யுத்தத்தில் ஜனாதிபதியும் பிரதமரும்

உயர் அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் பாராளுமன்ற முதன்மைபெற்ற பிரதமரும் தத்தமது பதவிகளில் இருந்துகொண்டு ஒருவகை அரசியல் யுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்து அமைச்சர்களை நியமிக்கத் தொடங்கிய காலம் முதல் "வேண்டாப் பெண்டாட்டி கால் பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம்" என்ற ரீதியில் இரு தரப்பில் இருந்தும் பிரச்சினைகள் கிளப்பப்பட்டே வருகின்றன. அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா விவகாரம். உள்நாட்டு அமைச்சருடனான முறுகல். லொத்தர்சபை விவகாரம். புரிந்துணர்வு ஒப்பந்தம். இடைக்கால நிர்வாக நகல் வரைவு போன்ற ஒவ் வொன்றிலும் நாய்கடி பூனை கடி என்ற நிலைதான் தொடர்கிறது. இருதரப்பும் தத்தமது அதிகார இருப்பு எதிர்கால ஆட்சி பிடிப்பு பற்றிய அவா அக்கறை களில் இருந்தே மேற்படி போட்டி நிலையை ஏற்படுத்தி நின்று 'யுத்தம்' புரிகிறார்கள். முன்பு ஓரளவுக்கு யூ.என்.பி- சிறிலங்கா சுதந்திரக்கட்சி களுக்கிடையிலான சில கொள்கை மாறுபாடுகள் இருந்தன. ஆனால் இன்று இரண்டு கட்சிகளுமே ஏறத்தாழ ஒரே நிலையில் இருந்து வருவதையே காண முடிகிறது. அடிப் படைப் பொருளாதார பிரச்சினையில் தாராளமயம். தனியார் மயம். உலக மயமாதல் இவற்றுக்கு இரு தரப்பிலும் எதிர்ப்போ மறுப்போ கிடையாது. இனப்பிரச்சினையிலும் வழமை போன்று ஒரு தரப்பு எதையாவது முன்வைத்தால் மறுதரப்பு எதிர்க்கும் நிலைதான். எனவே இவ்விரு ஐயா கட்சி அம்மா கட்சி என்பன நிலவுடமை. முதலாளித்துவ மேட்டுக்குடி நலன்கள் பேணி அந்நிய சக்திகளுக்கு செங்கம்பளம் விரிக்கும் கட்சிகள்தான் என்ற உண்மை பரந்துபட்ட மக்களால் உணரப்படும் வரை ஜனாதிபதி பிரதமர் அவர்தம் பரிவாரங்களால் மக்கள் முதுகுகளில் சவாரி செய்யவே முடியும். முதுகை எவ்வளவு காலத்துக்கு வளைத்துக் கொடுத்து நிற்பது என்பதை மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.

# உலகவங்கி தரும நிறுவனமல்ல!

உலகவங்கி என்பது பணத்தின் மூலம் பின்தங்கிய நாடுகளையும் அரசாங்கங்களையும் ஆட்டிப்படைக்கும் ஏகாதிபத்திய நிறுவனம். வெளிப்பார்வைக்கு அபிவிருத்திக்கு திட்டங்களும் அதற்கான பணமும் வழங்கும் தரும நிறுவனம் போன்றே காட்சியளிக்கும். தமக்கு அரசியல் நோக்கம் கிடையாது என்று கூறியும் கொள்ளும். ஆனால் உலக வங்கியின் ஒவ்வொரு நகர்வுக்குப் பின்னாலும் அமெரிக்காவினதும் உலக முதலாளித்துவத்தினதும் நலன்களுக்கான அரசியல் உள் நோக்கங்கள் படிந்திருக்கும். இன்றைய உலகப் பொருளாதார ஒழுங்கை இறுக்கி வைத்திருப்பதில் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் உலக வர்த்தக அமையமும் முக்கிய பாத்திரம் வகித்து நிற்கின்றன. உலக மக்களுக்கு எதிரான மூன்றாம் உலக நாடுகளைக் கொள்ளையடிக்கும் திட்டங்களையே கொண்டிருக்கின்றன. அதனாலேயே இவை நடாத்தும் சர்வதேச மாநாடுகள் கருத்தரங்குகளை எதிர்த்து பல்லாயிரம் லட்சக்கணக்கில் மக்கள் அணிதிரள்கிறார்கள்.

இத்தகைய உலக வங்கி இலங்கையில் இப்போது தனது திட்டங்களை விரிவுபடுத்தி ஆலோசனை என்ற பெயரில் ஆணையிடும் நிலைக்கு வந்துள்ளது. இதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஒரு அமைச்சருக்கும் மேலான அதிகார நிலை நின்று பேசிவருவதைக் காணமுடிகிறது. அண்மையில் திருகோணமலையில் இவ் உலக வங்கிப் பிரதிநிதி வடக்க கிழக்கு அபிவிருத்தி பற்றிய முன்மொழிவுகளையும் பணக்கட்டுக்களையும் காட்டி ஒரு கோலாகலமான வைபவத்தையே நடாத்தி உள்ளார். அதில் தமிழர் தரப்பின் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு உலக வங்கியின் திட்டங்களை மனங்குளிர வரவேற்றும் உள்ளனர். உலக வங்கியின் உள்நோக்கங்களை உற்று நோக்குவதும் அதன் அபாயங்களை முன்னுணர்ந்து கொள்வதும் தமிழ் மக்களுக்கு அவசியமானதாகும்.

# யாழ் வீடுகளுக்கு இராணுவம் வாடகை செலுத்துகிறதா?

யாழ்ப்பாணத்தில் இராணுவம் பயன் படுத்தும் வீடுகளுக்கு பாதுகாப்பு அமைச்சு மாதாந்தம் வாடகையைச் செலுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அவ் வாடகை வீட்டுச் சொந்தக்காரர் களுக்குச் சென்றடைகிறதாகத் தெரியவில்லை. அவ்வாறெனின் அப்பணத்திற்கு என்ன நடக்கிறது?

இராணுவத்தின் தேவைகளுக்காக ஏறக்குறைய ஆயிரம் வீடுகளை இராணுவம் பயன்படுத்தி வருகிறது. அவ்வீடுகளுக்கு மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய வாடகைப் பணம் பற்றிய கணக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்படுகிறது. அவ்வீடுகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வாடகைப் பணம் பாதுகாப்பு அமைச்சினால் ஒதுக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது. ஒதுக்கப்படும் அப்பணம் அவ்வீடுகளின் சொந்தக் காரர்களுக்குச் சென்றடைகிறதாகத் தெரியவில்லை.

இது பற்றிய உண்மை நிலைமை அறியப்பட்டு அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்துள்ள வீடுகளுக்கு வாடகை கொடுக்கப்படுவதாக வெளியுலகிற்குக் காட்டுவதன் மூலம் அவ்வாக்கிரமிப்பை நியாயப் படுத்தும் முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

இவ்வாறு வாடகை கொடுப்பதன் மூலம் இயல்பு வாழ்க்கை ஏறபடாது. அவ்வீடுகளை விட்டு இராணுவம் வெளியேறி அவ்வீடுகளை உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதன் மூலமே இயல்பு வாழ்க்கை ஏற்பட வழி ஏற்படும்.

# பாராளுமன்ற உறுப்பினர்களும் சொத்துச் சேர்ப்பும்

ஒவ்வொரு வருடமும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என்ற விதி நடைமுறையில் உள்ளது. ஆனால் இந்த விடயத்தில் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது சொத்து விபரங்களை உரியவாறு வெளியிடுவதில்லை. இவ்விடயத்தில் தமிழர் கூட்டமைப்பு. ஜே.வி.பி.. சிஹல உறுமய. பொதுசன முன்னணி. ஐக்கிய தேசியக் கட்சி. முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே மிகுந்த "புரிந்துணர்வு" காணப்படுகிறது. இனப்பிரச்சினை விடயத்தில் மட்டும் கச்சை கட்டி மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் பேச்சுக்களைப் பேசிக் கொள்வார்கள். ஆனால் சொத்து சேர்த்துக் கொள்வதிலும் அவற்றைப் பாதுகாத்து நிற்பதிலும் விதிகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு வெளிப்படுத்தாது விடுவதிலும் இன மத மொழி பேதமற்ற ஒற்றுமையைக் காட்டுவார்கள். இவர்கள்தான் மக்கள் சேவை புரியும் பா.உ.கள். 2002ம் ஆண்டில் 100 பா.உ.கள் தமது சொத்துக்களைப் பிரகடனப்படுத்த வேண்டிய கடைசித் திகதி கடந்த யூன் 30ம் திகதியாகும். அன்றுவரை சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேண்டிய 158 பா.உ.களில் 15 பேர் மட்டுமே வெளிப்படுத்திக் கொண்டனர்.

பாராளுமன்றம் செல்வதன் அடிப்படை நோக்கம் சொத்துக்களைப் பெருக்கி சுகபோகம் அனுபவித்து மக்களை ஏமாற்றி உயர்வர்க்க மேட்டுக்குடிகளின் நலன்களைப் பாதுகாத்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றவே என்பதை மக்கள் புரிந்து கொள்வது அவசியம். குறிப்பாகத் தமிழின் பெயரால் சேர்க்கப்படும் பா.உ.களின் சொத்தின் வகையே தனிவகைதான்.

# கல்வி அமைச்சரின் வாக்குமூலம்

நாட்டின் 9876 பாடசாலைகளில் 3000 அதிபர்கள் உரியதரம் இன்றி நியமனம் பெற்ற கடமை புரிந்து வருகிறார்கள் என்ற புள்ளி விபரத்தை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். அதேவேளை அதிபர் பதவிக்கு உரிய தரம் இருந்தும் அத்தகையோர் அதிபர் பதவி இல்லாது குறைந்த தரங்களின் கல்வி கற்பித்தும் வருகிறார்கள் என்றும் அமைச்சர் கூறி உள்ளார். இத்தகைய நிலை பெரும்பாலும் கிராமப்புறப் பாடசாலைகளில் சிறிய நகரப் பாடசாலைகளிலும் காணப்படுவதுடன் சில குறிப்பிட்ட தேசியப் பாடசாலைகளிலும் இந்நிலை இருந்து வருவதாக அமைச்சரே வாய் விட்டுக் கூறி உள்ளார். இந்நிலைக்கு அரசியல் செல்வாக்கு. தலையீடு. பழிவாங்கல் என்பன பிரதான காரணியாக விளங்குவதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆனால் அவர் குறிப்பிட்ட விடயங்கள் அவரது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எல்லாக் கட்சிப் பா.உ.க்களும் செய்து வரும் அன்றாட வேலையாகி விட்டது. கல்வித் செல் வாக்கு பெற முடியாத ஆசிரியர்கள் அதிபர்கள் தான் பரிதாபத்திற்குரிய வர்கள்.

# நீதித்துறையினரிடையே போட்டி

நீதிச்சேவை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் ஒருவருக்கு எதிராக இரண்டு நீதவான்கள் அவர்களின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் காட்ட முற்பட்ட சம்பவமொன்று கொழும்பு ஹல்ஸ்டோப் நீதிமன்றப் பகுதியில் நடைபெற றுள்ளது.

ஒரே காரில் பயணம் செய்த இரண்டு நீதவான்கள் இன்னொரு காரில் பிரயாணம் செய்த நீதிச்சேவை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் ஒருவருடன் பாதையில் வாகன நெரிசல் காரணமாக ஏற்பட்ட வீதித்தடை தொடர்பாக வாக்குவாதப்பட்டதுடன். தாங்கள் இருவரும் நீதவான்கள் என்று கூறி அதிகாரத்தையும் செல்வாக்கையும் செலுத்தி அந்த மேலதிக செய லாளரை அடக்க முற்பட்டுள்ளனர்.

அந்த நீதவான்கள் வாழைத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் அந்த மேலதிக செயலாளருக்கு எதிராக முறைப்பாட்டை செய்ததுடன் அவரை கைது செய்து நீதமன்றத்தில் ஆஜர் செய்ய பொலிஸாரை தூண்டியிருக் கின்றனர். அதற்கிணங்க நீதிச் சேவை ஆணைக்குழு காரியாலயத் திற்குச் சென்ற பொலிஸாரை மேலதிக செயலாளரை கைது செய்ய அங்கிருந்த அதிகாரிகள் அனுமதிக்க வில்லை. அதனால் காரியாலயத்திற்கு வெளியில் வரும்போது கைது செய்வதாக கூறிவிட்டு காரியாலயத்திற்கு வெளியில் அந்த பொலிஸார் காத்திருந்தனராம்.

இதனை அறிந்த நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் பிரதம நீதியரசருடன் தொடர்பு கொண்டு அந்த நீதவான்களின் அதிகார வரம்பிற்கு மீறிய செயல் குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முரண்பாட்டை அடுத்து அந்த இரண்டு நீதவான்களும் தூர இடங்களுக்கு இடயாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நீதிச்சேவை ஆணைக்குழுவும். நீதவான்களும் நீதி அமைச்சின் கீழ் இயங்குகின்றனர். நீதவான்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு பொறுப்புக் கூற கடமைப்பட்டவர்கள் அவ்வாறிருக்கும் போதே அக்குழுவின் மேலதிக செயலாளர் ஒருவருக்கு எதிராக மேற்கண்டவாறு பிழையான வகையில் நீதியினை புரிய முயன்ற நீதவான்கள் பற்றி என்ன நினைப் பது? இச்சம்பவம் ஒரு உதாரணம் வெளியில் தெரிந்தது மாகும். வெளியில் தெரியாத விடயங்கள். சம்பவங்கள் எத்தனையோ! இவ்வாறு தான் நீதி புரியப்படுகிறது.

நீதி புரியப்படுவது மட்டுமன்றி நீதி புரியப்படுவதாக காட்டப்படவும் வேண்டும் என்று டெனிங் பிரபு குறிப்பிட்டிருந்தார். அதாவது நீதி புரியப்படுதாகக் காட்டப்படாவிட்டால் மக்கள் நீதித்துறையில் நம்பிக்கை இழந்து கிளர்ந்து எழுவார்கள் என்பதற்காகவே அவர் அவ்வாறு கூறினார். நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கின்ற போது நம்பிக்கை ஏற்படுமா?

# இந்து கலாசார அமைச்சரின் திருவிளையாடல்

குருநகரில் அமைந்துள்ள வடபகுதி மீன்பிடி நிறுவனம் (சீனோர்) இப்போது இந்து சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் வந்துள்ளது. மீன்பிடித் துறைக்கும் இந்து சமயத்துக்கும் நடுவே என்ன அலுவல் என்று யோசிக்கிறீர்களா? திருமாலின் முதலாவது அவதாரமே மச்சவதாரம் அல்லவா. அதுபோகச் சிவ பெருமான் மதுரையில் திருவிளையாடல் புரிந்த போது மீனவராக வந்து கடலில் வலைவீசி மீன்பிடித்த கதையும் உண்டு. எனவே. மீன்பிடித்துறை முழுவதையும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் கீழ்க் கொண்டுவருவது தான் நியாயம் என்று பிரதமரிடம் யாரும் சொல்லிவைப் பார்களா? அல்லது. அடுத்தமுறை இந்துசமய அலுவல்கள் அமைச்சர் சனாதிபதியிடம் போய். விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்யும் வரை அவர் காத்திருக்கப் போகிறாரா? அமைச்சருக்கு இன்னொரு ஆலோசனை. மதுரையில் சிவபெருமானின் முதலாவது திருவிளையாடல் தாயிழந்த பன்றிக் குட்டிகட்குத் தாயாகிப் பாலூட்டியதல்லவா. அதுபோகத் திருமால். பன்றியாக ஒன்றுக்கு இரண்டுமுறை உருவெடுத்திருக்கிறார். எனவே பன்றி இறைச்சி உற்பத்தித் துறை ஒன்றையும். தொடங்கி இந்து சமய விவகார அமைச்சின் கீழ்க் கொண்டுவரலாம்.

அம்மாதிரியே. முருகனின் கொடி கோழிக் கொடி என்பதாற் சகல கோழிப் பண்ணைகளையும் அமைச்சின் கீழ்க் கொண்டுவர முடியும். சிவனின் வாகனம் எருது என்பதால். மாட்டிறைச்சி வியாபாரத்தையும். முருகனின் ஒரு வாகனம் ஆடு என்பதால். ஆட்டிறைச்சி வியாபாரத்தைங்கூட அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

அமைச்சர் ஏற்கனவே பனஞ் சாராய உற்பத்தியையும் தனது கைக்குள் போட்டுக்கொண்டது பற்றிப் புறுபுறுப்புக்கள் கேட்கின்றன. திருஞான சம்பந்தர் பெண்பனையாக மாற்றிய ஆண்பனையிலிருந்து விளைந்த பனைமரங்களெல்லாம் சைவத்துக்குத் தானே சொந்தம். அதுபோக. இந்து மதத்தின் முன்னோடிகள் எல்லாம் சோமபானம் அருந்தி அதைத் தேவர்களோடும் பகிர்ந்த பெருமைக்குரியவர்களல்லவா! எனவே சகல போதைப் பொருட்களும் இந்து சமய அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சினாலேயே விநியோகிக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் சனாதிபதியிடம் முறையிடுவேன் என்று இப்போதே எச்சரிக்கிறேன்.

www.padippakam.com



# மலையகத் தமிழ் ஆசிரியர்களின் அவலம்

**ம. அழகேசன்**

**மலையகத்தமிழ் ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகளாலும் அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகளாலும் பலவிதமான இடைஞ்சல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சில ஆசிரியர்கள் ஒழுக்கம் குறைந்தவர்களாகவும் சீரழிந்தவர்களாகவும் இருந்தாலும் பெரும்பாலான ஆசிரியர்கள் சமூகப்பொறுப்புடனேயே செயற்படுகின்றனர். வேலைப்பளுவும் சமூகப்பொறுப்பும் அதிகரித்த நிலையில் திருப்தியற்ற சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு நாளாந்த வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களின் சுதந்திரத்திலும் சுயகௌரவத்திலும் கல்வி அதிகாரிகளும் அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகளும் தலையிடுகின்றனர்.**

தனிப்பட்ட குரோதங்களால் பழிவாங்கும் எண்ணங்கொண்டுள்ள கல்வி அதிகாரிகள் ஆசிரியர்கள் திட்டமிட்டவாறு சோடிக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கின்றனர். நியாயமற்றவாறு சட்டத்திற்கு முரணாகவும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்கின்றனர்.

மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தில் இருக்கும் மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ். ஜோசப் என்பவர் ஆசிரியர்களுடன் தகாதமுறையில் நடந்துகொள்வதாக பலவாறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவர் ஆசிரியர்களை மரியாதை குறைவான வார்த்தைகளால் தூசிப்பதாகவும், அதற்கு எதிர்ப்பு காட்டுபவர்களை பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

ஆசிரியர்கள் மீதான துன்புறுத்தல்களுக்கும், முறையற்ற நடவடிக்கைகளுக்கும் எதிராக கண்டி மேல்நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வழக்குகள் மேற்குறித்த கல்விப் பணிப்பாளர் ஒரு பிரதிவாதியாக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு மாதகாலமாக நுவரேலியா மாவட்டத்தில் பல ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதகாலத்தில் ஒரு ஆசிரியர் இரண்டு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் டிப்ளோமா படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறி 8 வருடங்கள் கற்பித்த ஒரு ஆசிரியர் அண்மையில் இராகலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். ஒரு மாதகாலத்திற்குள் அவர் முன்பு கற்பித்த பாடசாலைக்கு மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான இடமாற்றங்கள் பழிவாங்கும் நோக்கத்துடன் செய்யப்படுபவை என்பது வெளிப்படையானதே.

இவ்வாறான இடமாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதை அடுத்து "பல இடமாற்றங்களை" இரத்து செய்வதாக மத்திய மாகாண கல்வியமைச்சர் இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

முறையற்ற இடமாற்றங்களை செய்வது மட்டுமன்றி மலையகத் தமிழ் ஆசிரியர்களின் அக்கறையைக் கவனிக்கக்கூடிய ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு ஆசிரியர் இடமாற்ற சபையில் உரிய பிரதிநிதித்துவத்தை வழங்காது மத்திய மாகாண கல்வித் திணைக்களம் இழுத்தடித்து வருகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் மலையகத்தமிழ்ச் சமூகத்தின் கல்வியில் பின்னடைவுகளையே ஏற்படுத்தும். ஆசிரியர்களை அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இம்சிப்பதனால் ஆசிரியர்களின் கற்பிக்கும் ஆற்றல் குறைவதுடன் கற்பித்தலின்றி அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதிலேயே ஆசிரியர்கள் முழுநேரத்தையும் செலுத்தவேண்டியவர்களாகின்றனர்.

மலையகத் தமிழ் ஆசிரியர்களுக்கு அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் பற்றி போதிக்க சில ஆசிரியர் சங்கங்கள் நடவடிக்கைகளை எடுத்து வருவது வரவேற்கத் தக்கதுதான். அதேவேளை அவர்களின் உரிமைகளை மதிப்பது பற்றி கல்வி அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அறிவூட்ட வேண்டும்.

மலையகக் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு பாடசாலைகளிலும், ஆசிரியர்களின் கடமைகளிலும் அடாவடித்தனமான தலையீடுகளையும் நிர்பந்தங்களையும் செய்யும் கல்வி அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எதிராக மலையகத் தமிழ் ஆசிரியர்கள் அவர்க்ள் அங்கம் வகிக்கும் தொழிற்சங்க வரையறைகளுக்கு அப்பால் ஐக்கியப்பட்டு போராட வேண்டும்.

---

# கொலைகளும் குத்துக்கரணங்களும்

எமது நாட்டின் அரசியல் அரங்கில் சில மாதங்களுக்கு முன் விறுவிறுப்பாகப் பேசப்பட்ட விடயம் ஜே.வி.பி. பொதுஜன முன்னணி கட்சிகளின் கூட்டணி பற்றியதாகும். இதோ ஒப்பந்தம் தயார். இதோ கைச்சாத்து. இதோ ஐக்கிய தேசிய முன்னணி அரசு கவிழ்ப்பு என்று ஆர்ப்பரிக்கப்பட்டது. எல்லாம் இறுதி நேரத்தில் சலசலத்து பிசுபிசுத்து ஆறப்போடலில் தூங்கி விட்டது.

அரசியலில் கூட்டணி சேர்வதில் 'இப்படித்தான்' என்ற விவஸ்த்தையே இருப்பதில்லை. 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்பது மட்டுமே மூல ஆதாரமாக இருப்பதுண்டு. அதன் உள்ளே நடக்கும் அத்தனை குத்து வெட்டுகளுக்கும் 'ஜனநாயகம்' என்ற முலாம் வலு அழகாகப் பூசப்பட்டுவிடும். நேர்மையான சக்திகளுக்கும் சாதாரண பொதுமக்களுக்கும் இதன் பம்மாத்துக்கள் விளங்க முடியாத ஒன்றல்ல.

ஜே.வி.பி., பொ.ஐ.மு. கூட்டணி யோசனையை எடுத்துக் கொண்டால் அது பூனைக்கும் எலிக்கும் உள்ள உறவு. ஜே.வி.பி. ஒரு சோசலிச புரட்சிகர அமைப்பு என 1971ல் புறப்பட்ட காலம் முதல் அது இலங்கையின் ஆளும் அரசாங்கங்களால் அடக்கப்பட்டு அழிக்கப்பட்டே வந்துள்ளது.

ஆட்சி அதிகாரம் உள்ள கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. ஐ அழிக்கும் கைங்கரியத்தை அவ்வப்போது நிகழ்த்தி வந்துள்ளது. இருந்தும் இந்த இரு கட்சிகளும் ஒரு புரிந்துணர்வு அரசு ஒன்றை கடந்த பொ.ஐ.மு. ஆட்சிக் காலத்தில் அமைக்க முற்பட்டும் கூட ஒரு வருடகாலத்துக்கு மேல் நின்றுபிடிக்க முடியவில்லை.

ஆனால் ஒரு வகையில் இந்த இரு கட்சிகளுக்கும் இடையே ஒரு பொதுவான வேலைத்திட்டம், கருத்தோட்டம் உள்ளது. அது சிங்கள பௌத்த பேரினவாதம் ஆகும். அந்த 'தேசிய அபிலாசை' எவ்விதத்திலும் அமுல்படுத்தும் வகையில் கூடி முனைவது அவர் தம் அரசியல் நோக்கு. அதுவே புலி எதிர்ப்பு. ஐக்கிய தேசிய முன்னணி அரசு கவிழ்ப்பு என்ற போர்வையில் மக்கள் முன் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இந்தக் கூட்டிற்கான பேச்சு வார்த்தைகள் பல மட்டங்களில் நடந்தும். இது வரை ஒப்பந்தம் எழுதப்படவில்லை. இன்றும் இழுபறி நிலையிலேயே இருந்தும் வருகிறது. அதற்கு தெளிவான காரணங்கள் வெளியிடப்படவில்லை. விமுக்தி குமாரதுங்க என்ற எதிர்கால அரசியல் வாரிசுக்கு விருப்பமில்லை என்பதும் ஒரு காரணமாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதாவது தன் தந்தையைக் கொன்றவர்களின் கட்சியுடன் அம்மாவும் மாமாவும் கட்சிக்கூட்டு சேர்வது பிடிக்கவில்லையாம். இவ்வாறு கூறப்பட்டாலும் ஒப்பந்தம் செய்யப்படாமைக்கு வேறு காரணங்களே உள்ளன. இருப்பினும் விமுக்தி என்ற எதிர்கால வாரிசு எழுப்பிய கேள்வியில் ஓரளவுக்கு நியாயம் இருக்கவே செய்கிறது.

அது இருக்கட்டும் மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் தேர்தல் கால வேலைகளில் ஹெலியில் பறந்து கொண்டிருந்த போது கூண்டோடு கைலாசம் அனுப்பப்பட்டார். இது பற்றிய விசாரணைகள் ஏதும் இன்றுவரை ஆக்கபூர்வமாக நடந்தேறினவா. அல்லது அது ஒரு கொலை அல்லது விபத்து என்றாவது தீர்ப்புகள் கிடைத்தனவா.

ஆனாலும் அரசியல் நிலவரத்தில் நடந்த விபத்தின் தார்ப்பரியம் பின்னணி பற்றி பலவித ஊகங்கள் அன்று எழுந்தன. இதற்கான காரண காரியங்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ, தேசிய ஐக்கிய முன்னணியோ (நுஆ) இன்றுவரை அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் அஷ்ரப் மறைந்த கையோடு தலைமைப் போட்டியில் இரண்டாம் கட்டத் தலைவர்கள் தடுமாறி, திருமதி. அஷ்ரப் அவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஒட்டி இறுமாந்து இருக்கின்றார்.

அதாவது ஜனாதிபதியுடன் உடனிருந்து தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பதற்கும் தற்போதைய சமாதானத்தைக் குழப்புவதற்கும் கதிர்காமர் எவ்வளவு உடந்தையாக இருக்கின்றாரோ அந்தளவுக்கு திருமதி. அஷ்ரப் அவர்களும் முஸ்லிம்களின் ஒற்றுமைக்கும் பங்கமாக இருந்து வருகின்றார்.

விமுக்தி குமாரதுங்க என்ற சிறுவனுக்கு உள்ள ரோச உணர்வு இன்றைய திருமதி. அஷ்ரப் என்ற அரசியலாளருக்கு இல்லாமல் போயுள்ளதுதான் பலருக்குள்ள விசனம். மேற்கூறிய விடயங்கள் அரசியல் பதவி அந்தஸ்துக்கான காரணங்கள் என்றே கூறமுடியும்.

– பட்டணத்தடிகள் –

---

# மலையகத்தமிழ் மக்கள் என்பதே பொருத்தமானது

இரா. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழுவின் ஏற்பாட்டில் யூலை 19ம் திகதி மலையகத்தமிழ் மக்களின் சமகாலப் பிரச்சினைகள் எனும் தலைப்பில் செயலமர்வொன்று நடைபெற்றது. இச்செயலமர்வில் மலையகத்தமிழ் மக்களின் குடிப்பரம்பல், கல்வி, சுகாதாரம், பண்பாடு இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் மலையகத்தமிழ் மக்களின் நிலைப்பாடு என்பனபற்றி ஆராய்ந்து அலசப்பட்டன.

**கட்சிகள், தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கயையும் சார்ந்த சாராத மலையகப் படித்தவர்கள் ஓரிடத்தில் சந்திப்பதற்கும் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும் அச்செயலமர்வு வழிவகுத்தது.**

**இச் செயலமர்வில் மலையகத்தமிழ் மக்களின் சமகாலப் பிரச்சினைகளில் முக்கியமானவைகள் அடையாளம் காணப்பட்டன.**

அச் செயலமர்வில் மலையகத்தமிழ் மக்கள் என்ற அடையாளமா இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் என்ற அடையாளமா ஏற்புடையது என்பது பற்றி காரசாரமாக விவாதங்கள் இடம் பெற்றன. இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வில் மலையகத்தமிழ் மக்களின் நிலைப்பாடு சாத்தியமான தீர்வுகளும் எனும் தலைப்பில் மலையக மக்கள் முன்னணியின் உபதலைவர் லோரன்ஸ் ஆய்வுரை நிகழ்த்தினார். அவ்வாய்வுரையின் மீது புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா கருத்துரையை வழங்கினார். அதன் பிறகே மேற்படி காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன.

அச் செயலமர்வில் கலந்து கொண்டவர்களில் இருவரைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் 'மலையகத்தமிழ் மக்கள்' என்றே அழைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த ஒருவர் 'இந்திய' என்ற அடைமொழியுடன் அழைத்துக் கொள்ள விரும்புவோர் இலங்கையில் இருக்காமல் இந்தியாவுக்குச் சென்று பூரணமான இந்தியர் என்ற அடையாளத்தை எடுத்துக்கொள்வதே நல்லது. இங்கு வாழ்வோர் 'இந்திய' என்ற அடைமொழியை தூக்கி எறிந்துவிட்டு மலையகத்தமிழர் என்ற அடையாளத்தையே எடுக்க வேண்டும் என்று கூறியமை குறிப்பிடத்தக்கது.

'இன ஒடுக்கல் நிறைந்துள்ள சூழ்நிலையில் இவ்வினத்தின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு அப்பால் ஒரு இன அடையாளத்தின் கீழ் அணிதிரள வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர்கள் அனைவரும் பெருந்தோட்டப் பொருளாதாரத் துறையை மையமாகக் கொண்டு. அல்லது அதனுடன் தொடர்புடைய துறைகளில் வேலை செய்ய இங்கு பிரிட்டிஷ் காலனித்துவ வாதிகளால்கொண்டு வரப்பட்டனர். அவர்களில் கணிசமானவர்கள் மலையகத்திற்கு வெளியில் வாழ்ந்த போதும் பெரும்பாலானோர் பெருந்தோட்டத் தொழிலாளர்களாவர். அதன் காரணமாகவும் இலங்கையின் ஆக்கத்திலும் இயக்கத்திலும் முக்கிய பங்கை செலுத்தியிருப்பதாலும் 'இந்திய' அடையாளத்தைவிட மலையகத்தமிழர் என்ற அடையாளமே பொருத்தமானதாகும். அரசியல் ரீதியாக சக்தியாக வளர்த்தெடுக்கப்படவும் அவ் அடையாளமே அர்த்தமுடையதாகும். மேல், வடமேல் மாகாண தமிழர்கள் கூட அவர்களின் அரசியல் ரீதியான உரிமைகளை உறுதிசெய்துகொள்ள மலையகத்தமிழ் மக்களின் கூறாக இருப்பதே-அதாவது வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழர்களில் பெரும்பான்மையாகவும் ஸ்தாபன ரீதியான பலமாகவும் இருக்கும் மலையகத்தமிழ் மக்களின் கூறாக இருப்பதே அரசியல் ரீதியாக பாதுகாப்பானதாகும்' இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா தெரிவித்தார்.

மலையகம் என்ற பெயரை உறுதி செய்து கொள்வதில் இரா. சிவலிங்கம் மிகவும் உணர்வுபூர்வமாக செயற்பட்டவராவார். அதனால் மலையகம் என்ற அவருடைய சிந்தனையை மேலும் செழுமைப்படுத்தி முன்னேற்றுவதே அவருக்கு செலுத்தும் மரியாதையாக இருக்க முடியும் என்பதை அச்செயலமர்வில் கலந்துகொண்ட பலரும் வலியுறுத்தினார்கள்.

---

# அமைச்சர் ஆறுமுகத்தின் நட்ட ஈடு வழங்கல்

## வாக்குகள் பெறும் நோக்கிலா?

உடதலவின்ன படுகொலைகளினால் உயிரிழந்த முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடாக காணிகள வழங்கப்படுவது வரவேற்கக்கூடியதெனினும் காணிகள் மட்டும் உயிரிழந்தவர்களின் வாழ்க்கைக்கான நட்டஈடாக முடியாது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிலும், ஐ.தே.கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி என்பவற்றிலும் நம்பிக்கையிழந்த முஸ்லிம் வாக்காளர்களை கவரும் வகையில் சில நடவடிக்கைகளை இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகிறார். சட்டத்தரணி பைசல் முஸ்தபாவை இ.தொ.கா. வின் உபதலைவராக நியமித்தது முதல் சில முக்கிய முஸ்லிம் வர்த்தகர்கள் இ.தொ.கா.வுக்கு நெருக்கமாகியுள்ளனர். இதனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அமைதியிழந்து காணப்படுகிறார்.

உடத்தலவின்ன படுகொலைகளினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு காணிகள் இலசவமாக வழங்கப்பட்டது கூட முஸ்லிம் வாக்காளர்களை கவரும் ஒரு நடவடிக்கையாகவே இருக்கும் என பரவலாக பேசப்பட்டபோதும் அந்நடவடிக்கை வரவேற்கத்தக்கது. இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தோட்டத்தொழிலாளர்களின். மலையகத்தமிழ் மக்களின் வீடில்லா. காணியில்லா பிரச்சினைகளை தீர்ப்பதில் உரிய கவனஞ் செலுத்தவில்லை. பிந்துனுவெவ தடுப்பு முகாம்களில் படுகொலை செய்யப்பட்டவர்களினதும் அப்படுகொலைகளை கண்டித்து தலவாக்கொல்லையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட போது சுட்டுக்கொல்லப் பட்டவர்களினது குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கவில்லை. அதில் அக்கறை செலுத்தவும் இல்லை. இந்நிலையில் உடத்தலவின்ன சம்பவத்தில் உயிரிழந்தவர் களின் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கியது வெறும் வாக்குப்பொறுக்கும் நடவடிக்கையா என்று சிந்திக்காமல் இருக்க முடியாது.

மேற்படி காணிகள் வழங்கியதை அர்த்தமுள்ள துணிவான நடவடிக்கையென கொள்ளப்பட வேண்டுமானால் பிந்துனுவெவ படுகொலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குவதில் ஆறுமுகம் தொண்டமான் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அச்சம்பவத்தில் வடக்கு கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளை சார்ந்த இளைஞர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பங்களுக்கும் ஏதாவது வகையில் நட்டஈடு வழங்க அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் நடவடிக்கை எடுப்பாரா?

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 ஓகஸ்ட் 2003 பக்கம் 12 விலை 12/- கழற்சி 60

எஸ்.47. 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## இந்திய மேலாதிக்கமும் அதனுடன் அணி சேர்பவர்களும்

1987 ஆண்டு இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் போது இலங்கையில் இருந்த இந்திய தூதுவர் கே.என.தீக்ஷித் இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காவிட்டால் இந்தியா தலையிட வேண்டிய நிலை உருவாகலாம் என்று தெரிவித்துள்ளதாக 22 யூலை 2003 அன்றைய தினக்குரல் பத்திரிகையில் கட்டுரையொன்று வெளியாகியிருந்தது. இதேபோன்று கடந்த மாத முற்பகுதியில் இந்தியாவுக்குச் சென்று பல அரசியல் தலைவர்களைச் சந்தித்துவிட்டு இலங்கை திரும்பிய ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் தக்க தருணத்தில் இந்தியா தலையிடும் என்று தெரிவித்திருந்தார். இந்த இருவரின் கூற்றுக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவே கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் தீக்ஷித் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டையே அடிப்படையாகக் கொண்டுள்ளார். தேவானந்தாவும் புலி எதிர்ப்பையே அவருடைய அரசியலாகக் கொண்டிருக்கிறார்.

இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்ட பிறகு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு அனுப்பப்படவிருந்த வேளையில் பொலிஸ் கூண்டிற்குள்ளிருந்த அவர்கள் சையனட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர். அவர்களை விடுவிக்க இந்தியத் தூதரகம் தலையிட வேண்டுமென விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த கோரிக்கையை அப்போதைய தூதுவராக இருந்த தீக்ஷித் உதாசீனம் செய்தார். பின்பு புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவரான திலீபன் உண்ணாவிரதமிருந்து இறந்தார். இந்த இழப்புகளுடன்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்திற்கு எதிராக வெளிப்படையான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். இந்தப் பின்னணியுடன்தான் இந்திய அரசும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக வெளிப்படையான நடவடிக்கைகளில் இறங்கியது. பொலிஸ் கூண்டிற்குள்ளிருந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் சிலர் தற்கொலை செய்து கொண்ட வேளையில் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் ஒரு தமிழ்ப் பத்திரிகையாளருடன் உரையாடிக் கொண்டிருந்த தீக்ஷித் முறையான பாடம் படிப்பிப்பேன் என்று பிரபாகரனைச் சுட்டிக் கூறியதாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இந்தியாவில் சிறையிலிருந்த தேவானந்தாவின் இலங்கை வருகை, ஈ.பி.டி.பி.யின் தோற்றம், காலஞ் சென்ற ஜனாதிபதி பிரேமதாஸவுடன் அவருக்கிருந்த நெருக்கம், அவரின் தொண்டர்கள் இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டமை, தொடர்ந்து பாராளுமன்றத்தில் ஈ.பி.டி.பி. எம்.பி.க்கள் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை போன்றன இரகசியங்கள் அல்ல. விடுதலைப் புலிகள் இயக்கம் ஈ.பி.டி.பி.யினர் மீது தொடுத்து வந்த தாக்குதல்கள் காரணமாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை அரசியல் அடிப்படையாக ஈ.பி.டி.பி. கொண்டுள்ளதாக அவ்வியக்கம் தெரிவித்தாலும் அதன் அரசியல் அடிப்படை இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்திற்குத் துணை போவதாகவே இருந்து வருகிறது. ஆரம்பம் முதல் புலி எதிர்ப்பையே அதன் அரசியல் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதனால் இந்திய மேலாதிக்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தீக்ஷித்தும் டக்ளஸ் தேவானந்தாவும் முறையே எஜமானின் பாஷையிலும் அடிமைகளின் பாஷையிலும் பேசுவது அவர்களைப் பொறுத்தமட்டில் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகள் மீதான தாக்குதல்கள் எவ்வித நிபந்தனையுமின்றி எதிர்க்கப்பட வேண்டியது போன்று இந்திய மேலாதிக்க நடவடிக்கைகளும் எவ்வித நிபந்தனையுமின்றி எதிர்க்கப்பட வேண்டும்.

'வடக்கு-கிழக்கில் சமாதான சூழ்நிலை என்ற பேரில் புலிகளின் மேலாதிக்கம் நிலைநிறுத்தப்பட்டு ஜனநாயக விரோத நடவடிக்கை மேலோங்குவதால் தங்களைப் போன்ற அமைப்புகளால் இயங்க முடிவதில்லை என்பதும் அதனால் இந்தியா இலங்கையின் சமாதான முயற்சிகளில் தலையிட வேண்டும்' என்பதே ஈ.பி.டி.பி.யின் நிலைப்பாடாகத் தெரிவிக்கப்படுகிறது.

'இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகளினூடாக புலிகள் அவர்களுக்கான இறைமையை நிலைநாட்டிக் கொண்டு அவர்களின் இலக்கான தனி நாட்டை நோக்கி முன்னேறி வருகிறார்கள். அதனாலே சமாதான முயற்சிகளில் தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடருமாயின் இந்தியா தலையிட வேண்டிவரும் என்பதும் தீக்ஷித்தின் எச்சரிக்கையாக இருக்கிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, சிஹல உறுமய போன்றவை இந்திய மேலாதிக்கத்துடன் அணி சேர்ந்துள்ளன. ஈ.பி.டி.பி. போன்ற தமிழ் அமைப்புக்களும் அதனுடன் அணி சேர்ந்துள்ளன.

சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இந்தியா அவற்றுக்கு எதிராக செயற்பட்டு வருவதனுடன் பிழையான தகவல்களையும் வெளியிட்டு வருகிறது. புலிகள் இயக்கம் நோர்வேயிலிருந்து இறக்குமதி செய்த வானொலி ஒலிபரப்பிக் கருவிகள் பற்றி உண்மைக்குப் புறம்பான கருத்துக்களையே தீக்ஷித் தெரிவித்துள்ளார். ஐ.தே.மு. அரசாங்கத்தின் அனுமதியுடனேயே அக்கருவிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக அரசாங்கத்தின் சார்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்ட போதும், நோர்வே அக்கருவிகளை புலிகள் இயக்கத்திற்கு அன்பளிப்புச் செய்து இங்கு கொண்டு வந்து கொடுத்தமை இலங்கையின் இறமைக்கு எதிரான நடவடிக்கை என தீக்ஷித் கூறுகிறார்.

இலங்கையின் வான் பரப்பிற்குள் அத்துமீறி இந்திய விமானம் பிரவேசித்தமை உணவுப் பொட்டலங்களைப் போட்டமை, அமைதிப் படையொன்று இங்கு வந்த இந்தியப்படை யாழ்-பல்கலைக்கழக கம்பியூட்டர் பிரிவு உட்பட பல பொது நிறுவனங்களையும், சொத்துக்களையும் தாக்கி அழைத்தமை, பொதுமக்களின் சொத்துக்களைக் கொள்ளை அடித்துச் சென்றமை, பலர் அப்படையால் கொல்லப்பட்டமை, பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டமை போன்றவை எல்லாம் எவ்வகையிலும் மறக்கப்பட முடியாதவையாகும்.

ராஜீவ் காந்தியின் கொலை என்பதைச் சாட்டாக வைத்துக் கொண்டு இங்கு நடைபெறும் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு இந்திய மேலாதிக்கச் சக்திகள் மேற்கொண்டு வரும் சதி முயற்சிகளால் இலங்கைக்கு நிரந்தர சமாதானம் ஏற்படுமா? வடக்கு-கிழக்கில் ஜனநாயக சூழலையும் கொண்ட இயல்பு வாழ்க்கை நிலைநாட்டப்படுமா?

இலங்கையின் வடக்கு-கிழக்கில் அமெரிக்காவின் உதவியுடன் புலிகள் இயக்கம் தனி நாடொன்றை ஏற்படுத்தப்போவதாகவும், அந்நாடு மத்திய கிழக்கில் இஸ்ரேல் போன்று இப் பிராந்தியத்தின் சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் இந்திய மேலாதிக்கவாதிகள் பிரசாரம் செய்து வருகின்றனர். இப்பிரசாரம் இலங்கையின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களை நன்றாகவே குழப்பி வருகிறது. இக் குழப்ப நிலை சமாதான நடவடிக்கைகளுக்கு சாதகமாக இருக்கப் போவதில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியம் விடுதலைப் போராட்டங்களுக்கு நீதி கிடைக்க உதவப்போவதில்லை. அதனை தமிழ் மக்கள் நம்பப் போவதில்லை.எவ்வாறு இந்திய மேலாதிக்கம் தமிழ் மக்களுக்கும், இலங்கை நாட்டிற்கும் எதிராக செயற்படுகிறதோ அதே போன்றே அமெரிக்க ஏகாதிபத்தியமும் செயற்படும் என்பது தமிழ் மக்களுக்குப் புரியாத விடயமுமல்ல.

எனவே இந்திய மேலாதிக்கம் தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிரானதே. அதனுடன் அணி சேருகின்றவர்களும் தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிரானவர்களே. அவர்களும் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்களே.

- ஆசிரியர் குழு -

# பாராளுமன்ற அரசியல் அமைப்பும் அடிப்படைப் பிரச்சினைகளின் தீர்வின்மையும்

நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இன்றைய சமூக அமைப்பு மிகுந்த ஏற்றத் தாழவானது. இது தொண்ணூறு வீதமான மக்களுக்குப் பாதகமானதாகவும் பத்து வீதமானவர்களுக்கு மட்டும் சாதகமானதாகவே நீடித்து வருகின்றது. பாதகமான அம்சங்களை அனுபவித்து வரும் ஏகப் பெரும்பான்மையான மக்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளைப் பலவாறான துன்பச் சுமைகளாக அனுபவித்து வருகின்றனர். அவை ஒரே தரத்திலானவையாக அன்றி பல்வேறு நிலைகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகவும் நெருக்கடிகளாகவும் இருந்து வருகின்றன.

அடிமட்ட நிலையில் இருந்து அணுகிப் பார்ப்போமேயானால் வறுமை, வேலையின்மை உழைப்புக்குத் தகுந்த ஊதியமின்மை, நிலம்-வீடின்மை, உழைப்பால் இழக்கும் சக்தியை மீளப் பெறுவதற்கான சத்துள்ள உணவின்மை, குழந்தைகள்-சிறுவர்களை உரிய போசாக்குடன் வளர்க்க முடியாமை, வயோதிபர்களைப் பேண முடியாமை போன்றவற்றைக் காண்கின்றோம். மேலும் இவ் அடி நிலைமை மக்கள் மத்தியில் கல்வியின்மை அவற்றைப் பெற முடியாமை, சுகாதாரமின்மை, கொடு நோய்களின் பிடியில் சிக்குதல் ஆகியவற்றால் பாதிப்புறுகின்றனர். இவற்றின் அவலங்களும் அகோரங்களும் பற்றியுள்ள மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் என நாகரீகமாக அழைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

உணவு, உடை, உறைவிடம் என்பவற்றையும் கல்வி, சுகாதாரம் மற்றும் அன்றாட சமூகத் தேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியாத மக்கள் கடும் உழைப்பாளர்களாக இருந்தும் கொடும் சுரண்டல் காரணமாக உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமை யாலும் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு அன்றாட வாழ்வை நடாத்த முடியாமலும் திணறுகின்றனர். இவற்றுக்குரிய அடிப்படைக் காரணங்களை அறியாதவர்களாக தங்களது தலைவிதி என மூட நம்பிக்கை கொள்கின்றனர். தமது துன்ப துயரங்களை மறக்க மதுவுக்கும் ஏனைய சமூகச் சீரழிவுகளுக்கும் ஆளாகுமாறு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இவற்றுக்கும் அப்பால் தற்கொலைகளுக்கு இலகுவாகவே தள்ளப்படுகின்றனர். உலகிலேயே தற்கொலையில் முதல் இடத்தை வகிக்கும் நாடாக இலங்கை விளங்குகின்றது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இலங்கை மூன்றாம் உலகைச் சேர்ந்த ஒரு பின்தங்கிய நாடு. விவசாய நாடாக விளங்கும் அதேவேளை எண்பது வீதமானவை கிராமங்களாகவே இன்றும் காணப்படுகின்றன. வளங்கள் நிரம்பப் பெற்ற இந் நாட்டில் விவசாயிகள், கடலால் சூழப்பட்டிருப்பதன் காரணமாக மீனவர்கள் மற்றும் அன்றாட தொழில்களில் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை அதிகமானதாகும். அத்தகைய மக்கள் தொகையின் வாழ்க்கை நிலைகள் மிகத் தாழ்ந்த நிலைகளிலேயே இருந்து வருகின்றன. விவசாயக் கிராமங்களுக்கும் கரையோரங்களுக்கும் சென்று பார்த்தால் பிரச்சினைகளின் ஆழ-அகலத்தைக் காண முடியும்.

பெரு நகரங்களிலும் நடுத்தர நகரங்களிலும் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மோசமடைந்து கொண்டே செல்கிறது. மனித வாழ்வுக்குத் தகுதியற்ற பின் தங்கிய பகுதிகள் என்பன ஒவ்வொரு நகரங்களிலும் காணப்படுகின்றன. இதன் மற்றொரு பகுதி தான் மலையகம். மத்திய மலையகப் பிரதேசங்களிலும் மலை சார்ந்த இடங்களிலும் பெருமளவு தேயிலை உற்பத்தித் துறையிலும் ரப்பர் உற்பத்தியிலும் இருந்து வரும் பல லட்சம் தொழிலாள வர்க்கம் கடுமையான உழைப்பைக் கொடுத்து நின்ற போதிலும் கொடுமையான வாழ்க்கை நிலையினை அனுபவிக்கும் மக்களாகவே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். வர்க்க ரீதியில் மட்டுமன்றி அவர்கள் தமிழர்களாக இருப்பதால் இன அடிப்படையிலும் சுரண்டி ஒடுக்கப்பட்ட வர்களாக இருந்தும் வருகிறார்கள்.

அடுத்து நோக்கின் அரசாங்க-தனியார் துறைகள் சார்ந்த ஊழியர்களைக் காணலாம். மட்டுமட்டான சம்பளத்துடன் எப்பொழுதும் மல்லாடிக் கொண்டிருக்கும் இவர்களில் பெரும் பகுதியினர் கீழ்-நடுத்தர வர்க்கத்தினராகவே இருந்து வருகின்றனர். இவர்கள் மேலே மேலே சென்றுவிட முயற்சிகள் செய்தபோதிலும் சறுக்கு மரத்தில் ஏற முற்படுவோரின் நிலையிலேயே வாழ்க்கைநகருகிறது. ஓய்வூதியம், சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவை மட்டும் இவர்களுக்குரிய ஆறுதலாக இருக்கின்றன. ஆனால் அவற்றின் பலாபலன்களை அவர்களது தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யப் போதுமானவையல்ல. இக் கீழ்-நடுத்தர வாழ் நிலையில் இருந்து கொண்டு தமது பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வியை வழங்கி உயர் பட்டங்கள், பதவிகள் மூலம் உயர் -நடுத்தர வர்க்கப்

**வெகுஜனன்**

பிரிவில் சேர்ந்து கொள்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளில் எல்லோரும் வெற்றி பெறுவதில்லை. அதற்கு இன்றைய சமூக அமைப்பும் அதன் நடைமுறைகளும் இடம் தருவதில்லை.

ஆனால் இந் நாட்டின் ஏகப்பெரும்பான்மை யினரான மேலே குறிப்பிட்ட மக்கள் தொகையினர் இன்றைய சமூக அமைப்பையும் அதனைப் பாதுகாத்து நிற்கும் அரசு யந்திரத்தையும் முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி அமைப்புப் பற்றியும் ஏன்? எப்படி? எதற்காக? என்ற கேள்விகள் எழுப்பாத நிலையிலேயே இருந்தும் வருகின்றனர். அவ்வாறு மக்கள் சிந்தித்து செயலாற்றுவதைத் திட்டமிட்டே தடுக்கக் கூடிய பொருளாதார, அரசியல், சமூக, கல்வி, பண்பாட்டு வியூகங்களை மிகவும் கச்சிதமாக வகுத்து செயற்படுத்துவதில் ஆளும் வர்க்கமும் அதன் கருவிகளும் முன்னின்று வருகின்றன. சுதந்திரம்.

> **90 வீதமானவர்கள் சுரண்டி ஒடுக்கப்படுகின்றனர். பத்து வீதமானோர் உண்டுகளித்து ஆண்டு அனுவித்து நிற்கின்றனர். இத்தகைய சமூக அமைப்பு உடைத்து நொறுக்கப்பட்டு புதியதோர் சமத்துவ சமூக அமைப்புத் தோற்றுவிக்கப்படவ் வேண்டும்.**

ஜனநாயகம், சட்டத்தின் முன் சகலரும் சமம் போன்ற மாயத் தோற்றங்களைக் காட்டி மக்களை ஏமாற்றி வருகின்றன. இதன் மூலம் யார் நன்மையடைகின்றனர், எவர் பாதுகாக்கப்படுகின்றனர் என்பதை ஆழ்ந்து நோக்கினால் மட்டுமே கண்டு கொள்ள முடியும்.

அன்றிலிருந்து வழிவழியாக நிலவுடமையாளர்களாகவும் சமூக ஆதிக்கம் பெற்றவர்களாகவும் இருந்து வந்தவர்கள். சாதியில் உயர்ந்தோர் எனப் பட்டவர்கள், பெரும் முதலாளி களாக உள்ளவர்கள் இவற்றின் அடிப் படையில் அரசியலில் ஆதிக்கம் பெற்றுக் கொண்டவர்கள். அரச அதிகாரத்தின் உயர் அதிகாரிகளாக இருந்து வரும் மேட்டுக்குடியினர். தொடர்ச்சியான அரசியல் ஆட்சி அதிகாரத்தால் தங்களை வளம்படுத்தி வளர்ச்சி கண்டோர், பெரும் வர்த்தகர்கள், உயர் வியாபாரிகள் என்போரை உள்ளடக்கிய இப் பிரிவினரின் மொத்த எண்ணிக்கை பத்து வீதத்தைத் தாண்ட முடியாது.

இந்தப் பத்து வீதமானவர்கள் தான் நிறைவாக உண்டு களித்து ஆண்டு அனுபவித்து அதிகாரம் செலுத்தி அந்நியர்களுடன் கூடிக் குலாவி அவர்களுக்கு நாட்டையும் வளங்களையும் தாரை வார்த்து அதற்கான கைமாறுகளைப் பெற்று உயர் வர்க்கத்தினராக இருந்து வருகின்றனர். இவர்கள் தங்களது அரசியல் பிரதிநிதிகள் மூலம் ஆட்சி அதிகாரத்தையும் அதற்கான அரசியல் யாப்புகளையும் அதன் கீழான சட்ட வரைபுகளையும் தீர்மானிக்கின்றனர்.

பாராளுமன்றம், வாக்குரிமை, தேர்தல் என்பவற்றின் ஊடே ஜனநாயகத்தில் மக்கள் பங்கு கொள்வதாகப் பீத்திக் கொள்கின்றனர். ஆனால் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலான பாராளுமன்ற அரசியல் அமைப்பு முறையின் கீழ் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்படும் பின்னணியை மிகவும் வெளிப்படையாகவே கண்டு கொள்ள இயலும். வர்க்கம், இனம், சாதி, பண பலம், அந்தஸ்து வாய்க்கப் பெற்றவர்களாலேயே அத்தகைய உறுப்புரிமையைப் பெற முடியும். அதற்கும் அப்பால் ஜனாதிபதி, பிரதமர், அதி முக்கிய பதவிகளில் ஆண்ட பரம்பரைக் குடும்பங்களே முதன்மையானவையாக இருந்து வந்துள்ளன. ஓரிரு சந்தர்ப்பங்கள் இதில் விதிவிலக்காகக் காணப்பட்ட போதிலும் அவை கெட்ட கடந்த காலமாகவே கணிக்கப்பட்டன. மற்றப்படி உயர் வர்க்கம் இன, சாதிய மரபுகளே கோலோச்சி நிற்கின்றன. பெண்கள் இருவர் தாயும் மகளுமாக பிரதமர் ஜனாதிபதி பதவி வகித்த போதிலும் அது பெண் சமத்துவ அடிப்படையில் ஏற்பட்டதல்ல. அவை ஆண்ட பரம்பரை குடும்ப ஆதிக்கத்தின் ஊடாக வந்தமையாகும்.

சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படும் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் இரு தடவைகள் அரசியல் யாப்புகள் வரையப்பட்டன. அவற்றை வரைந்தவர்களும் நடைமுறைப் படுத்தியவர்களும் நாட்டின் பத்து வீதமான உயர் வர்க்க மேட்டுக்குடியினரின் பிரதிநிதிகளாக இருந்தனரே தவிர தொண்ணூறு வீதமான மக்களின் பிரதிநிதிகள் அல்லர். ஆனால் இவர்கள் அனைவரும் தங்களை மக்கள் பிரதிநிதிகள் என்றே கூறிக் கொள்கின்றனர்.

இவர்களாலும் இவர்கள் வரைந்து கொண்ட அரசியல் யாப்புகளினாலும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எதனையும் தீர்க்க முடியவில்லை. தீர்க்கப் போவதாகப் பொய் கூறியும் பாசாங்கு செய்து கொள்ளும் அதே வேளை தமக்கும் தமது உயர் மேட்டுக்குடி வர்க்கங்களின் தேவைகளை நிறைவு செய்தும் கொள்கின்றனர். அத்துடன் அந்நிய ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகளை அடிமைத்தனமாக அரவணைத்து அவர்களது ஊடுருவல், சுரண்டல், ஆதிக்கம் என்பவற்றுக்கும் பாதுகாவலர்களாக இருந்தும் வருகின்றனர்.

இத்தகையவர்கள் வர்க்க, இன, சாதிய, பெண் ஒடுக்குமுறைகளைப் பேணிப் பாதுகாத்து முன்னெடுத்து வருவதன் ஊடாக தொண்ணூறு வீதமான உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தி மோதல்களுக்கு உள்ளாக்கி அவர்கள் மீதான ஆட்சி அதிகார ஆதிக்கப் பிடியினை இறுக்கி வருகிறார்கள். மக்கள் தங்களைப் பிணைத்திருக்கும் உண்மையான விலங்குகள் எவை என்பது பற்றியோ அவை யாரால்? எப்படி? இறுக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றியோ அறியாதிருக்கின்றனர். மக்கள் இவற்றின் உண்மைகளைக் கண்டு கொள்ள முடியாத வகையில் பலநூறு வழிகளில் தடுக்கப் படுகின்றனர்.

இத்தகைய பத்து வீதமான உயர் வர்க்க மேட்டுக்குடி வர்க்க சக்திகளின் அரசியல் ஆதிக்கப்பிடி ஏகப்பெரும்பான்மை யான மக்களால் உடைத் தெறியப்படாத வரை மக்கள் அனுபவிக்கும் சுரண்டல்கள், ஒடுக்குமுறைகள் அவற்றின் வாயிலான அடிப்படைப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட முடியாதவை களாகும். மக்கள் அதிகாரத்தைப் பெறுவதற்கானபோராட்ட மார்க்கத்தில் அணி திரள்வது அதற்கான சிந்தனை. செயற்பட்டு சூழலை ஏற்படுத்துவது இன்றைய தேவையாகும்.

ஒவ்வொரு தளத்திலும் இன்றைய சமூக அமைப்பு பற்றியும் அதனை நிலை நிறுத்திப் பாதுகாத்து வரும் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் முறைமை பற்றியும் கேள்வி எழுப்புதல் வேண்டும். வெறுமனே கேள்வி எழுப்புவதுடன் நிற்பதன்றி அதற்கு மாற்றாக இருக்கக் கூடிய அரசியல் கோட்பாடு, கொள்கை பற்றியும் மாற்று சமூக அமைப்பு பற்றியும் மக்கள் மத்திக்கு எடுத்துச் சென்று செயலாற்ற வேண்டும். இதுவே நாட்டின் மீதும் ஒடுக்கப்படும் அனைத்து மக்கள் மீதும் செயலாற்று அக்கறை கொண்ட அனைவரினதும் இன்றைய தவிர்க்க முடியாத கடமையாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# முஸ்லீம் தேசியவாதம் எங்கே செல்கிறது?

## பேரினவாத அரவணைப்பில் பிரச்சினைகளை தீர்க்கலாமா?

சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியின் விளைவாகவே தமிழ்த் தேசியவாத எழுச்சி ஏற்பட்டது. முஸ்லிம் தேசிய வாதத்தின் எழுச்சிக்குத் தமிழ்த் தேசிய வாதத் தலைமையின் மேலாதிக்கப் போக்குக்கு ஒரு பங்குண்டு. எனினும், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சேர்ந்து வாழ்ந்த பகுதிகளில், ஒரு சில இடங்களில் சமூக முரண்பாடுகள் இருந்தாலும், அது தமிழ் மேலாதிக்க முனைப்பின் விளைவானதல்ல.

முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினை சிக்கலானது என்பதைப் பழைய தமிழ்த் தேசியத் தலைமைகள் உணரத் தவறியது காரணமாகக் கிழக்கு மாகாணத்தில் அரசியல் சந்தர்ப்பவாதிகளால் முஸ்லிம் தலைவர்களாக உலா வர முடிந்தது. பின்பு 'விடுதலை' இயக்கங்களது அரசியல் எழுச்சியின் பின்னணியில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியலில் புதிய போக்குகள் உருவாகின. முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் வளர்ச்சியும் பாராளுமன்றத் தரகு அரசியலில் இறங்கியதன் பின்பு அதன் சீரழிவும் முஸ்லிம் காங்கிரஸ் அடையாளப்படுத்திய முஸ்லிம் தேசியவாத அரசியல். தமிழ்த் தேசியவாத பாராளுமன்ற அரசியலையும் மலையகத் தமிழரின் பாராளுமன்றத் தலைமையின் (மலையகத்துக்கு வெளியே உள்ள தலைமையினதும்) அரசியலையும் போல, அதுவும் சுயலாபத்துக்கான சந்தர்ப்பவாத அரசியலே என்பதை நிறுவியுள்ளது.

சிறுபான்மைத் தேசியவாத அரசியல் தலைமைகள் ஒருபுறம் தமது மக்களின் தேவைகள் பற்றி வற்புறுத்திப் பேசுவதுடன் உரிமைகட்காகக் குரல் கொடுத்துப் போராடுவதாகத் தோற்றங் காட்டுகின்றன. மறுபுறம் தலைமறைவாகத் தமது சமூகத்தை ஒடுக்குகிற பேரினவாத அரசியல் தலைமைகளுடன் சரசமாடுகின்றன. முஸ்லிம் தலைமைகளது போக்கில் இன்னொரு விசேடமான பண்பும் காணப்படுகிறது. இது, முக்கியமாகக் கடந்த பதினைந்தாண்டுக் கால அரசியலில், முஸ்லிம் சமூகத்துக்கு மிகுந்த கேட்டையே விளைவித்துள்ளது என்பதை இத் தலைவர்கள் அறிய மாட்டார்கள் என்று நான் எண்ணவில்லை.

முஸ்லிம் சமூகத்தின் சிறிய, ஆனாற் செல்வாக்குள்ள ஒரு பகுதியினர் கடந்த முப்பது நாற்பது வருடங்களில் பெரும் செல்வந்தர்களாகியுள்ளார்கள். இவர்கள் பெரும்பாலும் வணிகர்கள். இதனை விட மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக்கள் மூலமும் அரபு நாடுகளது தொடர்புகளும் முஸ்லிம்களின் ஒரு பகுதியினரது செழிப்புக்கு உதவியுள்ளது. இவை பெரும்பாலும் தென் இலங்கையில் உள்ள முஸ்லிம்களின் சமூக நிலையை உயர்த்த அதிகம் உதவியுள்ளன. அரபு நாட்டுத் தொடர்புகளைத் தமது சொந்த நலனுக்குப் பாவிப்பதில் சமூகத்தின் உயர் நடுத்தர மட்டத்திலிருந்த பலர் தயங்கவில்லை. அதுபோக, இவ்வாறு செல்வந்தர்களாகியவர்கள் தமது செல்வச் செழிப்பைப் பறைசாற்றுகிற விதத்தில் ஆடம்பரமாக நடந்து கொள்வதும் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையில் உள்ள சிங்களச் சமூகத்தினரது கண்ணை உறுத்தும் விதமாக வீடுகளையும் பள்ளிவாசல்களையும் அமைப்பதும் முஸ்லிம்கட்கு எதிரான உணர்வுகளைக் கிளறிவிட மிகவும் உதவியுள்ளன.

சிஹல உறுமய என்ற இனவாதக் கட்சியின் முன்னோடி இயக்கமான சிங்கள வீர விதான, முஸ்லிம் வணிகர்கட்கு எதிரான காரியங்களிலே முனைப்பாக இருந்தது பற்றி என்றுமே ஒரு இரகசியமும் இருக்கவில்லை. சிங்களப் பேரினவாதம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே முஸ்லிம்களை இலக்கு வைத்திருந்துள்ளது. இன்று அந்தப் பகைமை வளர்ந்துள்ளதே ஒழியக் குறையவில்லை. இதுவும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அறியாததல்ல. ஆயினும் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு முகங்கொடுக்கிறார்கள்? சிங்களப் பேரினவாத மிரட்டல் என்ற ஒன்று இல்லாத விதமாகவே பேசியும் நடந்தும் வருவது தந்திரோபாயமான ஒரு வெளித் தோற்றமாகவே வைத்துக் கொண்டாலும், மறுபுறம் தமிழ் மக்களுடனான முரண்பாட்டை வலியுறுத்துகிற போக்கை நாம் எப்படி விளங்கிக் கொள்வது?

கிழக்கிலங்கை முஸ்லிம் தலைமைகள் சிங்களப் பேரினவாத நிலச்சுவீகரிப்புப் பற்றியும் முஸ்லிம்கட்கு எதிரான



பேரினவாத மிரட்டல்கள் பற்றியும் அறியாதவர்களல்ல. ஆயினும் சிங்களப் பேரினவாத அரசாங்கங்களுடன் இணைந்து தங்களது நலன்களைப் பேணுவதில் அவர்கள் குறியாக இருந்தனர். இது முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்தின் பின்னர் மாறும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அஷ்ரஃப் காலத்திலேயே மந்திரிப்பதவிக்காகப் பாராளுமன்ற ஆசனங்களைக் காட்டிப் பேரம் பேசுகிற போக்கு முற்றாக நிலை பெற்று விட்டது. முஸ்லிம் காங்கிரஸின் உடைவுக்கும் இன்றைய பிளவுகட்கும் இந்தப் பதவி மோகமும் அதிகார வெறியுமே காரணமாக உள்ளன.

தமிழ்-சிங்கள தேசிய இன முரண்பாடும் போரும் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம்களைப் பாவிக்கும் தேவையைப் பேரினவாதிகட்கு ஏற்படுத்தியிருக்கிறது. 1983க்குப் பிறகு பேரினவாத அரசால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் ஊர்காவற் படைகள் முஸ்லிம்களின் நன்மை கருதி ஏற்படுத்தப்படவில்லை. பெரும்பாலான முஸ்லிம்கள், தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணியதோடு, விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருந்தனர். முஸ்லிம் இளைஞர்களும் இந்த இயக்கங்களில் இணைந்த காலமும் இருந்தது. 1987ல் இந்தியப் படையின் வரவுக்குப் பின்பு, முஸ்லிம் விரோத நடவடிக்கைகள், தமிழ்த் தேசிய இயக்கங்கள் பலவற்றால் மேற்கொள்ளப்பட்டன. இங்கே தமிழ்த் தேசியவாதத் தலைமையின் சிந்தனைக் கோளாறு முக்கியமான பங்கு வகித்தது என்பது மறுக்கக் கூடாத உண்மை. அதே வேளை, சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ளும் போக்கு முஸ்லிம் தலைமைகளிடம் இருந்ததும், அன்றைய போராட்டச் சூழலில் தமிழ் முஸ்லிம் உறவுகட்குத் தீங்கு செய்ததையும் மறுக்க இயலாது.

தமிழ்த் தேசியவாதம் பற்றியும் அதன் ஆதிக்க மனோபாவம் பற்றியும் முஸ்லிம்களது அச்சங்கள் பலவும் நியாயமானவையே. அதேவேளை, இந்த அச்சத்துக்கு அடிப்படையான முரண்பாடு பகைமையான முரண் பாடல்ல என்பதையும அது ஒன்றாக வாழ வேண்டிய சமூகங்களிடையிலான சினேக முரண்பாடு எனவும் நாம் கவனிக்க வேண்டும். அந்த முரண்பாட்டைச் சரியாக்க கையாளாகாததனாலேயே தமிழ்-முஸ்லிம் மோதல்கள் நேர்ந்தன என்பதையும் அதைச் சரியாகக் கையாளும் வழிகளை நாட வேண்டும் என்பதையும் நாம் வற்புறுத்த வேண்டும். இதுவே பெருவாரியான தமிழ் மக்களதும் முஸ்லிம் மக்களதும் விருப்பமுமாகும்.

> **முஸ்லீம் சந்தர்ப்பவாதத் தலைமைகளால் பதவிகளும் பணமும் மட்டுமே பெறமுடிந்தது.**

முஸ்லிம் தலைமைகள் செய்வது என்ன? முஸ்லிம்களின் அரசியல் தலைமை தென் பகுதி முஸ்லிம் உயர்-நடுத்தர, முதலாளிய வர்க்கங்களின் கையில் இருந்த 1980கள் வரையான காலத்தில் அவர்கள் சிங்களப் பேரினவாதத்தை அனுசரித்துப் போனது குறிப்பிட்ட வர்க்க நலன்களைப் பேணுகிற நோக்கிலேயே. இவ்விடத்துத் தமிழ்த் தேசிய முதலாளியத் தலைமைகளது நடத்தை வெளிவெளியாகத் தமிழ்த்தேசிய உணர்வுகளை வற்புறுத்தினாலும், திரை மறைவில் ஆளும் வர்க்கத்துடன் சமரசம் என்பதாகவே இருந்தது என்பதை நாம் மறக்கக் கூடாது.

கிழக்கு மாகாண முஸ்லிம் தேசியவாதத் தலைமை ஒன்று உருவான தொடக்க நிலையில், தென்பகுதி முஸ்லிம் தலைமை அதைத் தன் நலன்கட்கு மிரட்டலான ஒன்றாகக் கருதவில்லை. ஆனால், முஸ்லிம் காங்கிரஸ், மந்திரிப் பதவிகட்கும் அதிகாரத்தில் பங்குக்கும் போட்டிக்கு வந்த பின்பு, அகில இலங்கையிலும் முஸ்லிம்களின் தலைமைத்துவத்துக்கான போட்டியாக்கும் முறையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் புத்தளத்திலும் களுத்துறையிலும் வேட்பாளர்களை நிறுத்திய சூழ்நிலையில், முஸ்லிம் தலைமைகளிடையிலான மோதல் வலுத்தது. மறுபுறம் அஷ்ரஃபின் அகால மறைவின் பின்பு, கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பிளவுக்குக் கொள்கை அடிப்படையிலான எந்த நியாயமும் இல்லை என்பதை அண்மையிற் கூட அந்தந்தத் தலைவர்களே வற்புறுத்தியிருந்தார்கள். ஆயினும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஏற்பட்ட காலத்திலிருந்து முன்னுக்குப்



பின் முரணான போக்குகளையே எல்லோரிடத்தும் காண முடிகிறது.

விடுதலைப்புலிகளின் தலைவருடன் ஹக்கிம் அவசர அவசரமாக மற்ற முஸ்லிம் தலைவர்களைக் கலந்தாலோசியாமல் பேச்சுக்களை நடத்தி உடன்பாடு செய்ததும் அதன் பின்பு பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தினது பிரதிநிதிகளில் ஒருவராக மட்டுமன்றிக் கிழக்கின் முஸ்லிம்களது பிரதிநிதியாகவும் தன்னை அடையாளங்காட்ட முற்பட்டதும் அதனால் ஏற்பட்ட முறுகல்களும் ஊரறிந்தவை. அவரை முஸ்லிம்களின் தலைவராக ஏற்க மறுத்த தலைமைகள் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் முனைப்பில் செயற்பட்டன. ஹக்கிம் அத்தகையோருக்குப் போட்டியாகத் தன்னையும் தீவிர முஸ்லிம் தேசியத்தின் பிரதிநிதியாகக் காட்ட முற்பட்டாரே ஒழியத் தமிழ் மக்களுடைய பிரச்சினையின் தீர்வுக்கு அனுசரணையான முறையில் முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்க்கும் வழிகளைக் குறுகிய கால நோக்கிற் அணுக ஆயத்தமாக இருக்கவில்லை.

இங்கே கவலைக்குரிய ஒரு விடயம் நம் முன்னுள்ளது. தமிழ் மக்கள் பேரினவாத வன்முறைக்கு எதிராகப் போராடி வந்த சூழலில், ஒடுக்குமுறை போராக மாறியபோதுங்கூட அசட்டையாக இருந்துவந்த முஸ்லிம் தேசியமுதலாளி வர்க்கத் தலைமைகள், அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு கிட்டக்கூடிய ஒவ்வொரு தடவையும் அதைக் குழப்புகிற விதமாகக் கோரிக்கைகளை முன்வைப்பது ஏன் என்ற கேள்வி எழுகிறது. பிரேமதாசவின் காலத்தில் நடந்த தீர்வுக்கான ஆலோசனைகளின் போது முஸ்லிம் தலைமைகள் எவ்வாறு நடந்து கொண்டனவோ, அவ்வாறு அல்லது அதனினும் மோசமாகவே இப்போது நடந்துகொள்கின்றன. அவர்களது நோக்கம் என்ன?

முஸ்லிம்களின் தேசிய இனப் பிரச்சனை தமிழர்களினதை விடச் சிக்கலானது என்பது உண்மை. எனவே வடக்கு-கிழக்கு மாகாணத்து முஸ்லிம்களது பிரச்சனைகட்கான நியாயமான தீர்வை வலியுறுத்துவதுடன் முஸ்லிம் தலைமைகள் நிறைவு காண முடியுமா? வடக்கு-கிழக்குப் பற்றிக்கூட ஒரு தெளிவான பார்வை கிழக்கின் முஸ்லிம் தலைவர்களிடமும் இல்லை என்பது, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு முதல் தனியான முஸ்லிம் மாகாணம் வரையிலான குழப்பம் வரை நாளுக்கு நாள் வெவ்வேறு விதமாக முஸ்லிம் தலைவர்கள் பேசிவருவதிலிருந்தே தெரிகிறது.

அனைத்தினதும் முக்கியமாக, எந்தப் பேரினவாதக் கட்சியை அனுசரித்து நடக்க விரும்புகிறார்கள் என்பதைப் பொறுத்தும் எந்த விதமாக அரசாங்கத்தை மிரட்டினால் தமது தனிப்பட்ட நலன்களைப் பேணலாம் என்பதைப் பொறுத்தும் அவர்களது நிலைப்பாடு வேறுபடுகிறது.

இவை, ஒரு புறம், பாராளுமன்ற அரசியல் அதிகாரப் போட்டி சார்ந்த விடயங்களாக இருக்கலாம். மறுபுறம், தேசிய இனப்பிரச்சினை தீர்வதைத் தவிர்த்துச், சிங்கள-தமிழ் தேசிய இன முரண்பாட்டைக் கொதி நிலையில் வைத்திருப்பதன் மூலம், தங்களது அரசியல் முக்கியத்துவத்தைப் பேணும் ஒரு விஷமத்தனமாக நோக்கின் அடிப்படையிலானதாக இருக்கலாம். இதில் எது உண்மையாக இருந்தாலும், அமைதிக்கான இன்றைய வாய்ப்பைக் குழப்புவது, நாட்டின் எதிர்காலத்துடன் சூதாடுகிற காரியமே. இது நெருப்புடன் விளையாடுவதாகும். என்றாவது இவர்கள் தமது கைகளைத் தீய்த்துக் கொள்ளத்தான் போகின்றனர்.

இந்த பாராளுமன்றத் தலைமைகளின் சந்தர்ப்பவாதப் போக்குகளால் விரக்தியடைந்து உருவான மாற்று முஸ்லிம் அமைப்புக்களிடமும் நாடுதழுவிய முறையில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை நோக்கும் ஆற்றல் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களும் பல்வேறு சந்தர்ப்பவாதிகளுடன் கூட்டுச் சேருவதோடு அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் முயற்சிகட்குப் பங்களிக்குமளவுக்கு, ஆக்கமான முறையில் முஸ்லிம்களது நலன்கட்கமைய அவற்றை வளர்த்தெடுப்பதற்கு முற்படுவதாகத் தெரியவில்லை.

இன்றுவரை, வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம்களது இருப்பைப் பாதுகாப்பானதாயும் அவர்களது அடையாளத்தையும் சமூக விருத்தியையும் பேணுவதாயும் அமைக்க எவ்வகையான சுயாட்சி அமைப்புக்கள் தேவை என்பது பற்றி எந்த ஒரு முஸ்லிம் தலைமையும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. தென் கிழக்கில் சுயாட்சி என்ற கோரிக்கை, அது முழு இலங்கையிலும் உள்ள பிரச்சினையை எவ்வாறு தீர்க்கும் என்பது பற்றிய பார்வை இல்லாமலேயே முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்றுங்கூட, முஸ்லிம் தலைமைகள் நடுவே ஒரு உடன்பாடு காணும் முயற்சியில் கூடக், கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமைகள் தென்பகுதி முஸ்லிம் தலைவர்களைப் புறக்கணித்து விட்டதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. இதில் வியப்படைய எதுவும் இல்லை. இந்தத் தலைமைகளில் எதுவுமே உண்மையில் முஸ்லிம் சமூகத்தின் நன்மை பற்றிய அக்கறையுடையவையல்ல. அவர்களுக்குத் தேவையானது முஸ்லிம் மக்களின் வாக்குகள் மூலம் கிடைக்கும் பாராளுமன்ற நாற்காலிகளே.

கிழக்கில் தமிழ்-முஸ்லிம் முரண்பாடுகள் முறுகல் நிலையிலிருந்து அதற்கு உதவுகிறது. தெற்கில் பேரினவாதக் கட்சிகளது ஆதரவின்றி ஒரு ஆசனத்



தையும் வெல்ல இயலாத அவலம். இதற்கான விலையை சாதாரண முஸ்லிம் மக்கள்தான் கொடுக்க வேண்டியுள்ளது. முஸ்லிம் தேசிய இனத்தின் தலைமை பெருவணிகர்களதும் தரகர்களதும் கையில் இருக்கும் வரைக்கும் முஸ்லிம் சமுதாயம், தேசிய இனப்பிரச்சினையைப் பாவித்து குட்டை குழப்புகிற தலைமைகளின் கையில் பகடைக் காய்களாகவே பயன்படுத்தப்படும்.

முஸ்லிம் சமுதாயம் இன்று இஸ்லாமிய அடிப்படைவாதம் போன்ற பழமைவாதப் பிற்போக்குச் சிந்தனைகளின் பால் சிறிதுசிறிதாக ஈர்க்கப்படுவதற்கு முஸ்லிம் தலைமைகளின் அரசியல் துரோகமே காரணம். எவ்வளவுதான் முஸ்லிம் ஐக்கியம் பற்றி பேசினாலும் அமெரிக்காவை எதிர்த்துப் பேசவும் இஸ்ரேலுடன் சல்லாபம் செய்யும் பேரினவாதக் கட்சிகளைக் கண்டிக்கவும் திராணியற்ற தலைமைகளை முஸ்லிம் மக்கள் என்றாவது நிராகரித்தே ஆக வேண்டிவரும். அப்போது முஸ்லிம்களது தேசிய நலன்கள் தமிழ் மக்களினது தேசிய நலன்களை விட மோசமாகப் பாதிக்கப்படும் என்பதை முஸ்லிம் மக்கள் இப்போதே கணிப்பிற் கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தில் மார்க்ஸிய-லெனினிய வாதிகள் முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினை பற்றி முன்வைத்துள்ள ஆரோக்கியமான சிந்தனைகளை மேலும் வளர்த்து முஸ்லிம்கள் நடுவே முன்னெடுத்துச் செல்லும் தேவை பெரியதாகும்.

~ மோகன் ~

> **தமிழ்-முஸ்லீம் தேசியவாதத் தலைமைகளால் பேரினவாதத்தையும் ஏகாதிபத்தியத்தையும் பொது எதிரியாக அடையாளம் கண்டு ஐக்கியப்பட்டால் மட்டுமே சிறந்த எதிர்காலத்தை தோற்றுவிக்க முடியும். அவ்வாறு செயல்படுவார்களா என்பதே கேள்வியாகும்.**

படிப்பகம்

www.padippakam.com



# குற்றச் செயல்களும் ஊற்று மூலங்களும்

நாடு பூராவும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், போதைப் பொருள் பாவனை, பாலியல் வல்லுறவு சிறுவர் துஷ்பிரயோகம் என்பன நாளாந்த நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவது முதல் சொந்த மகளைத் தந்தை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவது வரையான அதிர்ச்சிக்குரிய செய்திகளை நாளாந்தம் பார்க்க முடிகிறது. ஆயுதப் பாவனை சர்வசாதாரணமாகியுள்ளது. பாதாள உலகம் என்பது பிரபலமாகி நிற்கிறது.

முடிவற்றவையாகி நாளாந்தம் வளர்ந்து செல்லும் இச் சமூகவிரோதச் செயல்களும் சீரழிவுகளும் இடம்பெறுவதற்கு காரண காரியங்கள் எவை என்பதே சமூகப் பொறுப்புடன் கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும். இக் கேள்விக்கு சிலர் பதில் கூறும் போது பழைய மரபுகள். சிந்தனைகள் நல் ஒழுக்கங்கள் சமூகத்தில் பின்பற்றப்படவில்லை என ஆதங்கம் தெரிவிக்கின்றனர். வேறு சிலர் மதவழிபாடுகளும் நற்போதனைகளும் பெரியோர் சொற்கேளாமையும் வளர்ந்து வரும் அவலங்களுக்கு காரணம் என்று கூறுகிறார்கள். எனவே மதம். கடவுள். போதனைகள் மீதான நம்பிக்கையை வளர்ப்பதால் இன்றைய சமூகவிரோத சீரழிவுப் போக்குகளைத் தடுக்கலாம் என்கிறார்கள்.

இன்னொரு புறத்தில் சட்டங்களை மேலும் இயற்றி அல்லது உள்ள சட்டங்களை உரியவாறு அமுல்படுத்தி குற்றங்களைக் கட்டுப்படுத்தி ஒழிக்கலாம் என்கிறார்கள். இதற்கு பொலீஸ் திணைக்களம் பல திட்டங்கள் அமுல்படுத்தி வருவதாகவும் அறிக்கைகள், செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் அதே பொலீஸ் திணைக்களம் வெளியிட்டு வரும் புள்ளிவிபர அறிக்கையில் இடம்பெற்ற கொலை. கொள்ளை. ஆட்கடத்தல். போதைப் பொருள் பாவனை. பாலியல் வல்லுறவு என்பன மாதாமாதம் அதிகரித்து வருவதையே எடுத்துக் காட்டகின்றன.

அவ்வாறாயின் இக் குற்றச் செயல்களும் சமூகச் சீரழிவுகளும் வளர்ந்து செல்வதற்குக் காரணங்கள் எவை என்பது கண்டு கொள்ளப்பட வேண்டியதாகும். அவற்றுக்குரிய ஊற்று மூலங்களைக் கண்டு கொள்ளாது வெவ்வேறு நியாயங்கள் கூறுவது மேற்படி குற்றச் செயல்களையும் சமூகச் சீரழிவுகளையும் மூடி மறைந்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவுவதாகவே அமைந்து கொள்கின்றது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் சொத்துடமை சேர்க்கும் சுயநலச் சிந்தனையும் கொண்ட சமூக அமைப்பை அறிவியல் ரீதியாகக் கண்டு கொள்வது அவசியமாகும். மனிதர்களை மனிதர்களாக மதித்து மனித வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் ஒரு தெளிவான சமூகக் கருத்தியல் இன்றைய சமூக அமைப்பிலே காண முடியாது. எவ்வளவுக்கு சீரழிந்து கேடுகெட்டிருந்தாலும் இன்றைய அமைப்பு முறையைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே ஆளும் வர்க்க அரசியல்வாதிகள் முதல் மதவாதிகள் வரை ஈடுபட்டு வருகிறார்கள். அதனால் சமூகச் சீரழிவுகளினதும் குற்றச் செயல்களினதும் பங்குதாரர்களாக இருந்தும் வருகின்றனர்.

ஆலைகள், நிறுவனங்கள். வர்த்தகம். வியாபாரம் என்பனவற்றின் மூலம் சுரண்டிச் சொத்துடமை பெருக்கும் பெருமுதலாளிகள் இன்றைய சமூகத்தில் உயர் அந்தஸ்த்துடன் இருந்து வருகிறார்கள். இவர்களின் அரசியல் பிரதிநிதிகளாக உள்ள அரசியல் தலைவர்கள் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர் என்போரும் பெரும் சொத்து, சுகம் படைத்தவர்களே. இவர்களால் கட்டிக் காத்து வழி நடாத்தப்படும் இன்றைய சமூக அமைப்பில் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படுவதில்லை. எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கும் மார்க்கமும் இவர்களிடம் கிடையாது. அதேவேளை மக்களை ஏமாற்றி திசை திருப்பி வைத்திருக்க கருத்தியல் பண்பாட்டு சீரழிவுகளை பல்வேறு வழிகளில் ஊக்கப்படுத்தியும் வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடிகளும் அரசியல். சமூக, பண்பாட்டு அடிப்படைகளும் மாற்றப்படாதவரை அவைகளே குற்றச் செயல்களினதும் சமூகச் சீரழிவுகளினதும் ஊற்று மூலங்களாக இருந்து வருகின்றன. ஒவ்வொரு குற்றச் செயலையும் சமூகச் சீரழிவையும் தனிமனிதர்களின் தவறுகளாக மட்டும் கொள்வது பிரச்சினைகளின் ஊற்று மூலங்களைக் காணத் தவறுவதாகும். பெரும்பாலான குற்றச் செயல்கள் சீரழிவுகளுக்குப் பின்னால் இருந்து வரும் பொருளாதார. சமூக. பண்பாட்டு அவலங்களுடன் அவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்கும் போதே சமூக அடிப்படைகளுடன் அவை தொடர்புபட்டிருப்பதைக் காண இயலும். உதாரணமாகப் பாதாள உலகக் குழுக்களின் தோற்றம், வளர்ச்சிக்கு தாராள பொருளாதாரக் கொள்கையும் யுத்தமும் பண்பாட்டுச் சீரழிவுகளும் காரணமாகின என்பது ஆழமாகப் பார்க்கப்படல் வேண்டும். இவ்வாறே ஏனைய விடயங்களையும் காணுதல் வேண்டும். எனவே சமூக அமைப்பை வலிமையான மக்கள் போராட்டங்களின் மூலம் மாற்றியமைக்காமல் சட்டங்களாலோ. மத போதனைகளாலோ, தண்டனைகளாலோ மட்டும் அவற்றை மாற்றியமைக்க முடியாது.

# யாழ் குடாநாட்டு இயற்கை வளங்கள்

**இயற்கைவள ஆர்வலர் க. நடனசபாபதி**

**ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழ் நுகர்வுப் பண்பாட்டின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்த உள்ளூர் வளங்களை உரிய வழிகளில் அபிவிருத்தி செய்து பயன்படுத்தல் வேண்டும். அதேவேளை அவசியமற்ற அந்நியப் பொருட்களின் பாவனையை நிராகரிக்க வேண்டும்.**

## சூரிய சக்தி

இது எமக்கு இலவசமாகக் கிடைக்கும் ஒரு சக்தியாகும். இதனை முற்காலத்தில் பெரும் அளவில் மக்கள் பயன்படுத்தினர். உதாரணமாக மீன் தொழிலில் ஈடுபடுவோர் தம்மிடம் மேலதிகமாக இருக்கின்ற மீனைச் சேமிக்க சூரிய ஒளியில் உலர்த்தி கருவாடு தயாரிக்கின்றனர். இதே போலவே வத்தல், வடகம் ஆகியவையும் சூரிய வெப்பத்தில் உலர்த்திக் தயாரிக்கபடுகின்றன. இதே போலவே சலவைத் தொழிலில் ஈடுபடுவோர் ஈர ஆடைகளை உலர்த்த சூரிய வெப்பத்தையே துணைகொள்கின்றனர். உப்பளங்கள் கூட கடல்நீரிலிருந்து உப்பைப் பெற சூரிய வெப்பத்தையே நாடுகின்றன. சூரிய வெப்பம் உணவுப் பொருள்களைப் பழுது அடையாது காக்கவும் உதவுகிறது. இது சூரிய வெப்பத்தை நேரடியாகப் பெற்றுப் பயன்படும் முறைகளாகும். தாவரங்களும் ஒளித்தொகுப்பு மூலம் தமது உணவைத் தயாரிக்க சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்துகின்றன. இன்று சூரிய சக்தியைச் சேமித்துத் தேவைக்குப் பயன்படுத்த சூரிய கலங்கள் (ளுழ-டயச உநடடள) நடைமுறைக்கு வந்துள்ளன. பலரும் மற்றைய நாடுகளில் இக் கலங்களை முழுமையாகப் பயன்படுத்தி வெப்ப சக்தியைப் பெறுகின்றனர். நாமும் இந்த முறையைக் கையாளத் தொடங்கினால் வெப்ப சக்தியை சூரிய சக்தியிலிருந்து பெறவியலும்.

## வளிச்சக்தி :

காற்று எமக்கு இலவசமாகக் கிடைக்கும் ஒரு சக்தியாகும். காற்றுச் சக்தியில் இயங்கும் காற்றாடிகளைக் கொண்டு மின்சக்தியைப் பெறும் உத்தி பல நாடுகளிலும் இக்காலத்தில் கைக்கொள்ளப்படுகிறது. வெட்ட வெளிகளில் இந்தக் காற்றாடிகளைப் (wind mills) பொருத்துவதினால் குறைந்த செலவில் மின் சக்தியைப் பெறலாம். இத்திட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதே போன்று காற்றாடி களைக் (wind mills) கொண்டு நீரை வயல்களுக்கு இறைக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்த இலங்கை நீர்பாசனத் திணைக்களம் 1940ம் ஆண்டு இறுதிப் பகுதியில் தொண்டைமானாறு நன்னீர் ஏரிப் பகுதியில் ஏற்பாடு செய்திருந்தது. இதே முறையில் நீரை வயல்களுக்குப் பாய்ச்ச காற்றாடிகளைப் பொருத்தும் திட்டத்தை ஊரெழுபொக்கணைப் பகுதியிலும் நடைமுறைப்படுத்த திட்டம் வகுத்தது. இதே முறையை பெரும் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்வோர் நீர்பாசனத் திட்டத்திற்குப் பயன்படுத்தினால் இவ்விவசாயிகளின் நீர் இறைப்புச் செலவு பெருமளவு குறையும்.

வளிச்சக்தியைக் கொண்டு பாய்க்கப்பல்களை இயக்கும் முறைதான் அன்று மாலுமிகளால் கையாளப்பட்டது. அன்று பருத்தித்துறை, வல்வெட்டித்துறையிலிருந்து பாய்க்கப்பலொன்று அமெரிக்கா சென்றதாகக் கூறுகின்றனர். இன்று கூட மேல்நாடுகளில் உல்லாசப் பயணிகளுக்காக பாய்க்கப்பல்கள் கடலில் செல்வதைக் காணலாம். இத்திட்டத்தைப் பரீட்சார்த்தமாக செயல்படுத்த பயணிகள் பொதிக் கப்பல் ஒன்றை பருத்தித்துறை திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு செல்ல வழிவகுத்தால் எரிபொருள் செலவை ஓரளவு மட்டுப் படுத்தலாம். அந்நாட்களில் தென் இந்தியா. பர்மா. மலேயா. தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றவும் இறக்கவும் வடபிரதேச மக்கள் பாய்க் கப்பல்களே பயன்படுத்தினர் என்பது வரலாறு. இரண்டாம் உலகயுத்தம் ஆரம்பித்தவுடன் பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களையும் பிறபொருள்களையும் இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமை அரசாங்கத்தையே சார்ந்ததாயிற்று. இதன் காரணமாக அது நாள்வரை மாலுமிகளாகத் தொழில் பட்டோர் தமது வேலையை இழந்து நிர்க்கதியடைந்தனர். வேறு வழியின்றி தொடர்ந்தும் இத்தொழிலில் ஈடுபட்ட மாலுமிகள் 'கள்ளக் கடத்தல்காரர்கள்' என்னும் இழிவான பெயரால் அழைக்கப்பட்டனர். உண்மையில் இவர்கள் செய்து வந்தது மாலுமித் தொழிலைத்தான். ஆனால் உண்மையான கள்ளக் கடத்தல்காரர்கள் வேறிடங்களில் செல்வந்தர்களாக வாழ்ந்துவந்த 'பெரியோர்கள்'. இந்த உண்மை குடா நாட்டில் வாழ்ந்து வந்த மக்களுக்கே தெரியாது. இன்று கூட பங்களா தேசத்து சிட்டகொங் மாலுமிகளுக்கு அடுத்தபடியான உயர் இடத்தை வட பிரதேச மாலுமிகள் வகிக்கிறார்கள். உலக கப்பல் ஓட்டுநர் தொழிலில் எமது பிரதேச மாலுமிகளைக் கொண்டு பாய்க்கப்பல்களை இயக்கும் சேவையை வெற்றிகரமாக மேற்கொள்ளலாம்.

## நிலவளம் :

குடா நாட்டின் பெரும் பகுதியை ஆக்கிரமிப்பது செம்மண் நிலமே. செம்மண் இரும்பு மூலகத்தைக் கொண்டது. இந்த நிலம் பயிர்ச் செய்கைக்குப் பெரிதும் பொருத்தமானது. இந்நிலத்தில்தான் மிளகாய். வெங்காயச் செய்கையை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். வெங்காயத்தை நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைக்கும் உத்தியை விவசாயத் திணைக்கள விஞ்ஞானிகள் உற்பத்தியாளருக்கு அறிவுறுத்த வேண்டும். இதே போன்று மிளகாயைச் சேமித்து வைக்கவும். இவை சார்ந்த உணவுப் பண்டங்களைத் தயாரித்து விநியோகிக்கும் துறையை அபிவிருத்தி செய்யலாம். குடாநாட்டின் வேறு பகுதிகளில் வண்டல். களிமண் காணப்படுகிறது. இம்மண்ணில் சிலவிதமான பயிரினங்கள் தாம் செழித்து வளரும். இவற்றை இனம் கண்டு பயிர்செய்ய விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். களி மண்ணைக் கொண்டு மட்பாண்டங்கள் செய்யும் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர் இக்காலத்தில் மக்கள் உலோகத்திலான பாத்திரங்களையே பயன்படுத்த ஆரம்பித்துவிட்டதனால், மட்பாண்ட உற்பத்தித் தொழிலில் ஆர்வம் இழந்து விட்டனர். ஆகவே இத்தொழிலாளருக்கு களிமண்ணைக் கொண்டு செங்கல். ஓடு உற்பத்தித் தொழிலுக்கு ஊக்குவிக்க வேண்டும். செங்கல் உற்பத்தி செய்யக்கூடிய மண்வளம் குடாநாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது. இக்கட்டுரை ஆசிரியரின் பருத்தித்துறை தம்பசெட்டியிலுள்ள வீடு 1934ம் ஆண்டு செங்கல்லால் கட்டப்பட்டது. வீடு கட்டத் தேவையான செங்கல்லை வீட்டிற்கு அருகாமையிலுள்ள மண்ணைக் கொண்டு சூளை அமைத்துத் தயாரித்தார்களாம். ஆகவே மாயக்கை போன்ற பகுதிகளில் செங்கல் உற்பத்தித் தொழிலை நிறுவலாம். இதோடு வீடுகள் கட்டுவதற்கு கொழும்புப் பகுதிகளில் செங்கல்லைப் பயன்படுத்த யாழ்பிரதேச மக்களை ஊக்குவித்தால் செங்கல் தொழிலை வளர்க்க உதவும். இதனால் பெருமளவு சுண்ணாம்புக் கல்லும் சிமெந்தும் மீதப்படும். நாம் பெருமளவு சுண்ணாம்புக் கல்லையும் சிமெந்தையும் வீடுகள் கட்டுவதற்கு வீணடிக்கிறோம். இவற்றைக் கொண்டு வீடுகளைக் கட்டுவதற்கு மக்கள் கூறுவது "வீடு உறுதியாய் இருக்கும்" இப்படிக் கட்டப்பட்ட அநேக வீடுகள் இன்று யுத்தத்தால் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போன காட்சிகளைக் காண்கிறோம். வெளிமதிற் சுவர்களைக் கூட சுண்ணாம்புக் கல்-சிமெந்து கலவை கொண்டே அமைக்கிறோம். இத்தகைய மதிற்சுவர்களைக் காண முடியவில்லை.

## கண்டல் நிலம் :

யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள உப்பேரிகளின் அருகே கண்டல் நிலம் காணப்படுகிறது. இது பெரும் அளவான பிரதேசத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இவை வேலிகளுக்குப் பயன்படும் அலம்பல் காடுகளாக விளங்குகின்றன. இத்தகைய கண்டல் நிலம் சிறப்பாக அம்பன். குடத்தனையிலிருந்து செம்பியன்பற்றுவரை காணப்படுகிறது. இவற்றிற்கு அருகாமையில் காணப்படும் நாவல்மரம் வடமராட்சிப் பகுதி மக்களுக்கு எரிசக்தி தரும் விறகாகப் பயன்படுகிறது. நாவற் பழங்களை சிறுவர் முதல் மூத்தோர்வரை சுவைத்து உண்பர். நாவற்பழங்களைக் களியாகவும் சுவைதரும் பானங்களாகவும் மாற்றும் உபாயங்களை மக்கள் அறியச் செய்தால் பெரும் அளவு பொருளைச் சம்பாதிக்கக் கூடியதாக இருக்கும். சாவகச்சேரிப் பகுதியைச் செல்லமாக "குளைக்காடு" என்று அழைப்பர். அங்கு மண் பசுமை கலந்த நிறத்தை உடையவை. நீரில் இந்த மண் கரைந்தால் நீர் சிவப்பு நிறமடைந்து விடும். இந்நீரில் கழுவப்பட்ட ஆடை அனைத்தும் கபிலநிறமாக மாறிவிடும். இது இம்மண்ணின் இயல்பாகும். இந்த நிறமாற்றத்தை போக்க சேகரித்து வைத்துள்ள நீரில் படிகாரத் தூளைத் தூவிவிட்டால் சிறிது நேரத்தில் நிறமாற்றம் ஏற்படுத்திய துணிக்கைகள் அடிப்புறத்திற்குச் சென்று நீர் தெளிந்த நீராகத் தோற்றமளிக்கும். இந் நீரில் தோய்த்த ஆடைகளில் நிறம் படிவதில்லை. இப் பிரதேச மண்ணில் உற்பத்தியாகக் கூடிய உயர் ரகப் பயிரைச் சிபாரிசு செய்தால் விவசாயிகள் இப்பயிர்களை பயிரிட முயல்வார்கள். இது பயிர்ச் செய்கை அலுவலர்கள் செய்ய வேண்டியது ஆகும். இப்பிரதேசத்தில் களிமண் பாங்கான இடங்களில் செங்கல் தொழிற் சாலைகளை நிறுவலாம். உவர் நிலங்களில் விளையக்கூடிய நெல்வகைகளை விவசாயத் திணைக்களம் இதற்கு வழி காட்ட வேண்டும். இந்த வழிகாட்டலில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டால் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாறும்.

# கோவில்-கேணி-சாதி



தாங்கள் மட்டுமே நீந்திக் குளித்து கும்மாளமிட்டு வந்த அந்த கோவில் கேணியில் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் சிலர் நீந்திக் குளித்து கொண்டதைப் பொறுக்கமாட்டாது கும்பலாகச் சேர்ந்து அவ் இளைஞர்களைத் தாக்கிக் கொண்டது ஒரு சாதி வெறிக் கூட்டம். பதிலுக்குத் தாழ்த்தப்பட்ட இளைஞர் களும் நியாயம் கோரித் தாக்குதலில் ஈடுபட்டனர். இச் சம்பவத்தின் பின் மேற்படி கேணி முட்கம்பி போட்டு தாழ்த்தப்பட்டவர்களைக் குளிக்க விடாது தடுக்கப்பட்டுள்ளது. இக்கோவில் வடபுலத்து வலிமேற்கில் சுழிபுரம் பகுதியில் அமைந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது வடபுலத்துக் கோவில்கள் வெளிநாட்டுப் பணம். இந்து கலாசார அமைச்சர் பணம் என்பவற்றின் மூலம் ஆடம்பரக் கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றமையைக் காணலாம். கோபுரங்கள் எழுகின்றன. மதில்கள் உயர்கின்றன. வர்ணப் பூச்சுக்கள் கண்களைப் பறிக்கின்றன. திருவிழாக்கள் அமோகமாக இடம் பெறுகின்றன. உபதேச சொற்பொழிவுகள். பட்டி மண்டபங்கள். பண்பாடு பற்றி வாய்கிழியக் கத்தல்கள் வானைப் பிளக்கின்றன. ஆனால் கோவில்கள் அமைந்துள்ள அதே ஊரின் ஒரு பகுதி மக்கள் சாதியின் பெயரால் தள்ளி வைக்கப்பட்டு பாகுபாடு காட்டப்பட்டு 'அதுகள்'. 'இதுகள்' என அழைக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர். வடபுலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஊடே சாதி ஒழிந்து விட்டது என்று கூறும் கனவான்களுக்கு இது சமர்ப்பணம். முட்கம்பி சுற்றி வர அடிக்கப்பட்ட கேணியையும் கட்டிடம் எழும்பும் கோவிலையும் படத்திற் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# யாழ் நகரில் புதிய - ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு விழா

புதிய-ஜனநாயகக் கட்சியின் 25வது ஆண்டு (1978-2003) விழா வெகு சிறப்பாக 06.07.2003 அன்று யாழ்ப்பாண நகரத்தில் நடைபெற்றது. யாழ்-ப.நோ.கூ.ச. கேட்போர் கூட மண்டபத்தில் முழு நாள் நிகழ்ச்சியாக இடம்பெற்ற இவ்விழாவில் ஐந்நூறு பேரில் இருந்து எண்ணூறு பேர் வரை கலந்து கொண்டனர். இன்றைய வடபுலச் சூழலில் இவ் எண்ணிக்கையினர் கலந்து கொண்டமை அரசியல் முக்கியத்துவம் மிக்கதாகும். மலையம், கொழும்பு, மட்டக்களப்பு, வவுனியா பிரதேசங்களில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட ஆண்கள்-பெண்கள், இளைஞர்-யுவதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். வடபுலத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து பெருந்தொகை மக்கள் மிகுந்த உணர்வோடும் உற்சாகத்தோடும் வருகை தந்து முழு நாள் நிகழ்ச்சிகள் முடியும் வரை பங்கு கொண்டிருந்தனர்.

அன்று காலை பத்து முப்பது மணிக்குக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள் விழா மேடையில் புரட்சிகர வணக்கம் தெரிவித்து நிற்க மக்கள் எழுந்து நின்று கரகோஷம் செய்தனர். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் இவ் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவைத் தலைமை தாங்கி தொடக்க உரை நிகழ்த்தி தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கட்சியின் உயிர் நீத்த தோழர்களுக்கும் மக்களுக்காக உயிர், உதிரம் ஈய்ந்த தியாகிகள், போராளிகள் அனைவருக்காகவும் இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அரசியல் குழு உறுப்பினர் தோழர் க.தணிகாசலம் வரவேற்புரையை நிகழ்த்தினார். அதன் பின் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் இ.தம்பையா ஆரம்ப உரையை ஆற்றினார்.

அவர் தனது உரையில், கட்சி கடந்த 25வருடங்களில் மாக்சிச-லெனினிச-மாஓசேதுங் சிந்தனை வழி நின்று உறுதியான கொள்கை நிலைப்பாட்டில் செயல்பட்டு வந்தமை பற்றி விபரித்துக் கூறினார். அத்துடன் தொடர்ந்தும் எமது கட்சி எதிர்காலத்தில் ஒரு புரட்சிகரக் கட்சியாக உழைக்கும் மக்கள் மத்தியிலும் அடக்கப்படும் தேசிய இனங்கள் மத்தியிலும் செயல்படும் என்ற நம்பிக்கை வாக்குறுதியினை வழங்கினார். அத்துடன் இன்றைய நெருக்கடி மிக்க சூழலில் கட்சியின் அரசியல் நிலைப்பாடும் திசை மார்க்கமும் நான்காவது தேசிய காங்கிரஸ் வகுத்த பாதையில் முன்னெடுக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டினார். இன்றைய தேசிய, சர்வதேசிய சூழலில் கட்சி மிகுந்த நிதானத்துடனும் தூர நோக்குடனும் செயல்படுவதையும் எடுத்துரைத்தார்.



கட்சியின் 25வது ஆண்டு விழா மேடையில் மத்திய குழு தோழர்கள் அமர்ந்திருப்பதையும் தோழர் தணிகாசலம் வரவேற்புரையை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

அவரது உரையைத் தொடர்ந்து மாக்சிச-லெனினிச நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதியாக இருந்தும் எமது கட்சியுடன் இணைந்தும் செயல்பட்டு வந்த ஆறு மூத்த தோழர்கள் செஞ்சால்வை அணிவித்து கட்சியின் நட்சத்திரம் அரிவாள் சம்மட்டி பொறித்த நினைவு விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். தோழர்கள் சி.சிதம்பரன் (வயது 84), நா.முத்தையா(மேன்-81), மு.கந்தப்பிள்ளை(74), மு.கணபதிப் பிள்ளை(70), இ.கா.சூடா தணி(68) ஆகியோர் அவர்களது போராட்ட கால நிலைப்பாடுகள், மக்களுக்கு ஆற்றிய சேவைகள், கட்சியுடனான உறவு என்பன நினைவு கூரப்பட்டு புரட்சிகர வாழ்த்துக்களுடன் கௌரவிக்கப் பட்டனர். அர்சியல் குழு உறுப்பினர் தோழர் சோ.தேவராஜா விபரங்களைத் தொகுத்து வழங்க மத்திய குழுத் தோழர்கள் விருதுகளை வழங்கினர். அரசியல் குழு உறுப்பினர் தோழர் இராஜேந்திரன் விழா நிகழ்ச்சிகளை வழி நடாத்தினார்.



விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்

அடுத்து கவிஞர் தணிகையன் தலைமையில் "இன்னோர் உலகிற்காய் எழுவோம்" என்னும் தலைப்பில் கவி அரங்கம் நடைபெற்றது. மூத்த கவிஞர்கள் இ.முருகையன், சோ.பத்மநாதன், கல்வயல் வே.குமாரசுவாமி, ஈழத்து தேவன்பூதனார் உட்பட புதிய தலைமுறைக் கவிஞர்கள் சிவ இராஜேந்திரன், திருமதி நே.ரஞ்சிதமலர், இராகலை பன்னீர், மு.நாகராஜன், மாவை வரோதயன், பத்தனையூர் தினகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதியபோசனத்திற்குப் பின் ஆரம்பமாகிய பிற்பகல் நிகழ்ச்சிகளில் கவிதா நிகழ்வு, இசைப் பாடல்கள், அரங்க ஆற்றுகை என்பன இடம்பெற்றன. இவற்றில் மலையக, யாழ்ப்பாண, கொழும்பு பாடகர்கள் மற்றும் கலைஞரகள் பங்கு கொண்டனர். மலையக இசைக் குழுவினர் சிறப்பான பின்னணி இசை வழங்கினர்.

பி.ப.3.30 மணிக்கு வாழ்த்துரைகளும் கருத்துரைகளும் ஆரம்பித்தன. வெளி நாடுகளின் சகோதரக் கட்சிகளின் வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. கட்சியின் அழைப்பை ஏற்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் அமைப்பாளர் தோழர் வாசுதேவ நாணயக்கார, அதன் பொதுச் செயலாளர் தோழர் பேர்ஸி விக்கிரமசேகரா, வனச அமைப்பைச் சேர்ந்த தோழர்கள் ஞானரத்தினா, நிஹால் ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர் வாசுதேவ நாணயக்கார தனது உரையில், நாடு ஒரு பிரதான கால கட்டத்தில் வந்து நிற்பதைச் சுட்டிக் காட்டி தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக மாற்றமடைய வேண்டியதன் தேவையையும் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார். அத்தகைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கு தேசிய இனங்களின் ஐக்கியம் அவசியமானது என்பதை வலியுறுத்திய வாசுதேவ அதனைச் சாத்தியமாக்குவதற்கு வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படுவது பிரதானமானதாகும் என்றார். அதேவேளை முஸ்லீம், மலையகத் தமிழர்களின் உரிமைகள் உரியவாறு அரசியல் தீர்வாக வழங்கப்பட வேண்டும் என்றார். அந்த வகையில் தற்போதைய சூழலில் அழிந்து காணப்படும் வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து புதிய-ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் 25வது ஆண்டு விழாச் சிறப்புரையை நிகழ்த்தினார். கட்சியும் அதன் சகல மட்டத் தோழர்களும் கஷ்டம் நிறைந்த நெருக்கடிகளும் சவால்களும் கொண்ட கால் நூற்றாண்டு காலத்தை மாக்சிச-லெனினிச-மாஓசேதுங் சிந்தனை வழியிலான உறுதிப்பாட்டுடன் கடந்து வந்த புரட்சிகர நினைவுகைள மீட்டுக் கூறினார். கொள்ளை, லட்சியம், பற்றுறுதியுடன் கட்சி வடக்கு-கிழக்கு, மலையகம், கொழும்புப் பிரதேசங்களில் வளர்ச்சி பெற்று வந்துள்ளமையைத் தனது சிறப்புரையில் குறிப்பிட்டார். பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்த்தும் ஏகாதிபத்திய ஊடுருவல்களை அம்பலப்படுத்தியும் யுத்தத்திற்கு எதிராகவும் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வையும் வலியுறுத்தி கட்சி முன்னெடுத்து வந்தவற்றைத் தனது சிறப்புரையில் தோழர் செந்திவேல் விபரித்தார். கட்சி தொடர்ந்தும் வெகுஜனப் புரட்சிகரப் போராட்ட மார்க்கத்தில் உறுதியாகச் சென்று அதன் உயர்ந்த கட்டப் போராட்ட நிலைப்பாட்டை எடுக்கும் என்பதைச் சுட்டிக் காட்டிய அவர் பேரினவாத ஒடுக்குமுறை, அமெரிக்காவின் உலக மேலாதிக்கம், இந்திய பிராந்திய மேலாதிக்கம், ஏகாதிபத்திய உலகமயமாக்கல் என்பவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து போராடும் என்ற உறுதிப்பாட்டை முன் வைத்தார். தற்போதைய பிரதான முரண்பாடாகவும் ஒடுக்குமுறையாகவும் வளர்ந்து நிற்கும் தேசிய இனப் பிரச்சனைக்கும் பேரினவாத ஒடுக்குமுறைக்கும் எதிரான இன்றைய சமாதானப் பேச்சுவாரத்தைச் சூழலில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சித் தீர்வைக் கட்சி வலியுறுத்தி அதற்கான வெகுஜனப் போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதையும் தெளிவுபடுத்தினார். அதேவேளை நான்காவது மாநாட்டில் வகுத்த மார்க்கத்தின் அடிப்படையில் வர்க்க, இன, சாதிய, பெண் ஒடுக்குமுறைகளை எதிர்த்த போராட்ட மார்க்கத்தில் கட்சி புரட்சிகரப் பயணத்தைத் தொடரும் என்ற திடசங்கற் பத்தை இவ் 25வது ஆண்டு விழாவில் கட்சியின் மத்தியகுழு சார்பாக முன்வைப்பதாகவும் தனது சிறப்புரை முடிவில் கூறினார்.

மேலும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்கள் சோ.தேவராஜா, சி.நவரத்தினம், சி.இராஜேந்திரன் மத்திய குழு உறுப்பினர்கள் சி.பன்னீர்செல்வம், கா.கதிர்காமநாதன், எம். மகேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். நன்றியுரையை மத்திய குழு உறுப்பினர் ஜெ.சற்குருநாதன் ஆற்றினார். மாலை 6.30 மணிக்கு மிகுந்த புரட்சிகர உற்சாக சூழலில் இவ் 25வது ஆண்டு விழா நிறைவெய்தியது.

மேற்படி விழாவில் கட்சியின் மூத்த தோழர்கள் 6 பேர் செஞ்சால்வை அணிவிக்கப்பட்டு கட்சியின் சின்னம் பொறிக்கப்பட்ட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை படத்தில் காணலாம்.













## வரி மன்னிப்பும் வர்த்தக திமிங்கலங்களும்

தேர்தல் காலங்களில் அரசுக்கு ஆதரவளித்தவர்களுக்கும், அரசாங்கத்தில் உள்ள பிரமுகர்களுக்கும் வரி மன்னிப்பு வழங்கி 5600 கோடி ரூபா கறுப்புப் பணத்தை சட்டரீதியாக்கிய பின்பும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய 2000 கோடி ரூபாவை வர்த்தகப் புள்ளிகள் பலர் கொடுக்க முன்வர வில்லை. இதில் விசேடம் என்ன வென்றால் இந்த 2000 கோடி ரூபாவின் பெரும் பகுதியை மக்களிடமிருந்து வர்த்தகர்கள் அறவிட்டு விட்டார்கள். ஆனால் அதை அரசுக்குக் கொடுக்கவில்லை என்பது தான் சிந்திக்க வேண்டியதாகும்.

மக்கள் மீது பல்வேறு சுமைகளைச் சுமத்தும் அரசாங்கம் பெரிய வர்த்தகர்களிடம் 7600 கோடி ரூபாவை கை விட்டு விட்டது. விவசாயிகளுக்கு உர மானியத்தை வழங்குவதில் தயக்கம் காட்டும் அரசு பெருவர்த்தகர்களுக்கும் பலதேசியக் கம்பெனிகளுக்கும் பல்வேறு சலுகைகளை வழங்கி வரும் அதே வேளை சாதாரண தொழிலாளி விவசாயிகளின் நலன்களுக்கு அநீதி இழைத்து வருகிறது.

இந்த அரசு யாரின் நலனைக் காக்கிறது என்பது புலனாகிறது.

வரி மன்னிப்புக்கான கால எல்லையை நீடித்ததற்கான காரணம் பெரும் புள்ளிகளான மந்திரிமார், எம்.பி.மார், வர்த்தகத் திமிங்கிலங்கள் தப்பிக் கொள்ளவே என்பது வெளிவரும் தகவல்களிலிருந்து புலனாகிறது.

## கடன்பளுவும் வாழ்க்கைச் சுமையும்

2002ம் ஆண்டு மார்ச் 31ல் உள்நாட்டுக் கடன் ரூபா. 84.350 கோடியாகவிருந்தது. அந்தக் கடன் 2003ம் ஆண்டு மார்ச் 31ல் 98.100 கோடி ரூபாயாக உயர்ந்தது.

அதேசமயம் வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன் 2002ம் ஆண்டு மார்ச் 31ல் 65.670 கோடி ரூபாவாகவிருந்தது. அது 2003 மார்ச் 31ல் 73.690 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. பெரும் ஆரவாரப்பட்ட யப்பான் மகா நாட்டின் பின் வருடமொன்றிற்கு சுமார் ஆயிரம் கோடி கிடைக்குமெனக் கூறப் படுகிறது. இது கடன் பழுவை மேலும் அதிகரிக்கும். தனிநபர் ஒருவர் எவ்வளவு கடனாளி என்பதை விரைவில் பிரதமர் அறிவிப்பார்.

ஆனால் அண்மையில் நிதி அமைச்சர் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளதாகவும் பணவீக்கம் குறைந்துள்ளதாகவும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியால் மக்கள் பயன்பெற்று வருவதாகவும் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாகவும் தப்புக் கணக்குக் காட்டி நிற்கிறார். இந்த லட்சக்கணக்கில் தான் அடுத்த வரவு செலவு திட்டத்திற்கு நிதி அமைச்சர் தாயாராகி வருகிறார். மக்கள் வாழ்க்கைச் செலவைத் தாங்கமுடியாது தவியாய்த் தவித்து நிற்கிறார்கள். சம்பள உயர்வு அடுத்த வரவு செலுவுத் திட்டத்தில் கிடைக்கலாம் என்ற நப்பாசையை நிதி அமைச்சர் கொடுத்து வருகிறார். அவ்வாறு வழங்கினாலும் வழங்கும் தொகையை விடப் பலமடங்கு விலை அதிகரிப்புகள் வேகமடையவே செய்யும். பதவிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் மக்களது வாழ்க்கைச் சுமையைக் குறைத்ததாக வரலாறே கிடையாது. அப்படி இருக்க தரகு முதலாளிகளின் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் உள்ளூர் மேட்டுக்குடி யினரின் நலன் பேணும் யூ.என்பி.யிடம் மக்கள் எதிர்பார்க்க எதுவுமே இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [16]

## தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை எது? கியூபப் பாதையா? இஸ்ரேலிய சியோனிசமா?

செண்பகன்

தமிழ் மக்கள் தமது பாரம்பரியத் தாயகத்தில் தன்மானத்துடனும் சுய கௌரவத்துடனும் இறையாண்மையுடனும் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அக்கறையில் சுயநிர்ணய உரிமை கோரி கடந்த ஐந்து தசாப்தங்களாகப் போராடி வருகின்றனர்.

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதிலிருந்து வெகுண்டெழுந்த தமிழ் மக்கள் வாழும் உரிமையையும் வாக்குரிமையையும் கூட இழக்க வேண்டி ஏற்பட்டது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது மக்களின் ஜனநாயக-மனித உரிமையையும் இறைமையையும் பேணுவதாகவும் அவற்றுக்கு ஊறு விளைக்காததாகவும் இருத்தல் வேண்டும்.

உலகம் முழுவதும் பரந்திருக்கும் பல்தேசியக் கொம்பனிகளுக்கு பாய் விரிக்கும் தேசமாகவோ, உள்ளுறையும் உறைவிடமாகவோ தமிழர் தேசம் மாற்றமடையுமெனில் தமிழர் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழும் விவசாயிகள்-மீனவர்கள்- தொழிலாளர்கள், பெண்கள் அனைவரும் கொம்பனிகளின் கொத்தடிமைகளாக மாற்றம் பெறும் அவலம் ஏற்படும்.

உலகெலாம் நிறைந்து வாழும் உலகத் தமிழர்களில் அங்கெல்லாம் தொழிலாளர்களாக வாழும் தமிழர்கள் தமது தாய்மண்ணை தரிசித்துச் செல்வதற்காகவும் தமது உறவுகளோடு அன்பை பகிர்ந்து கொள்ளவும் தமது வாழ்க்கையில் ஒரு தடவையோ இரு தடவையோ வந்து செல்லலாம். ஆனால் அகிலமெங்கும் பெரிய வியாபாரிகளாக முதிர்ச்சி பெற்ற உலகத்தமிழர் தமிழ் மண்ணின் உறவின் பெயரால் தமது வியாபாரத்தைப் பெருக்கி ஊரில் உள்ள நிலங்களை அபகரித்து இங்கு வாழும் மக்களையும் தமது கூலிகளாக்கும் அபிவிருத்திப் பணியில் தமது மூலதனத்தை குவிக்கும் தமிழ்க் கொம்பனிகளின் வேஷத்திலும் வந்துகொண்டிருக்கிறார்கள்.

தமிழர்களிலும் இரு தமிழர்கள் இருக்கிறார்கள். ஆண்ட பரம்பரைத் தமிழர்களின் வாரிசுகள். இவர்கள் யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் பணம் பண்ணி தம் வணிகத்தை வளமாக்கியோர். மற்றவர்கள் தமிழ் மக்கள் என்போர். இவர்கள் யுத்த காலத்தில் போராட்டத்திலும் நிலத்திலிருந்து நீங்காமல் தமது தொழில்களில் தரித்து நின்று சாவைச் சந்தித்தவர்களும் - தமது சொந்த ஊரில் வாழ முடியாது இடம்பெயர்ந்து-புலம்பெயர்ந்து அகதிகளாகவே தொடர்ந்தும் வாழும் தரித்திரர்களான சாதாரண பொதுமக்கள் ஆவர். இவ்வேறுபாட்டை நாம் சுரண்டும் வர்க்கம் - சுரண்டப்படும் வர்க்கம் என வகுக்கலாம். அல்லது முதலாளிகள்-உழைப்பாளிகள் என்று பேதப்படுத்தலாம்.

ஆண்டபரம்பரையினர் வணிகவர்க்கத்தினர்-முதலாளித்துவ சிந்தனை உடைய தமிழர்களை நாம் பொது மக்கள் எனப் பொதுப்பெயரில் அழைக்க முடியாதளவுக்கு அவர்கள் மேட்டுக்குடிசார் உயர்ந்தவர்களாவர். அவர்களது சிந்தனை- செயல் யாவும் உயர் வர்க்க முதலாளித்துவ சிந்தனையாகும். இவர்களது இலட்சியம் காசு பண்ணுவதேயாகும். இரத்த உறவை இனிக்கப் பேசி- 'தமிழ்' என்ற மொழியில் 'விஷம்' தடவி, மொழியின் நவீனத்துவம் பற்றியோ, தமிழின் புதுமையையோ, மக்களின் ஜனநாயகப் பண்பாட்டையோ, அரசியல்-சமூக மாற்றத்தைப் பற்றியோ அல்லது பொது நலனில் எவ்வித புரிதலுமோ இன்றி புலிகளுக்கு காசைக் காட்டி தமது காரியங்களைக் கச்சிதமாகச் செய்துமுடிக்கும் தமது கருமமே கண்ணாயினோர். இவர்கள் பெண்களை தமது பண்பாட்டின் சின்னங்களாக- இந்திய விலை உயர் சேலைகளாலும் தங்க ஆபரணங்களாலும் தமது நாளாந்த நிகழ்வுகளில் அலங்கரித்து- சடங்கு சம்பிரதாயங்களின் பேரில் கடவுளுக்கும் கைலாகு கொடுத்து தமிழ் மணம் பரப்பும் சமூக அக்கறையற்ற தமிழர்களாவர். இவர்களை நாம் மக்களாகக் கருதமுடியாது. இவர்கள் எமது சமூகத்தில் மிக மிகச் சிறுபான்மையினராகிய ஐந்து வீதத்திற்கும் உட்பட்டோரேயாவர். இவர்களது ஆடை அணிகலனும் ஆபரணச் சாத்துப்படிகளும் தமிழ்ப் பொது மக்களுக்குச் சாத்தியமற்றது. எனினும் இவர்களின் ஆதிக்கக் குணாம்சம்- பூகோள மயச் சிந்தனை பொதுமக்களாகிய சாதாரண தொழிலாளி வர்க்கத் தமிழரை ஆட்டிப்படைக்கிறது. ஊர் ஆலயங்களிலே கூட ஆண்டவனைத் தூக்கி வீதி வலம் வருவதற்கு 'தொண்டர் சபை' என்ற பெயரில் உள்ளூர் 'குறைந்த' சாதியினரை நுட்பமாகத் தவிர்த்தும் உள்ளூர் காசற்ற உழைப்பாளிகளை ஒதுக்கியும் மிக நுட்பமாக ஆண்டபரம்பரையின் அடாவடித்தனம் அதிகரித்துள்ளதெனலாம். இவர்களது பிள்ளைகள் தமிழ் பேசத் தெரியாதவர்களாகவும் அவ்வாறு பேசுவது அவமானமென்றும் வீட்டில் பேசும் தமிழை மட்டுமே கொச்சையாகப் புரிந்திருப்பதே இவர்களது ஆண்ட பரம்பரைப் பெருமையாகும். இந்த ஆண்ட பரம்பரையினரை அரவணைப்பதே தமிழர் தாயகத்தின் நோக்க மாயிருக்குமெனில் அது உயர்வர்க்கச் சார்பாகும்.

உயர்வர்க்கச் சிந்தனை படைத்தவர்களின் உபத்திரவங்களிலிருந்து உழைக்கும் வர்க்கத் தமிழர்கள் தமது சிந்தனையையும் செயலையும் தற்காத்துக் கொள்ளவேண்டியது தமிழ் மக்களின் தலையாயக் கட்டாயக் கடமையாகும். தமது உழைக்கும் வர்க்கக் குணாம்சத்தைப் பேணுவதும் தமது உறவுகளை-இரத்த உறவுகளுக்கப்பால் 'தனக்கெளிது சம்பந்தம்' என்பதுபோல் ஏற்படுத்தும் வர்க்க உறவும் தொடர்புமே உருக்கினையொத்த உறுதியைப் பெற உதவும் வர்க்கக் கண்ணோட்டமாகும்.

தமிழர் தேசியம் பழமைவாதச் சிந்தனைச் சிமிலிக்குள் தேக்கமடைந்து கிடப்பதிலிருந்து மீட்க வேண்டுமெனில் நவீனத்துவச் சிந்தனையாகிய மாக்ஸிசச் சிந்தனையும் நடைமுறையும் மட்டுமே தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கான மார்க்கமாக அமையமுடியும்.

உயர் வர்க்கத் தமிழர்களின் உன்னத இலட்சியம் என்பது தமிழீழம் இஸ்ரவேல் பாணியில் உருவாகி மலர வேண்டும் என்பதாகும். சோவியத் யூனியனின் வீழ்ச்சியைக் கண்டு மகிழும் கட்டுரைகளும் சோவியத்தின் வீழ்ச்சியைக் கண்டு அமெரிக்கப் பாணியில் குதூகலிப்பதும் இனமுரண்பாடுகளை முதன் முதலில் உலகில் பகை முரண்பாடு நிலையில் இருந்து விடுவித்து சிநேகபூர்வமான உறவை ஊட்டி வளர்த்து உருவாக்கிய முன்னுதாரணம் மிக்க சோவியத் புரட்சியின்-ஒக்ரோபர் எழுச்சியின் பாடங்களையும் கற்க வேண்டும் அதன் வீழ்ச்சியில் ஏற்பட்ட இனக் குரோதக் கோளாறுகளிலிருந்து விஞ்ஞானபூர்வமான மாக்ஸிச விளக்கங்களையும் கற்றுத்தேறித் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டுக்கும் செயற்பாட்டுக்கும் பிரயோகிக்கக் கூடிய வல்லமையைப் பெறுவதில் லெனினின் அரசியல் பாடங்களைப் பயில்வதன் மூலம் மட்டுமே உயர்வர்க்கத் தமிழ்த் தேசியக் குறுநலப்பித்திலிருந்து எமது சூழலையும் பண்பாட்டையும் மீட்க முடியும்.

இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியாவும் அமெரிக்காவும் யப்பானும் தத்தமது சுயநலத்தில் விலைபேசுகின்றன. தமிழ் மக்களிடையே இயக்க மோதல்களையும்- சிங்கள-தமிழ்- முஸ்லிம் மக்களிடையே இன வெறியையும் இனத்துவேசத்தையும் பல்வேறு உள்ளூர் அரசியல் தலைமைகளூடாகவும் விஷவலை விரித்து வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் முதல் பல்தேசிய நிறுவன முதலைகள் வரை ஊடுருவி உள்ளன.

இவ்வூடுருவலினை ஊடறுத்து விடுதலையை காணவேண்டுமெனில் அமெரிக்காவின் தென்கோடியில் கியூபு தேசம் தன் தேசிய விடுதலையைச் சாதித்து தனது தனித்துவத்தை நிலைநாட்டி அமெரிக்கத் தலைமையில் சர்வதேச சமூகத்தின் பொருளாதாரத் தடையை எதிர்கொண்டு தனது சொந்தப் பொருளாதாரத்தில் தன்னிறைவை நோக்கி நடை பயிலும் பொருளாதாரத் திட்டங்களுடன் உயிர் பிழைத்தமை மட்டுமன்றி ஏகாதிபத்திய அமெரிக்காவுக்கு எதிராகச் சவாலாக விளங்குவதும் இன்றைய உலகில் மிக முக்கியமான முன்னுதாரணமாகும்.

கியூபத் தலைவர் ஃபிடல் கஷ்ட்ரோவையும் கியூபத் தேசிய விடுதலைப்போராட்ட மார்க்கத்தையும் தமிழர் தேசியம் பின்பற்ற முயலுமா என்பதே என்றைய கேள்வியாகும்.




## மதவாதத்தின் எழுச்சிக்கு மாக்ஸியம் முகங் கொடுக்குமா?

"மதம் மக்களின் அபின்" என்ற நன்கறியப்பட்ட கூற்று, அபின் கெடுதி மிக்க பொருளாக அறியப்படாத ஒரு காலத்தில் அது எப்படி நோயைத் தீர்க்காமல் நோயால் ஏற்படும் உபாதையிலிருந்து மட்டும் தற்காலிக நிவாரணம் தருகிறதோ அவ்வாறே மனித நேயமற்று வர்க்கச் சுரண்டலுக்குட்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மதம் ஆறுதல் தருகிறது என்ற பொருளில் மாக்ஸால் மொழியப்பட்டது. அது பொருத்தமான உவமை.

அதற்குப் பின்பு அபின் சமூகங்களைச் சீரழிக்கும் ஒரு போதைப்பொருளாகவும். தொடர்ந்து அதினின்று பெறப்பட்ட ஹெரொயின் அபினை விடத் தீவிரமான ஒரு போதை மருந்தாகி இன்று உலகின் மிக முக்கிய போதைப்பொருளாகியுள்ளது. மதமும் மாறியுள்ளது. ஒரு காலத்தில், ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளைக் கேட்டுக் கிளர்ந்தெழாமல், தெய்வ சித்தம், விதி, வினைப்பயன், மறு பிறவி, மறு உலகு என்றவாறான கோட்பாடுகள் மூலம் தமது தாழ்நிலையை ஏற்குமாறு மக்களைப் பணிப்பதும் வழிபாட்டிலும் வேண்டுதல்களிலும் அமைதியையும் ஆறுதலையும் தருவதுமே மதத்தின் பயனாக இருந்தது. இன்று அது மதவெறியாகவும் அடிப்படைவாதமாக வடிகட்டப்பட்டும் மனிதருக்கு ஆறுதல் தருவதற்கும் அப்பாற் சென்று வெறியூட்டும் ஒரு பொருளாகிவிட்டது. அவ்வகையில் மாக்ஸின் உவமானம் அவர் கருதியதற்கும் அப்பாலான ஒரு பொருத்தப்பாட்டைக் கண்டுள்ளது.

மதங்களின் பேரால் சாம்ராச்சியங்களை உருவாக்கக் கடவுளின் பேராற் போர்கள் நடத்தப்பட்டுள்ளன. எனினும், அவ்வாறான போர்கள், ஒரு சமூகத்தினுள் வாழ்ந்த மக்களிடையே மதவெறியைக் கிளறி விட்டு அச் சமூகத்தினுள் வாழும் மனிதரைப் பிளவு படுத்துமளவுக்கு மக்களுக்கு ஒரு வெறியாக ஊட்டப்பட்டதாகச் சொல்வது கடினம்.

பெருமளவிலான மத மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. மதத் தலைமைகள் தண்டிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உள்ளன. ஒரு மதஞ்சார்ந்த அரசினரால் வேற்று மதத்தவர் ஒறுக்கப்பட்டுள்ளனர். ஆயினும் வெவ்வேறு மதங்களையும் பல்வேறு மதப் பிரிவுகளையும் சேர்ந்த மக்களால் ஒன்றாக வாழ இயலுமாக இருந்துள்ளது.

கொலனிய ஆட்சி முறைக்குப் பிறகு, குறிப்பாக பிரித்தானிய ஆட்சியின் கீழ் கொலனிய மக்களைப் பிளவுபடுத்தி, விடுதலைக்கான வேண்டுதலைப் பலவீனப்படுத்துவதில் இனம், மொழி, சாதி என்பனவற்றோடு மதமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, இந்தியாவில் இந்து-முஸ்லிம் கலவரங்கள் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள் வலுத்த சூழலிலேயே நடைபெறத் தொடங்கினதை நாம் கூறலாம்.

இன்று முதலாளிய-நிலமானிய அதிகார வர்க்கங்கள் தம்மை ஆட்சி அதிகாரத்தில் நிலைநிறுத்துவதற்காக மொழி, மதம் ஆகிய அடையாளங்களைப் பாவித்து மக்களைப் பிளவுபடுத்தி வெற்றி கண்டுள்ளனர். தேசியம் என்பது சமூக ஒடுக்குமுறைக்கெதிராக முற்போக்கான பணியை ஆற்றினாலும் அதன் முதலாளிய மேலாதிக்கப் பண்பு தலைதூக்கும் அபாயம் எப்போதுமே இருந்து வருகிற ஒன்றுதான். மதத்தைப் பொறுத்தவரை, வழிபாட்டுச் சுதந்திரம் பேணும் உரிமைக்கு அப்பால் அது ஒரு சமூக-அரசியற் சக்தியாகச் செயற்பட்ட ஒவ்வொரு சூழலிலும், குறிப்பாக சமூக மேம்பாடெய்திய பிரிவினரது கையில் அது அமரும்போது, அது மிகவும் பிற்போக்கான சக்தியாகவே செயற்பட்டுள்ளது. சாதி ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பாக அம்பேத்கர் நடைமுறைப்படுத்திய பௌத்த மதத்துக்கு மதமாற்றம் முதல் தனிப்பட்ட முறையில் மதம் மாறுவது வரையிலானவை சாதிய எதிர்ப்புப் பிரகடனங்கள் என்பதற்கு அப்பாலான முக்கியம் அற்றவை. அவற்றால் சாதியத்தை ஒழிக்க இயலவில்லை. எனினும் எதிர்ப்புக் குரல்கள் என்ற வகையில் அவற்றின் முக்கியம் மறுக்க இயலாதது.

மதம் ஒரு சமூக-அரசியற் சக்தியாக முதலில் கிறிஸ்துவ அடிப்படைவாதமாகவே உருப்பெற்றது. இக் கிறிஸ்துவ அடிப்படைவாதம் வெகு விரைவாகவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கங்கட்கு உடந்தையான ஒரு தீய, எதிர்ப்புரட்சிகரச் சக்தியாகிவிட்டது. பல்வேறு சமூகச் சீர்திருத்த முயற்சிகளை உள்நாட்டில் மதத்தின் பேரால் எதிர்ப்பது முதலாக, அமெரிக்காவின் பல்வேறு ஆக்கிரமிப்புப் போர்கட்கு ஆதரவு திரட்டுவதுடன் இடதுசாரி அரசுகட்கெதிரான சமூகவிரோதக் கிளர்ச்சிகளுக்கு உதவுவது வரை இவர்கட்குக் கடவுளின் பணிகளாகத் தான் இருந்து வந்துள்ளன.

இஸ்லாமிய அடிப்படைவாதம் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் ஆட்சியாளர்களது ஒடுக்குமுறைக்கும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமைக்கெதிரான இயக்கமாக எழுச்சி பெற்றுள்ளது. அதேவேளை, அமெரிக்க அனுசரணையுடன் வஹாபி பிரிவினரான சவூதி அராபிய அதிகார வர்க்கத்தினர், சோவியத் யூனியனிலும் சீனாவிலும் இருந்த முஸ்லிம்களைக் கிளர்ச்சியில் ஈடுபடுத்தும் நோக்குடன் மதத் தீவிரப் பிரசாரத்தை அவர்கள் நடுவே மேற்கொண்டனர். இவ்வாறு அமெரிக்காவால் வளர்க்கப்பட்ட தீவிரவாதிகளில் ஒருவர் பின்லாடன். இன்று இஸ்லாமிய தீவிரவாதம் அமெரிக்காவுக்கு எதிராக நிற்கிறது.

எனினும், இவ்வாறான தீவிரவாதம் சமூக மாற்றத்துக்கு விரோதமானதும் மதத்தின் பேரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஒடுக்குமுறைகளை மீள நிலைநிறுத்தவும் முயல்வது ஒரு புறமிருக்கத், தமது கருத்துகட்கு உடன்படாத ஜனநாயக, முற்போக்குச் சக்திகளைத் தமது எதிரிகளாகக் கருதி அழிப்பதற்கும் முற்படுகின்றனர். இவ்விடத்துத் தமிழ்த் தீவிர தேசியவாதிகள் முற்போக்குச் சக்திகளையும் பிற ஜனநாயகவாதிகளையும் நடத்தி வந்த விதம் நினைவுகூரத்தக்கது.

இலங்கையில் இப்போது பௌத்த மதவாதம் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டுள்ளது. இன்று தேசிய இன ஒடுக்குமுறை பௌத்த மேலாதிக்கத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளபபட்டு வருகிறது. எனினும் ஏகாதிபத்தியம் தன் கம்யூனிஸ விரோத நடவடிக்கைகளில் முதன்முதலாகப் பாவித்த பௌத்த மதத் தலைவர் திபெத்தின் பிரதம மதகுருவும் பெரு நிலப்பிரபுவுமாக இருந்த தலாய்லாமாவேதான். கடந்த முப்பது ஆண்டுகளாக மாக்ஸியத்துக்கு உரிய மாற்றாக பௌத்தத்தை நிலைநிறுத்துகிற முயற்சிகள் மேலை நாட்டு முதலாளிய சார்பான நிறுவனங்களின் அனுசரணையுடன் இயங்கும் பௌத்த அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

மதவாதத்தை ஒரு ஃபாஸிஸ சக்தியாக்குவதில் இந்தியாவின் இந்துத்துவ நிறுவனங்கள் பெற்றுள்ள வெற்றிக்கு ஈடாக இந்த நூற்றாண்டில் இன்னொன்றைச் சுட்டிக்காட்டுவது கடினம். எவ்வாறு மரபின் பேரால் பழமைவாதச் சமூக விழுமியங்களை வற்புறுத்திக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகளிடம் நாட்டை அடகு வைப்பது என்பதற்கு இன்றைய பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான ஆட்சி ஒரு நல்ல உதாரணம். மதப் பூசலும், கலவரங்களும் மதச் சிறுபான்மையினருக்கெதிரான பல்வேறு நடவடிக்கைகளுமே அதன் ஊட்டப் பொருளாகியுள்ளன.

இன்னமுங் கூறுவதானால் பெரிய மத நிறுவனங்கள் மூலம் மட்டுமல்லாமல் போலிச்சாமிமார் மூலமும் மக்களின் சிந்தனைகளைக் குழப்புவதில் ஏகாதிபத்தியம் முனைப்பாகவே இருந்து வந்துள்ளது.

எனவே, மாக்ஸிய-லெனினியர்கள் மதத்தை எவ்வாறு கையாள்வது என்ற விடயத்தில் தமது முன்னைய நிலைப்பாட்டை இன்றைய தீவிர மதவாதத்தின் பின்னணியில் மீளாய்வு செய்வது அவசியமே. மதம் என்பது தனிமனித நம்பிக்கை என்ற தளத்திற்கும் அப்பால் மத அடிப்படையிலான அரசியலாகவும் சமூகப் பகைமையை வளர்த்து ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்தவும் பயன்படுகிற நிலையில் அது ஒரு சமூகவிரோதச் சக்தி என்பதில் மட்டுமில்லாமல் மதவாதம் எங்குமே சமூகப் பிரச்சினையைத் தீர்த்ததில்லை என்பதிலும் மாக்ஸியர்களுக்கு தெளிவு தேவை.

மேற்குறிப்பிட்ட வகையில் அரசியலாக்கப்பட்ட மதம் பெரிய மதநிறுவனங்களான கத்தோலிக்கத் திருச்சபை முதலிட்ட பல்வேறு அதிகார பீடங்களையும் விட ஆபத்தான ஃபாஸிஸ சக்தியாக இயங்குகிறது. அதை எதிர்ப்பதனால் அதன் இரண்டு அம்சங்களிலும் அதற்கு முகங்கொடுத்தாக வேண்டும். அரசியல் என்ற அடிப்படையில் மதச் சார்பின்மை என்ற கோஷத்துக்கும் அப்பாற் சென்று, வர்க்க அடிப்படையிலான அரசியலையும் போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. மதம் என்ற அடிப்படையில் அடிப்படைவாதம் எவ்வாறு மதங்கள் போதிப்பதாகக் கூறும் சமுதாய நன்நெறிகளை மறுதலிக்கிறது என்பதை மக்கள் நடுவே விளக்க வேண்டும்.

இவ்விடயத்தில் மதங்களுடன் பகைப்பதற்கான தேவை இல்லை என்றாலும் சமரசமற்ற முறையிலேயே மதங்களின் அரசியலை நிராகரிக்க வேண்டியிருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தல் அரசியலில் மூழ்கிக் கிடக்கிற அரசியற் கட்சிகளால் எவ்வாறு குறுகிய தேசியவாதத்தையும் சாதியத்தையும் எதிர்த்து நிற்க இயலாது போனதோ அவ்வாறே மதவாதத்தையும் அவர்களால் எதிர்க்க இயலாது. இதற்குத் தென்னாசிய நாடுகளின் அண்மைக்கால அரசியல் வரலாறே சான்று.

மதவாதத்துக்கு எதிரான போராட்டம் எங்கெல்லாம் மதத்தின் பேரால் மனிதர் ஏமாற்றப்பட்டுச் சுரண்டப்பட்டுப் பிளவுபடுத்தப் படுகிறார்களோ அங்கங்கெல்லாம் சமரசமின்றி வெகுசன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டாலொழிய மதவாதத்தை முறியடிக்க வழியில்லை.

- இயமவரம்பன் -

படிப்பகம்

www.padippakam.com



# உலகப் பயங்கரவாதிகள்

2002 ஒக்டோபரில் சீ.ஐ.ஏ. ஈராக்கிய ஜனாதிபதி சதாம் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு வந்து விட்டதாக அறிவித்தது. "பாரிய அழிவு தரும் ஆயுத உற்பத்தித் திட்டத்தில் ஈராக்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையில் உரிய மூலப்பொருளை வெளிநாடுகளிடமிருந்து ஈராக் பெற்றால் ஒரு வருடத்தினுள் அதனால் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்ய முடியும் என சீ.ஐ.ஏ. தெரிவித்திருந்தது.

கலிபோனியாவின் ஜனநாயக கட்சிப் பிரதிநிதி கென்றி வாக்ஸ்மான் ஜனாதிபதி புஷ்ஷிற்கு எழுதி கடிதத்தில் "இரசாயன ஆயுதங்களை விட அணு ஆயுதப் பயமுறுத்தலே பாரியது " எனக் கூறியிருந்தார். ஈராக்கிற்கு எதிராக பலாத்காரத்தைப் பிரயோகிப்பதை தாம் காங்கிரசில் ஆதரித்ததற்கு காரணம் சதாமின் அணு ஆயுதத் திட்டமெனக் கூறியிருந்தார்.

யுத்தம் நெருங்கும் போது வியன்னாவில் உள்ள ஐ.நா. அனைத்துலக அணு ஏஜன்சி ஈராக்கில் அணு ஆயுத உற்பத்தித் திட்டம் ஏதும் இருக்கவில்லையனெ அறிவித்ததை புஷ் நிர்வாகம் கண்டித்திருந்தது.

அமெரிக்கா மார்ச் 20ம் திகதி ஈராக் மீது யுத்தம் தொடுப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன் - மார்ச் 16ல் - உப ஜனாதிபதி டிக் சென்னி சதாம் அணு ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதில் விடாப்பிடியாகவுள்ளார் என்பதில் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில் சதாமையோ அல்லது அணுத் திட்டம் பற்றிய எந்தத் தகவலையோ இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை. பேரழிவு தரும் ஆயுதங்கள் தொடர்பாக அமெரிக்கப் படையினரால் சுமார் மூன்று மாதமான போதும் எதுவித தடயங் களும் கிடைக்காததால் பிளையரும், புஷ்ஷும் பெரும் அவஸ்தைக் குள்ளாகியுள்ளனர்.

ஐ.நா.வின் பிரதான ஆயுதப் பரிசோதகர் ஹான்ஸ் பிளிக்ஸ் ஐ.நா. அனுமதித்த 150 கி.மீ. சுற்று வட்டங்களில் மேற்கொண்ட பரிசோதனையில் அங்கு இரசயான ஆயுதங்களுக்கான சான்றுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை எனக் கூறியுள்ளார்.

மார்ச் 7ம் திகதி ஐ.நா. அனைத்துலக ஏஜென்சி ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் அதன் இயக்குனரான மொகமட் எல்பராடி தனது ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் ஈராக்கில் அணு ஆயுதத் திட்டத்திற்கான சான்றுகள் எதையும் கண்டுபிடிக்கப்படவில்லையென அறிவித்திருந்தார்.

நைஜீரியாவில் இருந்து யுரேனியத்தை ஈராக் இறக்குமதி செய்ய முயன்றதாக அமெரிக்காவும், பிரிட்டனும் சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானதென அந்த அதிகாரி குறிப்பிட்டிருந்தார். தன்னிடம் சமர்ப்பித்த ஆவணங்கள் அத்தனையும் அபத்தமானவையெனவும் அவற்றைப் பார்த்ததும் தனது வாயைப் பிளந்ததாகவும் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்திருந்தார். நைஜீரியாவிலிருந்து யுரேனியம் இறக்குமதி செய்ய முயற்சி இடம் பெற்றதற்கான வேறு நமபத் தகுந்த ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப் படவில்லை என அவர் மேலும் தெரிவித் திருந்தார். அமெரிக்க அதிகாரிகள் சிறைப்பிடித்திருக்கும் ஒரு முன்னாள் அரச அதிகாரி அழிவு தரும் ஆயுதங்கள் எங்கே உள்ளன எனத் தகவல் தந்துள்ளதாகவும் ஆனால் உடனடியாக குறித்த இடங்களில் தேடுதல் நடத்ததும் எண்ணம் இல்லையெனவும் சாக்குப் போக்குச் சொல்கிறார்கள். ஈராக்கில் பாரிய அழிவு தரும் ஆயுதங்களோ, அணு ஆயுதத் தயாரிப்பிற்கான திட்டமோ இன்றுவரை கண்டுபிடிக்கப் படவில்லையென்பதே உண்மை.


அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து ஈராக்கிய எண்ணெய் வளத்தை கொள்ளையிட்டு தாம் அழித்த ஈராக்கை கட்டியெழுப்பவும், ஈராக்கிய மக்களுக்கு உணவு வழங்கவும் போகிறார்களாம். திருடர்கள் திருடிய வீட்டுக்கு உதவப் போவதாகக் கூறுவது போன்றதாகும்.

சவுதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக கூடிய எண்ணெய் வளமுடைய ஈராக்கைக் கைப்பற்றி அந்த நாட்டைச் சுரண்டவே சதாமின் ஆட்சிக் கவிழ்ப்பு. சதாம் ஆட்சி நல்லதா? கெட்டதா? என்பதை ஈராக்கிய மக்களே தீர்மானிக்க முடியும்.

எந்த ஒரு நாட்டினதும் ஆட்சியை பிற நாடொன்று கவிழ்ப்பது. கைப்பற்றுவது. அதன் எதிர்காலத்தை தீர்மாணிப்பது எதையும் யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு நிகழுமானால் அது அப்பட்டமான ஆக்கிரமிப்பேயாகும். இதிலிருந்து இலங்கை மக்களாகிய நாமும் பாடம் கற்போம்.

மேலும் இவ் உலகப் பயங்கரவாதிகளின் ஆதிக்க கொலைவெறிக் கண்கள் வடகொரியா மீதும் ஈரான் நாட்டிலும் கவனத்தைத் திருப்பியுள்ளனர். ஏற்கனவே அமெரிக்காவினால் பயங்கரவாத நாடுகள் என வர்ணிக்கப்பட்ட நாடுகளில் வடகொரியாவும். ஈரானும். அடங்கியிருந்தன. எனவே இவ்விரு நாடுகளுக்கும் எதிரான பிரச்சார யந்திரங்களை வெள்ளை மாளிகை முழுக்கி விட்டுள்ளன. அதன் மூலம் தமது ஆக்கிரமிப்பிற்கான சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டவும் தொடங்கியுள்ளன. ஆனால் அமெரிக்கா எதிர்பார்ப்பது போல் இங் இரு நாடுகளிலும் நிலைமை இலகுவானதொன்றாக இருக்கமாட்டாது என்பது உறுதி. இன்று ஈராக்கி எதிர்கொள்வதைவிட பலமடங்கான எதிர்வினையைச் சந்திக்கவே நேரிடும்.

இன்று அமெரிக்கா நாளாந்தம் ஈராக்கில் தனது படைவீரர்களை ஈராக்கிய மக்களின் துப்பாக்கிகளுக்கும் வெடிகுண்டுகளுக்கும் பலிகொடுத்து வருகின்றமை காணக்கூடியதே. எனவே கொரியாவிலும். ஈரானிலும் அமெரிக்கா கால் பதித்தால் இறுதி அழிவை தேடிக்கொள்ளவே முடியும்.



# ஒரு கம்யூனிஸ்ட் பெண் போராளியின் போராட்ட வாழ்வும் சிந்தனையும்

## விமர்சனமாகவும் சுயவிமர்சனமாகவும் எடுத்து கூறுகிறார் தோழியர் பார்வதி (3)

### கம்யு 'னிஸ்ட் கட்சிக்குள் தந்தை வழி விழுமியங்களின் வெளிப்பாடு

பெண்ணிய இயக்கம் முதலாளியப் புரட்சியின் விளைவு என்பதால், கம்யூனிஸ்ற் கட்சிகள் பெருமளவும் பெண்களின் பிரச்சனைகள் பற்றி வெகு எளிதில் பாதிப்புறும் மனநிலை கொண்டனவாயுள்ளன. அதன் விளைவாக, அவர்கள், பெண்களின் விடுதலைக் கொள்கையை ஏற்கும் அதேவேளை, தந்தைவழிச் சமூக விழுமியங்கட்குப் பலியாகின்றனர். இது பலவாறாகவும் வெளிப்படுகிறது. உதாரணமாகக், கம்யூனிஸ்ற் கட்சியில் நீண்டகாலச் சம பங்காளிகளாகப் பெண்களை ஏற்பதற்கு மாறாகப் பெண்களின் பங்கைத் துணை புரிகிற ஒன்றாகக் கொள்வது. இதன் விளைவாகக், கட்சி, பாலடிப்படையிலான சுரண்டலுக்கும் வர்க்கப் போராட்டத்திற்குமிடையிலான இயங்கியல் உறவு பற்றி மறந்து முன்னதைப் பற்றிக் கவனத்தைக் குறைத்துப் பின்னதன் மீது மிகையான அழுத்தத்தை வைக்கிறது. தனியான பெண்கள் அமைப்புக்களை உண்டாக்குவதிற் தாமதிப்பும் கம்யூனிஸ்ற் கடசிகட்குள்ளிருக்கும் பெண்கள் அமைப்புக்களைத் தற்காலிகமாகக் கலைப்பதுங் கூட நிகழ்ந்துள்ளன. பெண்கள் அமைப்புகள் உள்ள கட்சிகளிலுங் கூட பெண்களின் வெகுசன முன்னணி தனது திட்டங்களையும் வேலை ஒழுங்கையும் வகுப்பதற்கு வேண்டியளவு சுதந்திரம் வழங்கப்படாத நிலைமைகளும் இருந்துள்ளன. இது கட்சிக்குள் அந்நியமாதலையும் ஒத்துப்பாடுகிற நிலையையும் பிறப்பிக்கிறது. கட்சியின் வேலைத் திட்டத்தையும் பெண்களின் வேலைத் திட்டத்தையும் ஒருங்கிணைவாக்காததாலும் இது நிகழலாம். இதனாற் கட்சியின் வேலைத் திட்டம் பெண்களினதினும் மேலான முக்கியம் பெறுகிறது. பெண்கள் தொடர்பான பணிகட்கே பெண் ஊழியர்களை ஒதுக்குவதிலும் கட்சியின் பழமை பேணல் புலனாகிறது. இதனாற் பெண்கள் கட்சிக் கொள்கை விடயங்களிலும் பிற துறைகளிலும் விருத்தி பெறும் வாய்ப்பு அவர்கட்கு மறுக்கப்படுகிறது.

நடைமுறை முனையில், 'இது எழுந்தமான செயற்பாட்டுக்கு இட்டுச் செல்கிறது. இதனாற், பெண்களின் பிரச்சினைகள் சந்தர்ப்ப சூழ்நிலைகட்கு கைவிடப்பட்டு அவை பற்றிப் பேசப்படுவதன்றி எதுவும் செய்யப்படுவதில்லை. இது படிப்படியான மாற்றம் என்ற அணுகுமுறைக்கு இட்டுச் செல்கிறது. ஆண்கட்கும் பெண்கட்குமிடையில் வழக்கி லுள்ள மரபுவழி வேலைப் பங்கீட்டிற் கட்சி செயலூக்கத்துடன் குறுக்கிடாமையால், ஆண்கள் சிந்தனை சார்ந்த பணிகளையும் பெண்கள் உடலுழைப்பு சார்ந்த பணிகளையுமே செய்யும் நிலை அடிக்கடி காணப்படுகிறது. பெண்களின் குறிப்பான நிலைமைகளும் குறிப்பான தேவைகளும் பற்றிய கணிப்பீடின்றி, ஆண்களையும் பெண்களையும் சுத்த சமத்துவமானோராகக் கொள்வதிலும் இது வெளிப்படுகிறது. இது பெண்களின் மாதவிடாய்க் காலங்களிலும் மகப்பேற்றுக் காலங்களிலும் மேலும் தெளிவாகப் புலனாகிறது.

### பெண் ஊழியர்களது தரப்பில் அகஞ் சார்ந்த முயற்சியின்மை

பெண்கள். தமது இரட்டை ஒடுக்குமுறை காரணமாக அதிக நீளமான போராட்டத்தைத் தொடுக்க வேண்டியுள்ளது. எனினும். அகஞ் சார்ந்த முயற்சியின்மையின் விளைவாக அவர்கள் அரை வழியிலேயே தோல்வியடைகின்றனர். உதாரணமாக, நிலமானிய விழுமியங்கட்கெதிராக அவர்கள் வெற்றிகரமாகக் கிளர்ந்தெழுந்த சூழ்நிலையில் அவர்களால் வர்க்கப் போராட்டத்திற் தம்மை நிலை நிறுத்திக் கொள்ள இயல்வதில்லை. அவர்கள் வெற்றிகரமாக வர்க்கப் போராட்டம் தொடுக்கும்போது, அவர்களால் உட்கட்சிப் போராட்டத்திற் தம்மை நிலை நிறுத்த இயலுவதில்லை. உட்கட்சிப் போராட்டத்திற் பங்கு பற்றாமையாலோ பலவீனமாகவோ பங்குபற்றுவதாலோ அவர்கள் தத்துவம் தொடர்பான விடயங்களிற் கூர்மையற்றோராகி, அவர்களது சொந்த விடுதலைக்கு மிகவும் பொருத்தப்பாடுடையதான கம்யூனிஸ இயக்கத்தின் போக்கை நிருணயிக்கும் வாய்ப்பைப் பறிகொடுக்கின்றனர். அவர்களது அகஞ் சார்ந்த முயற்சியின்மை பல வழிகளிற் புலனாகிறது. தத்துவார்த்தத் துறையில் அவர்கள் கொள்கை சார்ந்த அறிவைப் பெறுவதிற் போதிய நாட்டமின்றி இருப்பதாலும் தமது புறவயமான நிலைமைகளை வெற்றி கொள்ள உட்கட்சிப் போராட்டத்தில் ஈடுபடாததாலும், அவர்கள் பயனீட்டுவாதம், பொருளியல்வாதம், உட்குழுவாதம் (progmatism, economism, sectarianisn) என்பனவற்றுக்கு இரையாகின்றனர். இது, அவர்களது கடந்தகாலப் புறவயமான நிலைமைகள் காரணமாக, முற்குறிப்பிட்ட போக்கை மீள உற்பத்தி செய்கிறது.

நடைமுறைத் துறையில். அவர்கள் ஒத்துப்பாடுகிற நிலைக்குட் சரிந்து எவ்வாறு மரபுவழிப் பெண்கள் மணமாகு முன் தந்தையையும் மணமானதும் கணவனையும் விதவையானதும் மகனையும் பின்பற்றினரோ அவ்வாறு குருட்டுத் தனமாகக் கட்சியின் கட்டளைகளையும் கேள்வியின்றிப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு அவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளினாற் பாதிக்கப் பட்டோராகின்றனர். அவர்கள் இராணுவத் துறையிலிருந்தால் அவர்களை மிகவும் பாதிக்கும் விதமாக. இது திட்டமிடாத தாய்மையாக அமைகிறது. தனது சொந்த அரசியற் பாதையை விருத்தி செய்வதற்கு மாறாகத் தனது கணவனின் பாதையைப் பின்பற்றுவதாக அமைகிறது. இதன் மூலம் அவர்களது சுதந்திரமான அரசியல் வாழ்வு பாதிக்கப்படுகிறது. தமது உரிமைகளை வற்புறுத்தாது விடுவதனால். அவர்கள், மரபுவழி வேலைப் பிரிவினை எனும் பொறிக்குட் சிக்கிக் கொள்கின்றனர். அதன் விளைவாக மறைமுகமான வழியில் அவர்கள் எதிர்ப்புரட்சிக்கு இட்டுச் செல்லும் மரபு சார்ந்த பழமை பேணற் சிந்தனைகளின் வாகனங்களாகி விடுகின்றனர். பல சமயங்களில், அவர்கள் தமது அரசியல்.°.இராணுவத் துறை ஏதோ ஒரு தற்காலிக உத்தியோகம் என்பது போல, திருமணத்தையும் தாய்மையையும் ஒரு விடுமுறை மாதிரிப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இது போன்றே, அவர்கள் தமது முன்னைய சொந்த வேலை மீதான பிடிப்பை இழந்து, தமது கணவர்களது வேலைத் துறையிற் சுயவிருப்புடைய பங்காளிகளாகின்றனர். எனவே. அடிக்கடி இடமும் பணியும் மாறுவது. ஆண்களை விடக் கூடுதலாக அவர்களைப் பாதிக்கிறது. இப்போக்குகள் அனைத்தினதும் பயனாகப் புரட்சிக்குப் பாதகமான விளைவு தருவதான தாழ்வு மனப்பான்மை பெண்கள் நடுவே விருத்தி வெறுகிறது.

### ஆண்கள் தமது விசேடச் சிறப்புரிமைகளை விட்டுக் கொடுக்க ஆயத்தமாயிருத்தல்

பெண் ஊழியர்களுடைய பிரச்சினை தமது நிலைப்பாட்டை வலியுறுத்தியதாக உள்ளது. அதேவேளை. தந்தைவழிச் சமூக அமைப்புத் தமக்கு வழங்கிய சிறப்புரிமை கொண்ட இடத்தைத் துறப்பது ஆண் ஊழியர்களுடைய பிரச்சினையாக உள்ளது. இது பலவாறாக வெளிப்படுகிறது. பிரதானமாகப். பேரளவில் பெண்களின் தலைமைத்துவத்தை ஏற்றதாலும், சாராம்சத்தில் அதை ஏற்க இயலாமையாகப் புலனாகிறது. இவ்வாறு கட்சிக்குள்ளும் மக்கள் விடுதலைப் படையினுள்ளும் ஐக்கிய முன்னணியுள்ளும் பெண்களின் தலைமைத்துவத்தை நிறுவுவதில் தாமதம் ஏற்படுகிறது. மேலும், பெண்களின் தவறுகள் பற்றியும் பெண்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ள துறைகளில் பெண்களது பொதுப் படையான ஆற்றலின்மை பற்றியும் பொறுமையின்மைக்கு இது இட்டுச் செல்கிறது. பெருமளவும், தமக்குச் சம்பந்தமற்றது என்பதுபோல, பெண்களின் பிரச்சினைகளைப் பெண்களிடமே விட்டுவிடுகிறார்கள். இது. பெண்களின் பிரச்சினைகள் பற்றிய ஆக்கங்களை வாசிக்காமல் விடுவதாகவும் பெண்கள் வெகுசன முன்னணியின் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிற் பங்குபற்றாமையாகவும் புலனாகிறது. சிலவேளைகளில் இது, தேவையில்லாத போது பெண்களின் பாதுகாப்பு பற்றிய மிகையான முன்னெச்சரிக்கையும், பெண்களின் சார்பாகச் சிந்தனைப் பணிகளை மேற்கொள்வதாகவும், மறைமுகமான வடிவிற் காணப்படுகிறது. பழைய, சிந்தனைப் பணிகள் மீதான தமது ஏகபோகத்தைக் கைவிடாது. அலுப்பூட்டும் நாளாந்தப் பணிகளைப் பெண்களிடம் ஒதுக்கிப். பழைய. மரபு வழி வேலைப் பங்கீட்டில் அவர்கள் ஈடுபடுவதில் இதைக் காண முடியும். தமது சிறப்புரிமை கொண்ட இடத்தை விட்டுக் கொடுக்க ஆண்கள் விரும்பாததால், முன்னேறும் வாய்ப்புள்ள மனைவியால் தமது கணவன்மாரிடமிருந்து தூரத்துக்குக் கொண்டு செல்லக் கூடிய சுயாதீனமாக பணிகளை மேற்கொள்ளாதவாறு அவர்களை ஊக்கங் கெடச் செய்கின்றனர்.

www.padippakam.com



# ஏகாதிபத்திய உலகமயமாதலை ஆதாரங்களுடன் அம்பலமாக்கும் நூல்

ஏகாதிபத்திய உலகமயமாதலினால் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்படும் பொருளாதார, பண்பாட்டுப் பாதிப்புகளை ஆதாரங்களுடன் விளக்கும் நூலாக 'பூகோளமயமாதல் மூன்றாம் உலகப் பார்வை' வெளிவந்துள்ளது. இதனை யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி சாமிநாதர் பிரான்சிஸ் கிருபானந்தன் எழுதி யுள்ளார்.




"எவ்வித தங்கு தடையுமின்றி நிதிப்பாய்ச்சலால் உலகளாவிய ரீதியில் வர்த்தகத்தை உருவாக்கும் பொருண்மியச் சிந்தனைப் போக்கே பூகோளமயமாதல் எனப்படுகிறது" என்று இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய 'பூகோளமயமாதல்' வறுமைப்பட்டவர்களை மேலும் வறியவர்களாக்குகிறது என்பதையும் அதனை ஏற்றுக் கொள்ளும் பண்பாட்டையும் அது கட்டி வளர்த்து வருகிறது என்பதையும் இந்நூல் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. 44 பக்கங்களை மட்டும் கொண்ட இந்நூல் பூகோளமயமாதல் என்ற பெயரில் நடக்கும் பலவிதமான சுரண்டல்களையும் சீரழிவுகளையும் ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டியுள்ளது.

"எமது நாடுகளின் 50 ஆண்டுகால காலனித்துவ விடுதலை ஒரு ஏமாற்றமே. இவ்வனுபவத்தின் அடிப்படை ஒரு வகை போர்தான்". "எங்களுக்கு அபினி வேண்டும் என்று சீனர்கள் கூறவில்லை. நீங்கள் அபினியை தின்றே ஆக வேண்டுமென்றனர் பிரிட்டிஷ்காரர்கள். இறுதியில் பிடிவதமாக சீனர்களை அபினியுண்ணச் செய்ய ஒரு போரல்ல பல போர்கள் மேற் கொண்டது பிரிட்டன். மேற்கத்திய உற்பத்திப் பொருட்கள் மற்றும் வர்த்தகத்தின் மீது பாராமுகமாக இருந்த ஆட்சியாளர்களையும் மக்களையும் வழிக்கு கொண்டு வர போரையும் பலாத்காரத்தையும் அவிழ்த்துவிடும் காலம் மலையேறிவிட்டது. ஆயினும் மறுத்தவனுடைய தொண்டைக்குள் அபினியையும் அதைவிட வீரியம் மிக்க போதைப் பொருட்களையும் திணிக்கும் பழைய வாழ்க்கை இன்னும் தொடர்கிறது. பழைய வாடிக்கையின் புதிய முயற்சி தான் இன்று திணிக்கப்படும் பூகோளமயமாதல் பொருண்மியத் திட்டம் எனலாம்". என்று இந்நூலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது.

ஏகாதிபத்திய உலகமயமாதல் அல்லது பூகோளமயமாதலை மாக்ஸிட்-லெனினிஸ்ட்டுகள், இடதுசாரிகள், ஜனநாயக சக்திகள் மட்டுமன்றி சூழலியலாளர்கள், இறையியலாளர்கள் எனப் பலதரப்பட்டோரும் எதிர்க்கின்றனர். இந்நூலை எழுதியவர் இறையியல் துறையில் இருப்பதால் 'விடுதலை இறையியல்' தாக்கங்களை அவரது எழுத்துக்களில் காணக் கூடியதாக இருக்கிறது. அவர் ஒழுக்கவியலை அடிப்படையாகக் கொண்ட, மக்களை விளிம்பு நிலைக்குத் தள்ளாத உலகமயமாதலையே மாற்றீடாக கொள்ள வேண்டு மென்கிறார். அவர் அவரது தளத்தில் நின்று பூகோளமயமாதலை எதிர்க்கிறார்.

ஆக, ஏகாதிபத்திய பூகோளமயமாதலை எதிர்க்கும் சகல திறத்தினரும் ஒருமைப்பாட்டுடன் இயங்குவது அவசியமாகிறது. தீமையைத் தெரிந்து கொண்டு மௌனியாக இருப்பது தீமைக்குத் துணை போவதற்கு ஒப்பானது. அத்தீமையை அகற்ற வேண்டும் என்பதில் உடன்பாடுடையவர்கள் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியது அவசியம். அதற்கான தேவையும் காலமும் நம் முன்னே தோன்றியுள்ளது.

- தம்பியன் -




தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கிய சமூக விஞ்ஞான காலாண்டு இதழான தாயகம் யூன் மாதத்திற்குரியது ஏற்கனவே வெளிவந்து விட்டது. சிதைந்துபோன யாழ்-டச்சு கோட்டையின் பழைய நிலைப் படங்களை அட்டைப்படமாகக் கொண்டு தாயகம் சஞ்சிகை கவிதைகள். கட்டுரைகள். மொழிப் பெயர்ப்புகள். விமர்சனங்கள் என்பன வற்றை உள்ளடக்கிய பல்வேறு அம்சங்களுடன் கனதிமிக்க கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழாக வெளிவந்துள்ளது. பெறவிரும்புவோர் விபரங்களுக்கு ஆசிரியர்/நிர்வாகி. தாயகம். 405. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். இலங்கை என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

# பாரிஸ் நகரில் தோழர் கார்த்திகேசன் நினைவாக கருத்தரங்கு





தோழர் வை.வன்னியசிங்கம். தோழர் க.தணிகாசலம் திரு.த.தர்மகுலசிங்கம் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

கடந்த யூன் 22ம் திகதி பாரிஸ் நகரில் சமூக அசைவியக்கத்திற்கான கருத்தரங்கு தொடர்-02 தோழர் கார்த்திகேசன் நினைவாக நடைபெற்றது. இதற்கான ஒருங்கிணைப்பினை "அசை" சமூக அசைவியக்கத்திற்கான எழுத்தியக்கம், தேசிய கலை இலக்கியப் பேரவை. உயிர் நிழல்-நுஒடை ஆகிய அமைப்புக்கள் ஏற்படுத்தியிருந்தன. காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை நடைபெற்ற இக்கருத்தரங்கில் த. தர்மகுலசிங்கம் (டென்மார்க்) பி.ஏ.காதர் (இங்கிலாந்து) க. தணிகாசலம் (இலங்கை) வி. சிவலிங்கம் (இங்கிலாந்து) ஆகியோர் பிரதான உரைகள் நிகழ்த்தினர். மாலை அமர்வுக்கு புதிய ஜனநாயகக் கட்சியின் ஐரோப்பிய செயலாளர் தோழர் வை. வன்னியசிங்கம் தலைமை தாங்கினார். இலங்கையிலிருந்து சென்ற கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியருமான தோழர் க. தணிகாசலம் "தோழர் கார்த்திகேசனும் இலங்கைப் பொதுவுடமை இயக்கமும்" என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். இந் நிகழ்வில் புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் எழுதிய "வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்" நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் வெளியீட்டுரையைத் தோழர் சாந்தகுமார் நிகழ்த்தினார். இலங்கையிலிருந்து அழைக்கப்பட்டிருந்த தோழர் தணிகாசலம் டென்மார்க். ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்து ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க தாகும்.

# நூல் பற்றி ஒரு நோக்கு

தோழர் செந்தில் எழுதிய "வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்" என்னும் நூலை முழுமையாக மதிப்பீடு செய்வதற்கு நான் தகுதியற்றவன். இருந்தும் இன்றைய காலகட்டத்தில் துணிந்து இப்படியான அரசியல் நூலை வெளியீடு செய்ததை எம்மால் இலகுவில் மறக்க முடியாது. வடபுலத்தில் பொதுவுடமை இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரைக்கும். என்ன செய்தது. எப்படி வளர்ந்தது. இதனுடைய உந்து சக்தியாயிருந்த ஆசான் காத்தாருடைய வழிநடத்தல் எவ்வளவு காத்திரமாய் அமைந்து வந்ததென்பதை. இன்றைய பொதுவுடமையாளர்களும். வளரும் புதிய தலைமுறை பொதுவுடமைவாதிகளும் நன்கு அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திய நூலாகும் என்பது எனது பணிவான கருத்து.

வடபுலத்தில் வெளியாகும் அரசியல் நூல்களில் தேங்கிக் கிடக்கும் வர்க்க பேத வரவுரைகள். - அந்த நூல்களில் காணப் பெறுவதை இந்நூலுடன் ஒப்பீடு செய்யும் பொழுது கண்டு கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. விசேடமாக ஒடுக்கப்பட்ட மக்களின் ஞான ஓலங்கள் தான் மேலோங்கி நிற்கின்றது. இது வர்க்கத் தாக்கத்தின் மானசீக எழுச்சி எனலாம். இவற்றை உறுதிப்பற்றுடன் முன் வைத்தமைக்கு நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக. ஆசான் காத்தாரின் வழி நடத்தலில் உருமலர்த்தப் பெற்ற பொதுவுடமை வாழ்வு - அவரைப் பின்பற்றி வாழ்கின்ற இலை மறை காய்போல் வாழும் பொதுவுடமை வாழ்வியலாளருக்கு. ஓர் வாழ்வியல் நெறியாக அமைந்திருப்பதை தங்கள் நூல் மூலம் அறியக் கிடக்கின்றது.

வடபுலத்தின் பொதுவுடமை இயக்கத்தின் ஓர் வரலாற்று நூலாக நான் கண்ணுற்றேன் என்பது எனது துணிவான கருத்து. இன்றைய பொதுவுடமை தழுவும் ஆரம்ப இளம் தலைமுறையினருக்கு. வடபுலத்தின் பொதுவுடமையின் ஆரம்ப அத்தியாயங்களை விளக்குவதற்கும். கற்பிப்பதற்கும் அரசியல் வழிநூலாக உதவும் என்பது எனது துல்லியமான கருத்து. இதை எவரும் ஏற்கலாம். ஏற்காமல் விடலாம். ஆனால் நான் முழுமையாக ஏற்கிறேன். எப்பொழுதும் மக்களுக்கு யதார்த்தத்தைச் சொல்லும் மானிடனாக இருப்பீர்களெனவும். இருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தி எனது கருத்துக் கண்ணோட்டத்தை தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். ஆசான் காத்தார் என்றும் எப்பொழுதும் எம்முடன் இருப்பார்.

வடபுலத்துப் பொதுவுடமைச் சம்பவங்கள் இன்னும் அறியக்கிடப்பதினால். காலப்போக்கில் இன்னும் ஓர் ஆக்கம் தங்களால் உருவாகும் வேளை சேர்த்துக் கொள்வீர்கள் என்பதை நான் உறுதியாக நம்பி விடை பெறுகிறேன். இங்கு குறிப்பிட்டது யாவும் எனது மூல அபிப்பிராயம்.

இங்ஙனம்

**தோழர் இ. வரதராசா**

(ஆனையூர்)

# கோமரசங்குளம் அதிபர் விவகாரம்

'வவுனியாவில் கூட்டமைப்பு எம்.பி.யின் சாதனை' என்ற தலைப்பில் யூலை மாத புதிய பூமியில் வெளிவந்திருந்த செய்தி தொடர்பாக வ/சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜ வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திரு.ஏ. கோணேஸ் என்ற பெயரில் கடிதமொன்று புதிய பூமிக்குக் கிடைத்தது.

அக்கடிதத்தின் சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

"தற்போது கோமரசங்குளம் பாடசாலையில் கடமையாற்றிவரும் அதிபர் சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜ வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் நிதிமோசடி. அதிகார துஷ்பிரயோகம் போன்ற செயல்களில் ஈடுபட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர், மகாணக் கல்விப் பணிப்பாளராக ஆகியோரினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தவேளையிலேயே அவ்வதிபருக்கு புலமைப்பரிசிலில் கனடாவுக்கு செல்ல வாய்ப்பு கிட்டியது.

இவ்வேளையில் முதற்கட்ட விசாரணை முடிவடைந்து இரண்டாம் கட்ட விசாரணை தொடரும் என அறிவிக்கப்பட்டிருக் கிறது. அவருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வகையில் அவரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி கடவுளின் கிருபையால் தடுத்து நிறுத்தப்பட்டது. இவ்வேலையைக் குறிப்பிட்ட எம்.பி. செய்திருந்தால் அவர் வவுனியா மாவட்டக் கல்வி வளர்ச்சிக்கு சேவை செய்ததாகவே நானும் இப்பிரதேச மக்களும் கருதுகின்றோம். அவரை வாழ்த்துகிறோம்."

ஆசிரியர் குறிப்பு

திரு. ஏ. கோணேஸ் என்ற பெயருடன் எமக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் இணைக்கப்பட்ட தகவல்களின்படி குறிப்பிட்ட அதிபருக்கு எதிராக முறைப்பாடு, செய்யப்பட்டுள்ளதாகவும் அம்முறைப்பாடுகளுக்கு எதிராக விசாரணை செய்து அறிக்கை செய்யும்படி மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் 24-06-2003 அன்று கடிதம் மூலம் வ.கி.மா.சபை ஆளுநருக்கு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

'குற்றத்தீர்ப்பளிக்கப்படும் வரை ஒருவர் குற்றமற்றவர்' என்பதுதான் நீதித்துவ அடிப்படை என்பதை பாடசாலை அதிபர்களின் விடயத்திலும் ஏற்றுக்கொண்டாக வேண்டுமா? விசாரணை முடிவிலேயே ஒருவர் குற்றவாளியா இல்லையா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். குறித்த அதிபர் மோசடி செய்தாரா இல்லையா என்பதல்ல எமது செய்தியின் அடிப்படை. வெறும் முறைப்பாடுகளை வைத்துக் கொண்டு ஒருவருக்கு கிடைத்த அரிய புலமைப் பரிசில் வாய்ப்பை ஒரு எம்.பி. அவரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்தியுள்ளார். இது விசாரணை முடிவதற்கு முன்பு அத்துமீறி நடத்தப்பட்ட செல்வாக்கும் தலையீடுமாகும்.

இவ்விடயத்தில் வெறும் முறைப்பாடுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒரு அதிபரின் அரிய புலமைப்பரிசில் வாய்ப்பை பிரதேச எம்.பி. தலையிட்டு பறித்தது சரியா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை மக்களிடமே விட்டுவிடுகிறோம்.

# எரிபொருள் விநியோகம் இந்தியாவின் கைகளில்!

அண்மையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் 100 பெற்றோல நிரப்பு நிலையங்களை விற்பதற்கு விண்ணப்பங்கள் கோரியிருந்தது. அதன் விளைவாக இந்தியாவின் மற்றொரு எண்ணெய். இயற்கை வாயுக் கூட்டுத்தாபனம் (ONGE) இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடவுள்ளதாக பிரீஜ செய்தி ஸ்தாபனம் புதுடில்லியிலிருந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு வருடந்தோறும் 34 இலட்சம் தொன் பெற்றோலியப் பொருட்கள் தேவைப்படுகிறது. இதில், 22 இலட்சம் தொன் பெற்றோலியப் பொருட்களை உள்நாட்டிலேயே சுத்திகரிக்கும் வசதியை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே கொண்டுள்ளது. மிகுதி 12 இலட்சம் தொன் பெற்றோலியப் பொருட்களையே சுத்திகரிக்கப்பட்ட நிலையில் இறக்குமதி செய்யப்படுகிறது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து இன்றுவரை பெரும் இலாபத்துடனே இயங்கி வருகிறது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஏற்கெனவே 100 சில்லறை விற்பனை நிலையங்களை இந்தியக் கம்பனியொன்று பொறுப்பேற்றுள்ள நிலையில் புதிய இந்தியக் கம்பனி மேலும் 100 பெற்றோல் நிரப்பு நிலையங்களைப் பொறுப்பேற்கவுள்ளது. இந்தப் புதிய கம்பனியானது 70மூ செயற்திறனில் மட்டுமே இயங்கி வருகிறது. அதன் செயற்திறனை அதிகரிக்க வேண்டுமானால் அதன் உற்பத்திப் பொருளை ஏற்றுமதி செய்ய வேண்டும். அதன் உற்பத்திப் பொருளை இறக்குமதி செய்ய யூஎன்.பி. அரசு முன்வந்துள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தில் மிகக் கூடிய அளவில் இந்திய முதலீட்டை ஈடுபட வைப்பதே அரசின் திட்டமாகும்.

நாட்டின் ஒவ்வொரு பொதுத் துறையையும் அந்நியர் கைகளில் ஒப்படைக்கும் அழிவுகரமான வேலைகளில் இதுவும் ஒன்று. இந்தியாவின் கைகளுக்கு பல்வேறு துறைகள் சென்று கொண்டிருக்கின்றன. இந்தியா தனது பிராந்திய மேலாதிக்க நோக்கங்களை அடைய அதட்டி. மிரட்ட இப் பொருளாதாரப் பிடிகளே அடிப்படைகளாக அமையப் போகும் ஆபத்தை யார் தான் உணரப் போகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 ஏகஸ்ட் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 60

பட்டம் பெற்றும் வேலை பெற முடியாத பட்டதாரிகள் மட்டக் களப்பில் மறியல் போராட்டம் செய்வதை முதலாவது படத்திலும், தனியார் மயத்தால் உள்நாட்டு தொழிற்சாலைகள் மூடப்படுவதை எதிர்த்து கொழும்பில், தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



# இலங்கையில் இடம்பிடிக்க யப்பான் - இந்தியா போட்டி

அண்மைக் காலமாக யப்பான் இலங்கையின் சமாதான விவகாரத்தில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. அதன் உச்சமாக கடந்த யூன் மாதத்தில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை டோக்கியோவில் நடாத்தி இலங்கை எதிர்பார்த்ததிற்கும் மேலான நிதி உதவியைப் பெற்றும் கொடுத்திருக்கிறது. இவ்வாறு யப்பான் வழமையான அக்கறையை விடவும் கூடுதல் கவனம் கவனம் எடுத்து நிற்பதன் பின்னணி என்ன? அதில் பெரும் இரகசியம் இல்லை. அதாவது ஏற்கனவே யப்பான் இலங்கையின் பொருளாதார வர்த்தகத் துறைகளில் பெரும்பங்கை வகித்து வருகின்றது. ஆனால் அண்மைய வருடங்களில் இந்தியா இலங்கை மீதான பொருளாதார வர்த்தகத் துறைகளில் ஒருவகை மிரட்டல் மூலம் புகுந்து வருகின்றது. இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவின் இடம்பிடித்தலுக்கு அதிக வாய்ப்பை வழங்கியது. புடவை முதல் கடதாசி வரையான நூற்றுக் கணக்கான இறக்குமதிகளின் இடத்தை இந்தியா பிடித்து வருகின்றது. மேலதிகமாக இப்போது பெற்றோலிய விநியோகம் விற்பனையையும் தனது கைகளுக்கு இந்தியா எடுத்துள்ளது. மேலும் வங்கிக் கடன்களுக்கு ஊடாகத் தமது விலைப்படுத்த முடியாத பொருட்களை இலங்கைக்குள் திணித்துக் கொள்வதில் இந்திய வர்த்தகப் புள்ளிகள் தமது மூளைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த இந்திய மூளைகள் தான் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பொருட்கள் எவ்வித தங்கு தடையின்றி இலங்கைக்குள் வரவும் அதேவேளை இலங்கைப் பொருட்கள் இந்தியாவிற்குள் நுளையாதவாறும் வரையறை செய்து கொண்டனர் என்பது கவனத்திற்குரியதாகும்.

இவ்வாறு இந்தியா இலங்கையில் வேகமாக இடம் பிடித்து வருவதைக் கண்டு அச்சமுற்ற யப்பான் தனது இடத்தை மேலும் வலுப்படுத்தி விஸ்தரித்துக் கொள்ள சமாதான சூழலின் ஊடே முன்வந்து செயலாற்றி வருகிறது. யப்பான் ஜே.ஆர், பிரேமதாசா காலத்தில் இலங்கை பல்வேறு உதவிகளை நிதியாகவும் திட்டங்களாகவும் அபிவிருத்தி என்ற பெயரில் வழங்கியதுடன் அதற்கான நீண்ட குறுகிய கால வட்டிகளையும் பெற்றுக்கொண்டது. அத்துடன் தமது நாட்டில் பாவனையில் இருந்து கழிக்கப்பட்ட வாகனங்களை மறுசீரமைப்புச் செய்து இலங்கைக்குள் வருடாவருடம் லட்சக்கணக்கில் அனுப்பி பணம் பண்ணி வருகிறது. அத்துடன் அவ் வாகனங்களுக்கான உதிரிப்பாக வர்த்தகத்தில் யப்பானியக் கம்பனிகள் கொள்ளை லாபம் சம்பாதித்தும் வருகின்றன.

இந்நிலையை மேலும் விரிவுபடுத்தவும் வடக்கு கிழக்கில் கால் பதிக்கவும் யப்பான் சமாதானம் ஏற்படுவதை அதிகமாக விரும்புகிறது. வடக்கு கிழக்கில் தனது மூலதன முதலீடுகளுக்குரிய திட்டங்களை வகுத்து நிற்பதுடன் மலையகத்தில் மேல்கொத்மலை நீர் மின்சார உற்பத்தியை உருவாக்க நிற்கிறது. அதனைத் தொடர்ந்து மலையகத்தில் புடவை, ரப்பர் போன்ற உற்பத்தி தொழிற்சாலைகளை தோற்றுவிப்பதற்கும் தயாராகி வருகின்றது. அவ்வாறே தெற்கில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் மூலதன முதலீடுகளை இடுவதற்கு யப்பான் செயற்பட்டு வருகின்றது.

யப்பானின் இத்தகைய முயற்சிகளுக்கு அமெரிக்கா முழு ஆசீர்வாதம் வழங்கி நிற்கிறது. இந்தியாவை அமர்த்தி வைத்திருப்பதற்கு ஆசியப் பிராந்தியத்தில் யப்பான் நம்பிக்கைக்குரிய நாடாக அமெரிக்காவிற்கு இருந்து வருகிறது. அதேவேளை தென் ஆசியாவிந் பிராந்திய பெருவல்லரசாக அரசோச்சவே இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்கள் முயன்று வருகிறார்கள்.

மேற்கூறிய அடிப்படைகளில் இந்தியாவும் யப்பானும் தமது போட்டியை மேலும் வலுப்படுத்தி விஸ்தரித்து வருகின்றன. இதற்கு இலங்கையின் ஆளும் தரப்பினர் யாரும் வரலாம் போகலாம் எதையும் செய்யலாம் என்றவாறு யப்பானின் வரவிற்கும் இந்தியாவின் ஊடுருவல்களுக்கும் ஆமாம் போட்டு வருகின்றனர். விபச்சார விடுதி நடத்துவோருக்குப் பணம் மட்டுமே முக்கியம் என்பது போல இலங்கையின் ஆளும் வர்க்கத்தினருக்கு தமது வாழ்வும் வசதியும் ஆளும் நிலையும் சொத்து சுக போகங்களும் கிடைத்தால் போதுமானதாகும். யப்பான், இந்தியா, அமெரிக்கா மேற்குநாடுகள் எவரும் வந்து எவ்வாறும் சுரண்டிக் கொள்ளையிட்டு மக்களைச் சூறையாடிச் சென்றாலும் இக் கனவான்கள் சீமாட்டிகளுக்கு துளியளவேனும் கவலை கிடையாது. நாடும் முழு மக்களும் அவலத்திற்குள் தள்ளப்படுவார்கள்.

# 1953 ஹர்த்தாலின் 50வது ஆண்டு நினைவு

## படிப்பினை பெற்று புதிய பாதையில் செல்வோம்

இலங்கையின் அரச நடவடிக்கைகளை முற்றாக நிலைகுலைய வைத்த 1953ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் திகதியன்று நடைபெற்ற ஹர்த்தால் போராட்டம் இலங்கை மக்களின் வெகுஜனப் போராட்டங்களில் முதன்மையானதாகும். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, புரட்சிகர சமசமாஜ கட்சி என்பனவற்றின் வழிகாட்டலில் இவ் ஹர்த்தால் நடைபெற்றது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கும் உணவு மானியங்கள் இரத்து செய்யப்பட்டமைக்கும் எதிராக மக்கள் பகிஷ்கரிப்புகள் என்பனவற்றில் ஈடுபட்டனர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நாட்டிற்குள் அமைச்சரவை கூட்டத்தை நடத்த முடியாத டட்லிசேன நாயக்க தலைமையிலான ஐ.தே.கட்சி அரசாங்கம்கொழும்பு துறைமுகத்திற்கு வெளியிலுள்ள கடற்பரப்பில் எச்.எம்.எஸ். நியூபவுண் லாந்து என்ற கப்பலில் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு மிகவும் மோசமான பொலிஸ், இராணுவ தாக்குதல் நடத்தப்பட்டே அப்போராட்டம் நசுக்கப்பட்டது. பலர் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர். சிறை பிடிக்கப்பட்டனர்.

அப்போராட்டத்தை அடுத்தக் கட்டத்திற்கு முன்னெடுத்து மக்கள் புரட்சியை முன்னெடுப்பதிலோ, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதிலோ அக்கறையும் தயாரிப்பும் இல்லாமல் குறிப்பிட்ட இடதுசாரி கட்சிகள் அப்போராட்டத்தை முன்னெடுத்ததால் தோல்வியே ஏற்பட்டது. அதாவது ஐ.தே.கட்சி அரசாங்கம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.


அப்போராட்டத்தில் வெளிப்பட்ட மக்களின் எதிர்ப்புணர்வை மூலதனமாக்கிய எஸ்.டபிள்யூ ஆர்.டி பண்டார நாயக்கா தலைமையிலான சுதந்திரக் கட்சி 1956 தேர்தலில் வெற்றி பெற்றது. கம்யூனிஸ்ட் - சமசமாஜக்கட்சிகள் எதிர்க்கட்சிகளாயின.

இதனால் இலங்கையின் வரலாற்றில் இடதுசாரிகள் இரண்டாவது சந்தர்ப்பத்தையும் தவறவிட்டனர் எனலாம். 1947ம் ஆண்டு இடதுசாரிகள் கூட்டரசாங்கமொன்றை ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருந்தபோதும் அதனை தவறவிட்டனர். 1953 ஹர்த்தாலுக்குப் பிறகு தூர நோக்குடன் செயற்படாததால் இரண்டாவது முறையும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதைத் தவறவிட்டனர்.

1953 இற்கு பிறகு வருடாவருடம் ஹர்த்தால் போராட்டத்தை நினைவு கூரும் இடதுசாரிகள் அதிலிருந்து பாடத்தைக் கற்றுக்கொண்டதாக தெரியவில்லை. இடதுசாரிகளின் கடந்த கால சாதனையாக ஹர்த்தால் போராட்டத்தை எடுத்துக்காட்டி பெருமைப் படுவதுடன் திருப்தியடை கின்றனர்.

1976ம் ஆண்டு சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான கூட்டரசாங்கத்தி லிருந்து வெளியேற்றப்பட்ட சமசமாஜக்கட்சி பொது வேலைநிறுத்தமொன்றுக்கு அழைப்பு விடுத்து தோல்வி கண்டது. அதாவது வேலைநிறுத்தப் போராட்டம் முறியடிக்கப்பட்டது.

1980 யூலையில் பொது வேலை நிறுத்தத்தில் இறங்கும்படி இடதுசாரி தொழிற்சங்கங்கள் விட்ட அழைப்பை ஏற்று வேலை நிறுத்தம் செய்த ஒரு லட்சம் பேர் தொழில் இழந்தனர். அதில் பாதிக்கப்பட்ட பலர் இன்னும் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.



*ஹர்த்தாலின் மக்கள் எழுச்சியைக் கண்டு அஞ்சிய டட்லி தலைமையிலான யூ.என்.பி. ஆட்சியின் அன்றைய அமைச்சரவை தரையில் கூட்டம் நடத்த முடியாது மேற்படி கப்பலிலேயே தனது கூட்டத்தை நடாத்தியது.*

1953 ஹர்தாலில் பங்கெடுத்த இலங்கை மக்களின் துணிவு அர்ப்பணிப்பு என்பவற்றிலிருந்து பாடங்களை கற்றும் மக்கள் புரட்சியை முன்னெடுப்பது பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஹர்த்தால் போராட்டத்தின் 50வது ஆண்டு நிறைவை நினைவு கூருகின்ற இவ்வேளையில் அப் போராட்டத்தில் முன்னின்று பங்கெடுத்த அனைவரையும், மதிப்பதும் கொல்லப்பட்டவர்களை நினைவு கூருவதும் எவ்வளவுக்கு எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு அப் போராட்டத்திலிருந்து பாடங் களை படித்து மக்களை அணி திரட்டி, மக்கள் அதிகாரத்தை நிலை நாட்ட சரியான வேலைத்திட்டங் களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொண்டு புதிய பாதையில் முன்னேறுவதும் முக்கியமாகும்.

# சிறிலங்கா சு.க.- ஜே.வி.பி. கூட்டு

## மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றாது

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. ஐக்கிய முன்னணி பற்றி மிகவும் பரபரப்பாக பேசப்பட்டபோதும் அது சாத்தியமானதாகத் தெரியவில்லை. ரணில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் நோர்வேயின் மத்தியஸ்த்தம், அதிகாரப்பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு என்பனவற்றை ஜே.வி.பி. முற்றாகவே நிராகரிப்பதால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாட்டுடன் ஒருமைப்பாடு ஏற்பட வழியில்லை. அதனால் பொதுஜன முன்னணியின் தலைமை கட்சியான சுதந்திரக்கட்சி இக்கட்டான நிலையில் விடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. கூட்டு பற்றி பேச்சுவார்த்தைகள் வருடக்கணக்கில் நடைபெற்று வருகின்றன. பொது உடன்பாட்டிற்கு வருவதற்கான வேலைத்திட்டம் அமைப்பதிலேயே சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதாவது நாட்டின் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகையில் அவ் இரண்டு கட்சிகளுக்கும் பாரிய முரண்பாடு நிலவுகிறது. யுத்தத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும். எந்தவொரு அதிகாரப்பரவலாக்கலும் நாட்டுப் பிரிவினைக்கே இட்டுச்செல்லும் என்றே ஜே.வி.பி. கூறிவருகிறது.

குறைந்த பட்ச அதிகார பரவலாக்கலின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடாக வெளிப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு பாரியவித்தியாசத்தைக் கொண்ட இரண்டு கட்சிகளும் கூட்டணி அமைக்கப்போவதாக கூறிக் கொண்டிருப்பதும் கூட ஐ.தே.கட்சிக்கு எதிரான அபிப்பிராயத்தை வளர்ப்பதற்கான தந்திரோபாய ரீதியான வேலையாக இருக்கலாம் என்றும் பேசப்படுகிறது. தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பும் இந்திய மேலாதிக்க சதியின் நிகழ்ச்சி நிரலுடனேயே ஜே.வி.பி. செயற்பட்டுவருகிறது. அதனால் அமெரிக்க எதிர்ப்பைக் காட்டிக் கொண்டு புலிகளுக்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் எதிர்ப்பை மக்கள் மத்தியில் கட்டி வளர்க்கும் நோக்கில் ஜே.வி.பி. செயற்படுகிறது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஐ.தே.முவின் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளை விமர்சித்து குற்றஞ்சாட்டி வருகிறது.

ஆகவே ஐ.தே.கட்சியை எதிர்ப்பதிலும் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளை குழப்ப வேண்டுமென்பதிலும் சுதந்திரக்கட்சி தலைமைக்கும் ஜே.வி.பி.க்கும் ஒருமைப்பாடு காணப்படுகிறது. தற்போதைய தேசிய, சர்வதேச நிலைமைகளில் மேற்படி அடிப்படைகள் மட்டும் அரசியல் ரீதியாக ஐக்கியப்பட்டு செயற்படுவதற்கு போதுமானவை அல்ல. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பதிலாக யுத்தத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதை தேசிய சர்வதேச நிலைமைகள் அங்கீகரிப்பதாக இல்லை.

இந்த நிலைப்பாடுகளுடன் சுதந்திரக் கட்சியில் பாரம்பரிய அணுகுமுறைகளை கொண்டவர்கள் ஜே.வி.பி.யுடனான ஐக்கியத்தை எதிர்க்கின்றனர்.

இந்நிலையில் இரண்டு கட்சிகளுக்கிடையேயான ஐக்கியம் சாத்தியப்படப் போவதில்லை.

இரண்டு கட்சிகளிடையே இருக்கும் ஒவ்வாமை ஒருபுறமிருக்க அக்கூட்டணி அமையுமானாலும் அது எந்தளவு இலங்கையின் எல்லா மக்களுடைய அபிலாஷைகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்பது கேள்விக்குறியே. தேசிய இனங்களின் உரிமைகளை உறுதி செய்வதன் அடிப்படையில் அவற்றினிடையே ஐக்கியம் கட்டிவளர்க்கப்படுவது பற்றியும், ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் பற்றியும் நேர்மையாகக் கவனம் செலுத்தாத தேசியப்பொருளாதாரம் பற்றி அக்கறை கொள்ளாத அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் இந்திய மேலாதிக்கத்துக்கும் எதிரான போராட்டங்களை அடிப்படையாக கொள்ளாத எந்தவொரு வேலைத்திட்டமும் மாற்று வேலைத்திட்டமாக அமையாது. அவ்வேலைத்திட்டத்தை கொண்டிராத சக்திகள் மாற்று அரசியல் சக்திகளாக இருக்கமாட்டா.

## இடைக்கால

1ம் பக்க தொடர்ச்சி..

குள் உள்ள சக்திகளையும் பின்னால் இருந்து உசுப்பி விட்டு வருகிறது.

அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தைத் தோற்றுவிப்பதில் இழுத்தடிப்புச் செய்து கொண்டே ஆயுதக் கொள்வனவிற்காக பாதுகாப்பு அமைச்சர், கடற்படைத்தளபதி மற்றும் உயர்நிலை அதிகாரிகளை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தது. இவை அரசியல் தீர்வையும் சமாதானத்தையும் எதிர்பார்த்து நிற்கும் அனைத்து மக்களுக்கும் சந்தேகங்களையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி வருகிறது. அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தை நேர்மையாகவே ஏற்படுத்த முற்படுகிறதா? அன்றி ஜனாதிபதித் தேர்தல் வரை சகலதையும் இழுத்தடித்துச் சென்று இறுதி யுத்தம் என்ற ஒன்றுக்குத் தயாராகின்றதா என்ற கேள்வி எழவே செய்கிறது.

இந்நிலையில் வடக்கு கிழக்கு மக்களினது எதிர்பார்ப்புகள் நிறைவேற இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தோற்றுவிக்கப்படுவது அவசியமானதாகும். அதனை உருவாக்கும் போது அரசாங்கம் ஆகக்குறைந்ததும் தனது பேரினவாதப்பிடி அதிகளவிற்கு இருப்பதையுமே வற்புறுத்தி நிற்கவே விரும்புகிறது. இதனை எவ்வகையிலும் ஏற்க முடியாது. அதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கம் இறுதியான அரசியல் தீர்வில் வற்புறுத்தி நிற்கக் கூடியவாறான ஆகக் கூடிய அம்சங்களையும் கோரிக்கைகளையும் வற்புறுத்திக் கொள்ளக்கூடாது. இன்றைய வடக்குக் கிழக்கின் தேவை களையும் மக்களின் எதிர்பார்ப்புக் களையும் நிறைவு செய்யக் கூடியதான ஜனநாயமானதும் நியாயபூர்வமானதுமான இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பைத் தோற்று வித்துக்கொள்வதே நியாயமானதாகும். அத்தகைய நிலைக்கு இருதரப்பும் விட்டுக்கொடுப்புகளுடன் வரவேண்டும் என்பதே மக்களது விருப்பமாகும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

படிப்பகம்